# ஆங்கில அரசாட்சி.

## ஒரு புதிய தமிழ் நாடகம்.


தஞ்சை ஸெண்ட்பீடர்ஸ் காலேஜில்

உதவி போதகாசிரியராயிருந்த

T. K. ஸ்ரீநிவாசய்யங்கார்

எழுதியது.



சென்னை

கொரனேஷன் பப்ளிஷிங் ஹவுஸ்.

1913

சக்ரவர்த்தித் திருமகன் திருவடி துணை.

# முகவுரை.

"குலமகட்குத் தெய்வங் கொழுநனே மன்ற புதல்வர்க்குத் தந்தையுந் தாயும்—அறவோர்க் கடிகளே தெய்வ மனைவோர்க்குந் தெய்வம் இலைமுகப் பைம்பூ ணிறை" என்னு மிவ்வினிய செய்யுள், நீதி நெறி விளக்கம் என்னும் நூல் போதிக்கும் சிறந்த தொரு போதனையாம். இதில் அரசனை எல்லோருக்கும் பிரத்தியட்ச தெய்வமென்று வற்புறுகிறது. தெய்வம் என்பதும் கடவுள் என்பதும் ஒரு பொருட் சொற்களேயாம். தெய்வம் என்பது ஆதியந்த மில்லாதது ஒரு வஸ்து என்றும், அது சகல உலகங்களுக்கும் காரணபூதமென்றும் அறிவிற் சிறந்த பெரியோர் கூறுவர். அப்படிப்பட்ட வஸ்துவைத் தொழுது வழிபடல் வேண்டு மென்பதும் வழிபடுதற்குரிய மார்க்கங்களைப் போதிப்பதும் அவ்வாறு எல்லோரும் வழிபட்டு வருவதும் பிரத்தியட்சம். "கடவுளை நம்பினோர் கைவிடப்படார்" "வேண்டுதல் வேண்டாமை யிலானடி சேர்ந்தார்க் கியாண்டு மிடும்பையில" என்னும் அமுதத் திருவாக்குகளால் கடவுளை நம்பவேண்டு மென்பதும் நம்பினோர் கை விடப்படா ரென்பதும் அவனடி சேர்ந்தார்க்கெங்கும் திங்கு நேரிடாதென்பதும் நன்கு புலப்படுகின்றன. அப்படிப்பட்ட தெய்வத்தைப் பார்ப்பதற்கும் பார்த்து வேண்டிய வற்றைக் கேட்பதற்கும் நம் போன்றவர்கட்குக் கூடாமையேயாம். ஆனால் அந்தத் தெய்வத்திற்குச் சமானமாக அரசனை யொப்பிடப்பட் டிருக்கிறது. ஏனெனில், அரசனிடம் அன்புடையார்க்கும் அவனையண்டினோருக்கும் அவன் ஆக்ஞைப்படி நடப்போருக்கும் என்றும் குறைவேற் படுவதில்லை. மேலும், அரசனை நாம் பார்க்கவும்

பார்த்து வேண்டிய வற்றைக் கேட்டுப் பெறவுங் கூடு மாகையால் அரசன் பிரத்தியட்ச தெய்வமாகின்றான். அந்த பிரத்தியக்ஷ தெய்வத்தினிடம் அன்பு செலுத்த வும் அவனிட்ட சட்டத்திற் குட்பட்டு நடக்கவும் நம் குழந்தைகள் சிறுவயது முதற் கொண்டு பழகுவது அத் தியாவசியமாகுமல்லவா? அதற்கு இச் சிறு புத்தகம் சாதகமாகு மென்று கருதி என் சிற்றறிவுக் கெட்டிய வரையிலெழுதி முடித்தனன். எனக்குத் தமிழில் நல்ல பயிற்சியில்லையாதலால் என் வேண்டு கோளுக்கிசைந்து இச்சிறு புத்தகத்தில் சேர்க்க வேண்டிய வற்றைச் சேர் த்து விலக்க வேண்டிய வற்றை விலக்கி அச்சிடு மாறு உபகரித்த எமது நண்பர்—வரகவி—திரு—அ—சுப்பிர மணிய பாரதியாருக்கு என் மனப்பூர்வமான வந்தன மளிக்கின்றனன். இச்சிறு நூலில் அடங்கிய விஷயம், தஞ்சை இராஜா மடத்து டிஸ்டிரிக்ட் போர்டிங் ஸ்கூ லில் நான் உதவிப் போத காசிரியராயிருந்த காலத்தில், மாட்சிமைதங்கிய மகாராஜா ஜார்ஜ் அவர்கள் டில்லியில் மகுடம் புனைந்து கொண்ட திருநாளில் அந்தப் பாடசாலைத் தலைமை உபாத்தியாயர் R. நாராயணசாமி வாண்டயார் அவர்கள் பெரும் முயற்சியால் பிள்ளைகளைக் கொண்டு ஒரு நாடகமாக நடத்தப் பட்டது. அவர் எம்மீது கொண்டுள்ள அன்பு, என்றும் மறக்கத் தக்க தன்று. இதில் குற்றங்குறைகள் காணப்படின் பொறு த்தருள வேண்டுகின்றனன்.

T. K. ஸ்ரீநிவாசவன்.

வித்வான்—ம. இராஜகோபால பிள்ளை யவர்கள் இயற்றிய சாற்றுக்கவி.

**கட்டளைக் கலித்துறை.**

தண்ணுங் கிலவர சாட்சி யெனுஞ்சற் சரிதமதைப்
பண்ணு ரொருசிறு நாடகப் பான்மையிற் பாலர்பலர்
உண்ணு டியமகிழ் வாற்கற் றொழுக உகந்தளித்தான்
ஒண்ணு ருறுஞ்சீனி வாசமா லென்றுய ருத்தமனே.

# PREFACE.

That all of us are benefitted by the British Rule is a fact beyond dispute. We, as a matter of fact, feel the benefits in every day life although it is given to a few only to give expression to the feeling in a dramatic form. We can realise how indissolubly our prosperity is connected with the British Raj, but to inculcate this to the youngsters, the future citizens of Madras, is an arduous task, none the less a sacred duty.

The dramatic form serves the double purpose of giving recreation to the boys and striking the theme home to them.

We wish such a labour of love will be appreciated and utilised in the Elementary Schools.

SREENIVASA RAGHAVAN.





உ

கடவுள் துணை.

# ஆங்கில அரசாட்சி.

## அங்கம் 1.

### காட்சி 1.

3634

இடம்.—இராஜாமடம்.

காலம்.—காலை.

பாத்திரங்கள்.—பாடசாலைப் பிள்ளைகளிற் சிலர்—
சீனதேச யாத்திரிகர் நால்வர்.

**பிள்ளைகள் பிரவேசிக்கிறார்கள்.**

**கடவுள் வணக்கம்.**

வந்தனங்கள் தந்தோம் மகிழ்ந்து சிறுவர் நாங்கள்
ஈரேழு லோகமும் பூராக வியாபித்துக்
கொண்டிருக்கும் பரஞ்சோதிக்கும்
ஆ! ஆ!! அருள் நிறைந்த திருவடிக்கும் (வந்த)

**மன்னர் வணக்கம்.**

அகில மெல்லா வற்றையும் மகிமையுடனாளும்
ஐந்தாவது ஜார்ஜ் துரைக்கும்
ஆ! ஆ!! அன்புள்ள க்வீன் மேரிக்கும் (வந்த)

**சபை வணக்கம்.**

வந்தனங்கள் தந்தோம் மகிழ்ச்சி யுடனிங்கு
வந்திருக்கும் இன்ஸ்பெக்டருக்கும்
ஆ! ஆ!! மற்றுமுள்ள பெரியோருக்கும் (வந்த)

1-வது பிள்ளை.—ராமசாமி! இன்று இனிஸ்பெக்டர் வருவது உண்மை தானா?

2-வது பிள்ளை.—என்னடா உண்மை தானா என்கின்ருய்? பைத்தியமே நேற்று எட்மாஸ்டரிடமிருந்து நம் வகுப்புகளுக் கெல்லாம் ஒரு ஸர்குலர் வரவில்லையா?

3-வது பிள்ளை.—எட்டு மணிக்கு வருகின்ருரென்றல்லவா ஸர்குலர் வந்தது. இப்போது மணி எட்டரையாகப் போகின்றதே. அதனால் தான் அவன் கேட்கின்ருன்.

2-வது பிள்ளை.—வரும் சமயமாயிருக்கும்.

4-வது பிள்ளை.—இனிஸ்பெக்டர் எந்தப் பாடத்தில் கேட்பாரோ தெரியவில்லை.

5-வது பிள்ளை.—ஓநாயையும் நாரையையும் பற்றிய ஆக்ஷன் ஸாங் ஒன்று உபாத்தியாயர் சொல்லிக் கொடுத்தாரே, அது கேட்பாரென்று சிலர் சொல்லிக் கொள்ளக் கேட்டேன்.

3-வது பிள்ளை.—கிருஷ்ணு! அந்தப் பாட்டை ஒருமுறை சொல்லு கேட்கின்றேன்; எனக்குக் கொஞ்சம் மறதியா யிருக்கிறது.

[கிருஷ்ணன் பாடுகிருன்.]

ஓநாயும் நாரையும்.

(ராகம் பார்வீ நோட். மெட்டு ஸ்ரீ ராமச்சந்திரனே.)

**ஓநாய்.** இந்த—ஆட்டுக் குட்டியதனை ஆத்திரமாய்த் தின்றதாலே
மாட்டிக் கொண்ட தோரெலும் பையையோ
தாட்டீக மாகவிதை எடுத்தாலே
கேட்ட தெல்லாங் கொடுப்பே னவர்க்கே.
(இந்த—ஆ—ஐயையோ)

நாரை. நான்–ஆசை பட்டதெல்லா மளிப்பதா யுரைத்தாலே
அலகிருலெடுப்பேன் பார்-பார்-பார்
காசு கொடாமல் கஷ்டம் நீங்குமோ
நேசம் நீ கொண்டாடினால் போதுமோ. (நான் ஆசை-பார்)

ஓநாய். நான் காசைக்கொடுத்து உன்றன் காலிலே
விழுகின்றேன்
கஷ்டத்திலிருந் தென்னைக் கா–கா–கா
நான் மோசஞ் செய்வேனென்று எண்ணாதே
எமபாசம் வந்திருக்குது இப்போதே. (நான்-காசை-கா)

நாரை. நீ சொல்வது உண்மையானால் சீக்கிரமாக உன்றன்
சுந்தரவாயை யங்காந்து கொள்-கொள்-கொள்
பற்களிற் கொஞ்சமும் படாமலே
பாரிதோ எடுத்தேன் பகட்டாமலே. (நீ சொல்வது-கொள்)

நாரை. எலும்பை எடுப்பதற்கு ஈவேனென்று சொன்ன
இனமெங்கே யிப்போது தா–தா–தா
தாராவிடி லுனக்குத் தகாதே
தப்பு சால்சாபு இங்குச் செல்லாதே. (எலும்பை- தா)

ஓநாய். உன்றன் அலகு என்றன் கண்டத்தி லிருந்தப்போ
தூரக்கக் கடியாததே யினும்–இனும்
மந்த புத்தியுள்ள மூடமே
மதிகெட்டு நீ என்முன்னே நில்லாதே. (உன்றன்-இனும்)

3–வது பிள்ளை.—தெரிந்து கொண்டேன். தெரிந்து கொண்டேன். ஓரிடம் மறதியாயிருந்தது. அதற்காகத்தான் கேட்டேன்.

4–வது பிள்ளை.—நன்றி யொருவர்க்கு—என்று ஆரம்பிக்குமே அந்த ஆக்ஷன் ஸாங் கூடக் கேட்பார்களாம். அது தெரியுமா ?

3–வது பிள்ளை.—எங்கே சொல் பார்ப்போம்.

4–வது பிள்ளை.—சொல்லுகின்றேன் கேள்.

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

(மெட்டு-சீரார் சபையில் வாழும் சபையோர்களே வந்தனம்.)

நன்றி யொருவர்க்கு நட்பாய்ப் புரிந்தோர்க்கு
நலம் வீணென்று நாம் எண்ணலாகாது
இதற்கோர் சிறுகதை இயம்புகின்றேன் கேளாய்
எறும்பு நீரோடையில் இறங்கி நீருந்தையில்
சறுக்கியதில் விழுந்து தத்தளிப் பதையொரு
சாதிப்புறாக் கண்டதைத் தற்காத்திடக் கருதி
சிறியகிளை முறித்துச் சீக்கிரத்தில் முன்னிடத்
திரமாயதின் மீதேறிக் கரைவந்து சேர்ந்தது
அந்நேரம் ஒருவேடன் அந்தப் புறாப்பிடிக்க
அருகில் வலைவிரித்து அதையவன் பிடிக்கையில்
எறும்பு பார்த் திதைக்காக்க எண்ணமிட் டோடிவந்து
அவனது குதிகாலில் அழுந்தக் கடித்தது
அதைப் பொறாமல் வேடன் அலறி நின்று குதித்தான்
அவ்வோசை கேட்டுப் புறா அப்போதோடிப்போயிற்றே
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலே தான் சுமந்து தான் தருதலாலே
ஆகையால் நாம் ஒருவர்க்கு அன்பாய்ப் புரிந்தநன்றி
அழியா தொருகாலும் என்றறிந்து நடப்போமே.

2-வது பிள்ளை.—இதை முக்கியமாக இன்ஸ்பெக்டர் கேட்பார். இதிற் பெரிய கருத்திருக்கிறது என்று வாத்தியார் இந்தப் பாடத்தை அடிக்கடி போதித்திருக்கின்றார்.

5-வது பிள்ளை.—அர்ச்சுனா! அங்கே யார் வருகிறார் கள் பார்.

[மற்றவர்கள் பார்க்கிறார்கள்.]

4-வது பிள்ளை.—அவர்கள் யாரோ நமது தேசத்தவரா கவே தெரியவில்லையே. அவர்கள் நடையும் உடையும் பாவனையும் தோற்றமும் வேறாகவே யிருக்கின்றன.

1—வது பிள்ளை.—(எட்டிப் பார்த்து) நம்மை நோக்கித் தான் வருகிறார்கள் போலிருக்கின்றது.

[மற்றவர்களும் "ஆம்" என்கிறார்கள்.]

சீனதேச யாத்திரிகர் பிரவேசிக்கிறார்கள்.

சீனதேச யாத்திரிகன் 1.—(மற்றவனைப் பார்த்து) பாருங்கள்! இந்தக் கட்டடம் ஒரு சத்திரம்போலக் காணப் படுகிறது. இதில் நாம் இன்று தங்கியிருக்காலம் என்று நினைக்கின்றேன்.

சீன—யா 2.—ஆம், அப்படித்தான் தோன்றுகின்றது. மேலும் கட்டடம் வெகு அழகாக இருக்கின்றது. கண்ணிற்கும் மனதிற்கும் பேரானந்தந் தரும்படி புஷ்பச் செடிகளும் மலர் தரு மரங்களும் பயிராக்கப்பட்டிருக்கின்றன. இங்குத் தங்கிப் போஜனஞ் செய்து பின் செல்வது தான் சுகமென்றெண்ணுகின்றேன்.

சீன—யா 3.—நம் போன்ற யாத்திரிகர்களுக் கென்றே கட்டப்பட்ட சத்திரமாகத் தானிருக்க வேண்டும். யாத்திரிகர்களுக்கு வேண்டிய சகல, சௌகரியங்களும் நிறைந்த சத்திரம் இப்பக்கம் இது தானென்றெண்ணுகின்றேன்.

சீன—யா 4.—வாருங்கள்; அங்கு நின்று வார்த்தையாடிக் கொண்டிருக்கும் பிள்ளைகளைக் கேட்டுத் தெரிந்து கொள்வோம்.

[பிள்ளைகளிடம் செல்கிறார்கள்]

சீனர்.—பிள்ளைகாள்! நீங்கள் யார், எந்த ஊரிருப்பது, இங்கே இருக்க வேண்டிய காரண மென்ன?

பிள்ளைகள்.—தற்காலம் நாங்கள் எல்லோரும் இவ்வூர் வாசிகள் தான். ராஜாமடம் என்னும் இவ்வூரில் மகாராஜாவினுடைய அன்னத்தைப்புசித்து அவர்களுடைய போர்டிங் ஸ்கூலில் படித்து வரும் பிள்ளைகள் நாங்கள்.

சீனர்.—பிள்ளைகாள்! இது சத்திரந்தானே?

[ஒருவன் நான் முன்பே சொல்லவில்லையா என்கிறான் மற்றவர்களை நோக்கி.]

இதன் பெயரென்ன? இதை எதற்காகக் கட்டியிருக்கின்றனர்?

பிள்ளைகள்.—சொல்லுகின்றோம் தயைசெய்து கேளுங்கள்.

[பிள்ளைகள் பாடுகிறார்கள்.]

திருப்புகழ் சந்தம்.

திருமகள்வாச வனப்புளதும் நல, நிலவள நீர்வள மிக்குளதும் எழில், சிரியர் பாவலர் புகழ்ந்து வரும் தஞ்சை, வள நாட்டில்—

பருமணிரத்ன பதக்கமிடும் ஒரு, எதிரிகண்டோடி ஒளித்துக் கொளத்தகு, வய மிகு மார்ப னெனும் துளசிமலர்த் திருநாமன்.—

மனதிற்கிசைந்த மனைவியரும் எங்கும், அறந்தழைத்தோங்க விரும்புநரும், மோஹ னம்பிகையாரெனு நற்பெயரும் பூண்ட விறைமாது.—

தனமொரு போது நிலை யிலதால் என்றும், அறஞ்செய வே நசை மிகவுளதால் பெருந், தவமுடையோர் தங்கவிட முளதாய ராஜா மடந்தன்னை—

மிகப் பொலிவாக வியற்றியதில் வெகு, ஜனத்திரள் கூடி சுகத்துடனே தங்க, இடைக்கிடை வீடுகள் சோலை தடங்களும் பலவாறே—

தகப்பனுந்தாயு மிழந்த சிறுர்களுந், தங்கிப் பயில விடங் களு மற்றுங், தளர்ந்தோர் குருடர் ஊமைகள் முடவர்கள் முறையோடே—

அறம்பல வாகப்பெற்று மகிழ்ந்து, மனமுவப்போடு வழுத்து மொலியுடன், மறையவர்கூடி வழுத்து மொலிவிண் முகடோடி—

ஜெயஜெய கோஷமுழக் குடனே என்றும், விளங்க விழைத்த அனைதனையே மன, முவப்பொடு கூடிக் களிப்புட னே நாம் பணிவாமே.

[ஒருவன் கூறுகிறுன்.]

நீர் வளம் நிலவளம் அமையப் பெற்றதும், அநேக வித்துவ சிரோமணிகளால் துதி செய்யப்பட்டதும், மிகப் பிரசித்தி யடைந்தது மான தஞ்சைமா நகரத் தின் கண் வசித்து வந்த துளசிமகாராஜன் அருமை மனையாட்டி தமது பேரால் மோஹனும்பாள் புர மென்று சொல்லப்படும் இந்த ராஜாமடத்தில் இச் சத்திரத்தைக் கட்டுவித்தனர். இதில் வயோதிகர், கூன், குருடு, செவிடு, முடம் இவர்களுக்கும், பெற்றோரை யிழந்த எம் போன்ற பிள்ளைகட்கும் அன்னமிட்டு வருகின்றார்கள். எங்களுக்கு ஒரு பள்ளிக்கூடம் ஏற் படுத்தி யிருக்கின்றனர். இப்பள்ளிக்கூடத்தில் நாங்

மகாமகோபாத்தியாய

டாக்டர். உ. வே. சாமிநாதையர்

நூல் நிலையம்

களே யன்றி இன்னும் அநேக பிள்ளைகள் படித்து வருகின்றனர். அந்தத் தருமப் பிரபுவால் ஏற்படுத்தப் பட்ட இந்தத் தருமத்தை ஆங்கில மன்னரும் கைவிடா மல் பாது காத்து வருகின்றனர்.

சீனர்.—ஆங்கிலேயர் யார்? அவர்கட்குட்பட்டதா இத் தேசம்?

1-வது பிள்ளை.—இங்கிலாந்து தேசத்தவர் ஆங்கிலேய ரென்று சொல்லப் படுகிறார்கள். அவர்களால் இங்கிலாந்து தேசமல்லது எமது இந்தியாவும் ஆளப்பட்டு வருகின்றது. மாட்சிமை தங்கிய ஜார்ஜ் என்பவர் இங்கிலாந்துக்கு அரசராயும் இந் தியாவுக்குச் சக்ரவர்த்தியாயு மிருக்கின்றனர்.

சீனர்.—சக்ரவர்த்தி யென்கிறீர்களே. அவர்கள் ஆளுகைக்குட்பட்ட ஜனசங்கியையின் கணக்கை நீவிர் அறிவீர்களா?

2-வது பிள்ளை.—ஏறக்குறைய நாற்பது கோடி ஜனங் களாவர்.

சீனர்.—அங்ஙனமாயின் இந்த பூமண்டலத்திலுள்ள ஜனசங்கையின் எவ்வளவு பாகம் சக்கரவர்த்திக் குரியதோ?

3-வது பிள்ளை.—ஐந்திலொருபாகம்.

சீனர்.—உங்கள் சக்ரவர்த்தி யவர்களின் குணாதிசயங் கள் எப்படி? குடிகள் அவர்களிடத்தில் பட்ச மாய் நடந்து வருகின்றனரா? குடிகளுக்கு வேண்டிய சௌகரியங்களை அவர்கள் கவனிக் கின்றனரா? "மன்னர்க்கழகு செங்கோன்

முறைமை" யென்பதை நீங்கள் படித்திருக்கிறீர்களல்லவா ?

2–வது பிள்ளை.—ஐயன்மீர் ! மாட்சிமைதங்கிய எமது சக்கரவர்த்தியவர்களின் பெருமையையும், அவரது குணநிசயங்களையும், அவர் அரசு செலுத்தும் திறத்தையும், அவரது அறிவின் விசாலத்தையும், ஆற்றலையும் எங்களால் எடுத்துச் சொல்லமுடியாது. ஆயிரம் நாவு படைத்த ஆதிசேஷனும் சொல்லச் சக்தியற்றவனாவன். அவர் தமது பிரஜைகளாகிய இந்தியர்களின் மீது என்றும் அன்னையைப்போல அன்பு பாராட்டி வருகின்றனர். ராஜாதிராஜனாகிய அந்த மகாப்பிரபு தாம் இந்தியர்களின் மீது கொண்ட அன்பிற் கறிகுறியாகப் பூர்வம் எமது இந்திய அரசர்களால் இராஜதானி நகரமாகக் கொள்ளப்பட்ட டில்லிமா நகரத்திற்குத் தாமே தமது மனைவியாருடன் விஜயம் செய்து யாமெல்லோரும் கண்டு களிகூரவும் உற்சவங்கொண்டாடவும் 191-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ந் தேதி தமது மகுடாபிஷேக வைபவத்தைச் செய்துகொண்டனர். அச்சமயம் அவர்கள் இந்தியப் பிரஜைகளின் க்ஷேமங் கருதி வித்தியாதான விஷயமாகக் கோடிக் கணக்கான ரூபாய் செலவிட இந்தியா கவர்ன்மெண்டாருக்கு ஆக்ஞை யிட்டனர். அவர்களைக் கொடையில் கர்ணனென்றே சொல்லவேண்டும்.

சீனர்.—பிள்ளைகாள் ! உமது மன்னரின் பெருமையைக் கேட்டு மிகவும் மகிழ்வுற்றோம். அவர்கள் கல்வியில் ஏராளமான பொருளைத் தானஞ் செய்தது

அவர்களது அறிவின் விசாலத்தை நன்கு விளக்குகின்றது. எந்தத் தேசத்திற் கல்வியறிவு பரவியிருக்கின்றதோ அந்தத் தேசமே எல்லாத் தேசங்களினும் எல்லாப் பெருமையினும் மேம்பாடடைந்திருக்குமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. அவ்வாறே எவனொருவன் கல்வியறிவைப் பெறுகின்றானோ அவனுக்கு எக்காலத்தும் எந்த விடத்தும் குறைவேற்படாது. "கல்வியினூங்கில்லைச் சிற்றுயிர்க்குற்ற துணை" என்றும் "கண்ணுடையார் என்பவர் கற்றோர், முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்றும் ஆன்றோர் கூறியுள்ள திருவாக்குகளை நீவிர் எல்லோரும் படித்திருக்கிறீர்களல்லவா? ஆகவே உமது மன்னன் அப்படிப்பட்ட கல்வியினும் சிறந்ததொரு தானம் பிரஜைகளுக்கு வேறில்லை என்பதை உணர்ந்து அதற்குப் பொருளுதவி செய்தது மிகவும் மெச்சத் தக்கதேயாம். பிள்ளைகாள்! கல்வியின் பெருமை யளவிடலரிது! அதை நீவிரெல்லோரும் பின்பு தெரிந்து கொள்வீர்கள். கொடையில் கர்ணனென்னும் ஒருவருக்கு உமது மன்னரை ஒப்பிட்டீர்களே; கர்ணன் யார்?

பிள்ளைகள்.—ஐயன்மீர்! கவனமாய்க் கேளுங்கள் தெரிவிக்கின்றோம்.

[பாடுகிறார்கள்.]

மெட்டு—மார்கழி மாதம் திருவாதிரைநாள்.

அத்தினபுரியில் அவதரித்த நல்ல
அருக்கன் மகனும்— கர்ணனைப்போல்
இத்தரை தன்னிற் பெருங்கொடை யாளர்
இருந்ததே யில்லை யையா. (1)

*ஒருநாளிரவில் அந்தண னொருவன்*
*பெருமையாய் வந்து நின்று—அவனை*
*ஆசிர்வதித்துக் கேட்பதை நினைத்து*
*அன்பொடு கொடுப்பீரென்றான்.* (2)

*அப்படியே நான் தருவேனென்று*
*ஒப்புடன் சொல்லலுமே—அந்தணன்*
*செப்பிடக்கூடாத நிறையுள்ள விறகைத்*
*தப்பாமல் தருவீரென்றான்.* (3)

*வீதிகள் தோறும் மழையின் வெள்ளத்தால்*
*விறகினைக்காணமல்—கர்ணன் தன்*
*வீட்டதை யிடித்து மரங்களை யுடைத்து*
*விரைவிற் கொடுத்தனனே.* (4)

*ஐயன்மீர்! பூர்வம் அஸ்தினபுரியில் சூரியனுடைய புதல்வன் கர்ணன் என்பவன் ஒருவனிருந்தான். அவனைப் போன்ற கொடையாளி யொருவன் இப்புவியில் இருந்ததே யில்லை. ஒரு நாள் ராத்திரிவேளையில் பிராமண னொருவன் அவனிடம் வந்து அவனை ஆசிர்வதித்து "ஐயா! நான் விரும்பிக் கேட்பதை மனமகிழ்ச்சியோடு தரவேண்டும்" என்றனன். கர்ணன் அவ்வாறே தருகின்றேன் என வாக்களித்தனன். பிராமணன் "எனக்கு இச்சமயம் ஏராளமான விறகு வேண்டியதா யிருக்கின்றது; வேறொன்றுமில்லை" யென்றான். அப்பொழுது வீதிகள் தோறும் வெள்ளம் புரண்டோடும்படியான மழை பொழிந்துகொண் டிருந்தமையால், விறகு எங்கும் கிடைக்கவில்லை. கர்ணன், உடனே தன் வீட்டையிடித்து அதிலிருந்த மரங்களை விறகாகத் தந்து அந்தணனையனுப்பினான். பார்த்தீர்களா அவன் கொடையின் விசேஷத்தை! இப்பொழுதும் ஜனங்கள்,*

"நீ கொடையில் கர்ணனே" என்று சொல்லிக் கொள்கிறார்கள். அவன் புகழ் உலகுள்ளமட்டும் அழியாததாகிறது.

சீனர்.—பிள்ளைகாள்! மெத்தச் சந்தோஷம், இந்த உலகத்தில் ஜனிக்கும் ஜீவகோடிகளுள் மானிட ஜன்மமெடுப்பது அரிது. அந்த மானிடனுக்கே இது நன்மை, இது தீமை, இது செய்யத் தக்கது, இது செய்யத்தகாதது என்ற ஒரு பகுத்தறிவுண்டு. இந்த அறிவின் விசேஷத்தால் அவன் தனக்கும் பிறருக்கும் வேண்டிய சகல நன்மைகளையும் தேடிக் கொள்கின்றான். அப்படித் தேடிக் கொள்ளவல்லவனாகிய அவன் விசேஷமாய் இவன் நல்லவன், பரோபகாரி என்னும் நற்பெயர் பெறும்படியான வழியில் நடந்து, எல்லாம் வல்ல இறைவன் திருவருளுக்குப் பாத்திரனாக முயலல் வேண்டும். அஃதின்றி, உண்டு உடுத்துக் கண் தலை தெரியாமல் திரிந்து, இவன் தீயன் பாபியென்ற கெட்ட பெயர் எடுக்கக் கூடாது. நாமெல்லோராலும் பாபி யென்று இகழப்படுவோமே என்பது உணராது திரிபவர்கள் நாய், நரி, பன்றி முதலியவற்றிற்குச் சமானமாகின்றாரன்றோ? நல்ல அரிசிச் சோறு, பரிசுத்தமான காய் கனிகளைப் புசிக்கவும் உலகத்துள்ள மற்ற பொருள்களைப் பற்றி விசாரணை செய்து விரும்பியதைத் தேடிக்கொள்ளவும் ஏற்ற ஜன்மமெடுத்த நாம் மலம், எச்சில், இறைச்சி, அழுகிய பிணம் முதலியவற்றைப் புசிக்கும் ஈன ஜந்துவை அநுசரிப்பதெனில், நமக்கு ஒரு பெரிய அறிவை அளித்த பரம குருவாகிய எல்லாம் வல்ல

கடவுளுக்குத் துரோகஞ் செய்தவர்களாகின்றோ மன்றோ? அப்படி நடப்பது பெரும் பேதமை யேயாம். எக்காலத்திலோ இவ்வுலகத்து வாழ்ந்து வந்த கர்ணனை ஏன் இப்போது புகழ்கின்றீர்கள்? ஏன் வாழ்த்துகின்றீர்கள்? உமது மன்னனை யவனுக்கு ஏன் ஒப்பிட்டுப் பேசுகின்றீர்கள்? இவற்றை நீங்கள் நன்றாய் அறிவீர்கள். கர்ணன் இறந்தும் அவன் இன்னும் இறவாமலிருக்கிறா னென்றே சொல்ல வேண்டு மல்லவா? அவன் என்றுமிருப்பான். ஆகையால் மானிடர் ஒவ் வொருவரும் நற்பெயரெடுக்கப் பாடுபடுவது தான் பெருமையைத் தரும். நல்லது சந்தோஷம்! உமது மன்னனைக் கர்ணனுக்கு ஒப்பிட்டுப் பேசி யது பெரிதும் தகும்! தகும்! ஆங்கிலேய ராஜ்யத் தில் இன்னம் ஏதாவது மகிமை யுண்டா?

1–வது பிள்ளை.—அவ்விராஜ்யத்தில் சூரியன் ஒரு பொழுதும் அஸ்தமிப்பதே யில்லை. அவன் எப் போதும் பிரகாசித்துக் கொண்டே யிருக்கின் றான்.

[சீனர் வியப்படைகின்றார்கள்.]

சீனர்.—சரி! அவ்வளவு பெரிய ராஜ்யத்தில் குடிகளுக் குண்டான நன்மைகள் எவை?

4–வது பிள்ளை.—அவற்றைச் சொல்லப் போனால் வள ரும். இருந்தாலும் கூடியமட்டில் சுருக்கமாய்ச் சொல்லுகின்றோம் கவனியுங்கள். தேசத்தின் காப்புக்குச் சேனைகள் வைக்கப்பட்டிருக்கின்றன. அதனால் பகையரசர் பயம் எங்களுக்கு இல்லவே யில்லை. தேகத்தின் காப்புக்கும் பொருள் ரக்ஷ

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRAR
...MMIYUR, MADRAS-41

ணைக்கும் நியாயஸ்தலங்களையும் கச்சேரிகளையும், தேக ஆரோக்கியத்திற்குத் தர்மவைத்திய சாலைகளையும், ரெயில் முதலிய போக்கு வரவு சாதனங்களையும், அஞ்ஞானத்தைப் போக்க வித்தியா சாலைகளையும் பயிர் பச்சை ஓங்க ஏரி, குளம், அணை, கால்வாய் முதலியனவைகளையும், சுகமான வாழ்க்கைக் கேற்ற மற்ற சகல வசதிகளையும் அமைத்திருக்கின்றனர். இன்னும் கேளுங்கள்; எமது சக்கரவர்த்தியின் மகிமையைக் கூறுகின்றோம்.

பாடுகின்றார்கள்.

மாட்சிமை தங்கிய மன்னவராம்—ஜார்ஜ்
மன்னர் மன்னர்க்கு மன்னவராம்
ஏழாம் எட்வர்ட் புதல்வருமாம்—வேல்ஸ்
இளவரசாகவு மிருந்தவராம்!

மாலுமி வேலை பயின்றவராம்—போர்
மரக்கலத் தலைவரா யிருந்தவராம்
மேரி ராணியை மணந்தவராம்—அவர்
மேன்மையாய் மைந்தரைப் பெற்றவராம்!

பூவலம் செய்த புண்ணியராம்—வெகு
புதுமைகள் கண்ட கண்ணியராம்
கல்விக்களஞ்சிய மானவராம்—எம்மைக்
காப்போமென வாக் களித்தவராம்!

நன்மைகள் பலபல செய்பவராம்—அவர்
நல்லோர் புகழ் குணம் கொண்டவராம்
இந்திய சக்ரவர்த்தியராம்—என்றும்
எளியோரைக் காக்கப் பிறந்தவராம்!

சீனர்.—பலே! பேஷ்!! மெத்த சந்தோஷம். நீங்கள் பாக்கிய சாலிகள் தான்! சந்தேகமில்லை.

2-வது பிள்ளை.—இன்னும் பாருங்கள். நாடோறும் இவ்வுலக மெங்கும் நடந்தேறி வரும் விசேட மனைத்தையும் யாவரும் எளிதில் படித்தறியுமாறு எண்ணிறந்த பத்திரிகைகளும், சஞ்சிகைகளும் ஆங்காங்குத் தோன்றி, தபால் மூலமாய் நாடு நகர மெங்கும் பரவுமாறு ஏற்பாடுகள் செய்யப் பட்டிருக்கின்றன.

சீனர்.—பிள்ளைகாள்! அப்படிப்பட்ட மன்னரிடத்தில் நீங்கள் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் தெரியுமா?

பிள்ளைகள்.—அறிவோம்.

[பாடுகிறார்கள்.]

இங்கிலீஷ் நோட்டு.

பல்லவி.

நித்தம் புகழ்ந்து போற்றுவோம்
சித்தம் மகிழ்ந்து வாழ்த்துவோம்

சரணம்.

எங்கள் ஜார்ஜ் ராஜனை
இணையில் ஞான பானுவை
எங்குமோர் குடைங் கீழாளும்
இராஜ ராஜ ராஜனை (நித்தம்)
இட்ட சட்டப் படி நடப்போம்
என்றுக் கௌரவித்து வருவோம்
கெட்டதுட்டர் வழியிற் செல்லோம்
கேடில் வாழ்வை யென்றும் நாடுவோம் (நித்தம்)
கடவுளென்று கை குவிப்போம்
கருணைகாட்டும் அணையிற் கொள்வோம்

உடலு முயிருமாக விரும்போம்
உற்ற குறைக ளௌமதாக் கொள்வோம் (நித்தம்)

சீனர்.—அதுவே நல்லது; பிள்ளைகாள்! இத்தகைய மன்னர் நீடூழிகாலம் சுகித்திருக்கும்படி நாமெல்லோரும் உண்மையான பக்தி வினயத்துடன் மங்களவாழ்த்துக் கூறுவோம்.

[எல்லோரும் பாடுகிறார்கள்.]

மெட்டு—ஸ்ரீ ராமச்சந்திரனே என்பது.

மங்கள மாகவைந்தாம் மகா ராஜன் ஜார்ஜுக்கு
மண்டலத்தில் புகழ் எங்கும் பார்–பார்–பார் (மங்)

ஏற்றுவோ மவரைப் போற்றுவோம்
எங்கும் புகழுடனே எவரும் வணங்கி நிற்க
எந்தத்திக்கிலும் புகழ் கேள்–கேள்–கேள் (மங்)

காப்பரே நம்மை மூப்பிலும்—அவர்
சீமையிலிருந்து கொண்டு
ப்ரேமையாய் ஜனங்களது
தீமையை நீக்குவர் பேர்—சொல்–சொல்–சொல் (மங்)

வேறு.

வாழ்க ராஜ ராஜன் வாழ்க
வாழ்க ஜார்ஜ் மன்னன் வாழ்க
வாழ்க ஜயசீலன் வாழ்க
வாழ்க தரணி பூபன் வாழ்க
வாழ்க மகாராணி வாழ்க
வாழ்க மேரியம்மை வாழ்க
வாழ்க அரசாட்சி வாழ்க
வாழ்க வாழ்க வாழ்கவே

சுபம்! சுபம்!! சுபம்!!!

(முற்றிற்று.)

---

சுதேசமித்திரன் ஸ்டீம் பிரஸில் அச்சிடப்பட்டது.

MAHAMAHOPADHYAYA,
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY.
TIRUVANMIYUR, MADRAS-41.

காரைக்குடிச் செந்தமிழ்க்கழக வெளியீடு: 2

டாக்டர் உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்,
சென்னை - 600090.

# மத்தவிலாஸப் பிரகஸனம்

ஸ்ரீ க. சுப்பிரமணிய ...
அவர்களின்
...

காரைக்குடி

மே. நா. சித.
நாகப்ப செட்டியார் அவர்கள்
பதிப்பித்தது

1932

அன்பளிப்பு

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# மத்தவிலாஸப் பிரகஸனம்

(ஒரு நாடகம்)

3864

ந. பலராம ஐயர்

தமிழ்ப்பண்டிதர், அண்ணாமலை பல்கலைக்கழகம்,

அண்ணாமலை நகர்

(சிதம்பரம்)

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

ஸ்ரீ குஞ்சிதசரண பிரஸ்,— சிதம்பரம்

ஆங்கீரஸஹு சித்திரைமீ

*Copyright Registered*]

[விலை அணா 8

அன்பளிப்பு

# முன்னுரை

பிரஹஸனம் நாடக வகைகளுள் ஒன்று. இது சுத்தம், விகிர்தம், சங்கீர்ணம் என மூவகைப்படும். சுத்தப் பிரஹஸனத்திலே பாஷண்டர், விப்பிரர், சேடன், சேடி என்னும் இன்னோர் தோற்றிப் பொருத்தமானவேஷமும் பாஷையும்தோன்ற நகையை விளக்கும் நகைப்புக்குறிப்பு மொழிகளைக் கூறி நடிப்பர். காமுகராதியோர் தோற்றிக் காமக்குறிப்புத் தோன்ற நடிப்பது விகிர்தப் பிரஹஸனம்; தூர்த்தர் பலர்தோற்ற அறுவகை நகைக்குறிப்பும், வீதியென்னும் மற்றொருநாட்டியவகையின் இலக்கணமும் பெற்று வருவது ஸங்கீர்ணப் பிரஹஸனம்; என நாடகநூலாசிரியர் பிரஹஸனத்தை மூவகைப்படுத்தி யுரைப்பர்.

மத்தவிலாஸப் பிரஹஸனமாகிய இந்நூல் முதல் வகையாகிய சுத்தப் பிரஹஸனத்தின்பாற்பட்டது. காபாலி யொருவனும், பாசுபதன் ஒருவனும், ஒரு பௌத்தபிக்ஷுவும், ஒரு பைத்தியக்காரனும், சூத்திரதாரனும், நடியும், காபாலிகனுடைய காமக்கிழத்தியும் ஆகிய அறுவர் நாடகபாத்திரர் தோற்றி, நகைக்குறிப்புமொழி கூறி நடிப்பர்.

MAHAMAHOPADHYA
V. SWAMINATHAIYAR
...IYUR, MADR

பிரஸ்தாவனை முடியக் காபாலியும் அவனது காதன் மங்கையும் காஞ்சிநகர வீதியிலே தோற்றுவதோடு நாடகம் ஆரம்பமாகிறது. முதற் காட்சியிலே மது மயக்கமுற்ற காபாலி, தேவஸோமையாகிய காதன் மங்கையோடு வார்த்தையாடிக்கொண் டிருப்பதும், தனது பிக்ஷையேற்கும் கபாலத்தைக் காணாது அதனைத் தேட முயலுவதும்; இரண்டாங் காட்சியிலே மதுக்கடையை வருணிப்பதும்; மூன்றுங்காட்சியிலே அவ்வழியே வந்த சாக்கிய பிக்ஷுவை யணுகி அவன் கையிலிருக்குங் கப்பரையைத் தனது கபாலமென வெண்ணிக் கைப்பற்ற முயலுவதும், பாசுபதனொருத்தக் காபாலியும் பிக்ஷுவும் அவனிடம் முறையிடுவதும்; நான்காங் காட்சியிலே பைத்தியக்காரனொருவன் வெறிநாயின் வாயிலிருந்து தான்பிடுங்கியெடுத்த கபாலத்தோடுவருவதும் காபாலி கபாலத்தைப்பெற்று மகிழ்வதும், அனைவரும் சமாதானமாகச் செல்லுவதுமே நாடகத்தின் கதைச்சுருக்கமாகும்.

இந்த நூலினை வடமொழியில் ஆக்கியவன் மஹேந்திரவர்ம பல்லவனென்னும் அரசன். இவன் கிறிஸ்தாப்தம் ஏழாம் நூற்றுண்டின் தொடக்கத்திலே காஞ்சிநகரை ராஜதானியாகக்கொண்டு அரசு புரிந்தவன். பல்லவகுலத்துத் தோன்றலாகிய இவ்வரசன்

ஸிம்ஹவிஷ்ணுபல்லவனுக்கு மைந்தன். இவனுக்குச் சிறப்புப் பெயர்கள் பலவுள. அவற்றின் காரணத்தை நான்முகத்தினுள்ளே காண்க.

இவ்வரசன் காவியக்கலை, சிற்பக்கலை, ஓவியக்கலை என்னுமிவற்றிலே மிகுந்த தேர்ச்சி யெய்தியவன். அக்காலத்திலுள்ள அரசர் அருங்கலை விநோதராக இருந்தாரென்பதற்கு இவ்வரசன் சான்றாகின்றான். பல்லவர் காலத்திலே எழுந்த கற்றளிகளும் சித்திரங்களும் இவர்களை நினைவுகூருவதற்கு அறிகுறியாக விளங்குகின்றன. எத்தனையோ கோயில்களும் குகைகளும் இந்நூலாசிரியனாகிய மஹேந்திரவர்மனது பெயரினைப்பூண்டு நிலவுகின்றன. அப்பர் சுவாமிகளைத் துன்புறுத்திய அரசன் இவனெனக் கொள்வோமாயின், இவன் ஆரம்பத்திலே சமண சமயத்தைச் சார்ந்திருந்து பின்பு சைவனானனென்பது பெறப்படும். குணதரேச்சுரம் என்னும் கோயிலைச் சைவனை பின்பு கட்டியிருக்கவேண்டும். இந்நூல் எழுந்தது இவ்வரசன் சமணனாயிருந்த காலத்திலாதல்வேண்டும். இதனுள்ளே, சைவத்தி னுட்பிரிவுகளாகிய காபாலி பாசுபத மதங்களையும், புறச்சமயமாகிய பௌத்தத்தையும் இழித்துக் கூறுவது, இவ்வரசன் சமண சமயத்தைச் சார்ந்தவன் என்பதற்கு ஒரு சான்றாகும்

MAHAMAHOPADHYAYA
...NATHAIYAR LIBRARY.

மொழிபெயர்ப்பு முதனூலினது சொன்னயம் பொருணயங்களைத் தழுவி மகேறந்திரவர்மனது உளப்பாட்டினையும் கவிச்சுவையினையும் தெளிவுறக் காட்டுகின்றது. வடமொழிச் சுலோகங்களின் நேர் மொழிபெயர்ப்பாக வருகின்ற தமிழ்ச்செய்யுட்கள் நன்றாக அமைந்திருக்கின்றன. முதனூலிலே நகைச்சுவை நிறைந்திருப்பது போலவே மொழிபெயர்ப்பும் நகைச்சுவை நிறைந்து விளங்குகிறது. நாடகவகைகளுள் ஒன்றாகிய பிரஹஸனத்துக்கு இம்மொழிபெயர்ப்பு நூல் சிறந்த இலக்கியமாகும்; ஆதலினால் தமிழ் கற்கும் மாணவர்க்கு இது பெரிதும் பயன்படுமென்பது எமது துணிபு.

அண்ணாமலைநகர்,
23—3—32.

ஸ்வாமி விபுலானந்தர்.
B. Sc.,(LONDON),
அண்ணாமலை பல்கலைக்கழகத்
தமிழ்ப்பேராசிரியர்.

# முகவுரை

இச் சிறுநாடகத்தை வடமொழியில் இயற்றியவன், தென்னிந்தியாவில் அரசுபுரிந்துவந்த பல்லவ அரசர்களுள் ஒருவனாகிய மஹேந்திர விக்கிரம வருமன் என்பவன். பல்லவர்கள் கிறிஸ்து சகாப்தத்தின் தொடக்கத்தில் வடதேசத்திலிருந்து தக்ஷிண இந்தியாவிற் குடியேறியவர்கள். கி. பி. மூன்றாம் நூற்றாண்டில் தக்ஷிண இந்தியாவின் வடகீழ்ப் பகுதியிலிருந்த சாதவாகன ஆந்திர ராஜ்யம் நிலைகுலையவே, இப் பல்லவர்கள் ஒருசிறிய இராஜ்ஜியத்தைத் தமக்கென ஏற்படுத்திக்கொள்ளச் சமயம் வாய்த்தது. மெலமெல அவர்கள் ஊக்கங்கொண்டு தமது இராஜ்ஜியத்தை விசாலப்படுத்தித் தக்ஷிணமன்னர்களாகிய சேர சோழ பாண்டியர்களுக்கு நிகராக அரசுபுரிய லாயினர். இவர்களுக்குக் காஞ்சீபுரம் தலைநகராக அமைந்திருந்தது. இதனையே இந்நாடகத்தை நிகழ்விடமாக ஆசிரியன் கொண்டுளான். பல்லவ மன்னர்கள், சிற்பம், சித்திரமாதிய நுண்கலைகளையும் பழைமையின் இலக்கிய இலக்கண நூற்றுறைகளையும் சாஸ்திரங்களையும் மிக்க ஆர்வத்துடன் போற்றி வளர்த்தனர். இதனாலே அவர்களது நாட்டிற் பல சிறந்த புலவர்கள் தோன்றித் திகழ்ந்ததன்றித் தாமும் பல கலைகளஞ் செறிந்த பண்டிதராய் விளங்கினர். அவர்கள் இயற்றிய கைத்தொழில் நலந்திகழும் பழைய கட்டிடங்களும் சீரிய சிலையுருவங்களும் இக்காலத்தும் அன்னோர்தஞ் செவ்விய சிற்பக்கலையின் திறனை

நன்கு புலப்படுத்தும் சான்றுகளாகப் பலவிடங்களி லுங் காணக்கிடக்கின்றன.

இந்நாடக ஆசிரியனாகிய மகேந்திர விக்கிரம பல்லவன் கி. பி. ஏழாம் நூற்றாண்டின் தொடக்கத் தில் அரசுபுரிந்த ஸிம்ஹவிஷ்ணு பல்லவனின் புதல் வன். இச் ஸிம்ஹவிஷ்ணு பல்லவனையே வாதாபி கொண்ட நரசிம்மபல்லவ னென்று சரித்திர ஆராய் ச்சியாளர் கூறுகின்றனர். இவனுடைய காலத்தில் தென்னிந்தியாவிற் சிறந்த புலமை மிக்க பக்தர் களாகத் திகழ்ந்தவர்கள் ஸ்ரீமந் நாதமுனிகள், அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டர் முதலியோர் ஆவர். கி. பி. 640 க்கு முன்னும் பின்னும் மகேந் திர விக்கிரம பல்லவன் அரசுபுரிந்த காலமென்று சிலாசாசன ஆராய்ச்சியாளர் வரையறை செய் துள்ளார்கள். இவன் கீர்த்தி வாய்ந்த பல்லவ மன் னர்களுட் பல்லாற்றானும் தலைசிறந்து விளங்கினன் என்ப தொருதலை. இவன் கல்வி யறி வொழுக்கங்க ளில் மேம்பாடுற்று விளங்கியதோடு மகா பராக் கிரம ஜயசீலனாய்த் தன் இராஜ்ஜியத்தை நாற்புற மும் பரவச்செய்து வாழ்ந்த பெருந்தகை யென்று கூறுவது பொருந்தும். இவன் காலத்திற் பல்லவ ராஜ்யம் தெற்கே திருச்சிராப்பள்ளிவரை பரவி யிருந்ததாகச் சரித்திரங் கூறுகின்றது. திரிசிரபுரம் உச்சிப்பிள்ளையார் கோவிலுட்பட நான்கு மலைக் கோட்டைகள் இவனாற் கட்டப்பட்டனவென்று கூறுப. இதனானே கட்டிடங் கட்டுவதிலும் சிலை கள் நிருமித்தலிலும் இவனுக்கிருந்த ஆர்வம் புல னாகின்றது. இவன் வடமொழியி லியற்றிய இச் சிறு

நாடகம் ஒன்றே இவன் கல்வி வன்மையைத் தெரிவிக்கப் போதிய சான்றெனக் கூறலாம். பல கோவில்களிலும் குகைகளிலும் காணக்கிடக்கும் சிலாசாசனங்களில் இவன் கீர்த்திப் பிரதாபங்களாற் பெற்ற பல பட்டப்பெயர்கள் விளங்குகின்றன. அவற்றுட்சில:—மத்தவிலாஸன், குணபரன், அவநிபாஜநன், சத்ருமல்லன், லளிதாங்குரன், விசித்திர சித்தன், ஸங்கீர்ணஜாதி, சேதக்காரி முதலியன. இவை பலவும் இவனது குணாதிசயங்களை விளக்கும் பெயர்களாக வமைந்தனவென ஐயமின்றிக் கூறலாம். இப்பட்டப் பெயர்களுட் சில *இந்நாடகத்தின்கண்

* இந்த நாடக நாந்திச்லோகத்தில் 'வ்யாப்தாவநிபாஜநம்' என்னுஞ் சொற்றொடரில் அவநிபாஜநப் பெயரும், பரத வாக்கியத்தில் சத்ருமல்லன் என்ற பெயரும், மத்தவிலாஸன், குணபரன் என்னும் பெயர்கள் பிரஸ்தாவனையிலும் அமைந்திருக்கின்றன. இப்பெயர்கள் பலவும் அம்மன்னனுக்குப் பழிப்பதுபோலப் புகழும் பட்டப் பெயர்களாக அமைந்துள்ளன. மத்தவிலாஸன்: களிவிளையாட்டினன். குணபரன்: மிகுந்த குணங்களை வகித்தவன். "பல்லுயிர்க்கும், ஆக்கை, கொடுத்தளித்த கோனே குணபரனே" (நாலா. திவ். பிர.). அவநிபாஜநன்: பூமி பாத்திரன்; பூமியாகிய பாத்திரத்திற் றன்புகழ் நிரம்பச் செய்தவன். சத்ருமல்லன்: பகைவரை வெல்லும் வீரன். இலளிதாங்குரன்: பல்லவ குலதருவின் அழகிய முளை போன்றவன். விசித்திர சித்தன்: பலதிறப்பட்ட ஆலோசனைகளை யுடையவன். ஸங்கீர்ண ஜாதி: பலநறுமணங் கலந்த ஜாதிபுஷ்பம் போன்றவன். சேதக்காரி: நினைத்ததைச்செய்து முடிப்பவன்.

லும் அமைந்திருத்தல் இந்நூலைப் படிப்பவர்க்குப் புலனாகும். யௌவன ரூபாபார மத்தவிலாஸன் என்ற இவனது சிறப்புப்பெயரை நோக்குமிடத்து இவன் வாலிபதசையின் குணங்களை வகிப்பதாற் பல களிவிளையாடல்களைப் புரிபவன் என்று ஊகித்தற்கு இடமாகின்றது.

இச் சிறுநாடகம், வடநூல் நாடகவகைகளாகிய தசரூபகங்களுள் ஒன்றாகிய பிரகஸனஜாதியைச் சேர்ந்தது. நகைச்சுவை நாடகங்களுள் ஒன்றாகிய பிரகஸனத்தின் இலக்கணத்தை,

"முனிவர் தேவர் முதுமறை யந்தணர்
எனுமிவ ரிடைவர விழிவு நிந்தையும்
பெறவெறும் போலிக ளூறுதலை மக்களாச்
சாத்து வதியே கைசிகி தந்து
நகைச்சுவை தன்னை மிகுத்துக் காட்டி
யொன்றே யாத லிரண்டே யாத
லங்கங் கொண்ட தரும்பிர கசனம்,"

என்னும் நாடகவியற் சூத்திரத்தால் நன்குணரலாம். இந்நாடகம் நான்கு களங்களடங்கிய ஓரங்கத்தான் முற்றுப்பெற்றுள்ளது; வடநூன்முறைக் கிணங்கப் பிரஸ்தாவனையாகிய முன்னுரையினையும், பரதவாக்கியமாகிய பின்னுரையினையுங் கொண்டுள்ளது. பிரஸ்தாவனை, பரதவாக்கியம் இவற்றின் இலக்கணங்களை நாடகவியலில் நன்கு காணலாம்.

இந்நாடகத்தின் கதை மிகச் சிறியதே. மது மயக்க மேற்கொண்ட கபாலி (கபாலமாகிய மண்டை யோட்டைக் கைக்கொண்டு பிச்சையேற்கும் சைவ சமய வகையினரைச் சேர்ந்தவன்) ஒருவன், தன் காதற் கிழத்தியாகிய மடந்தையுடன் காஞ்சீநகர வீதியில் வரும்பொழுது, தனது பிக்ஷாகபாலத்தை இழந்ததும், எதிரில் வந்தவொரு பௌத்த சந்நியாசி கையில் வைத்திருந்த கப்பரையை இழந்த கபாலமாகக் கருதிச் சச்சரவு செய்ததும், இடையே வந்த பாசுபதன் ஒருவன் விவாதமத்தியஸ்தனாக நின்றதும், முடிவில், பைத்தியக்காரன் ஒருவன் கையிலிருந்து இழந்த கபாலங் கிடைக்கப் பெற்றுக் கபாலி களித்ததுமாகிய விஷயங்களே இந்நாடகக் கதையின் பகுதிகளாம். செறிவுற்றுச் சுருங்கிய இக் கதையினை அதிசாமர்த்திய விகடவசனங்களொடு நகைச்சுவை ததும்பும் அழகிய நாடகமாகப் புனைந்த ஆசிரியன் திறமை மிகவும் பாராட்டற்பாலது. இதன் கண் நாடக பாத்திரங்களின் குணவிசேட அமைப்பு நன்கு வாய்ந்துள்ளது. பாத்திரங்களின் முன்னொடு பின் மாறுபடாத தன்மையும், தத்தமக் குரியதெனக் கொண்ட சிறப்பியல்பும், நாடகவாசிரியன் பாத்திர வாயிலாய் விளக்கக் கருதிய பண்பு தெளிவாக இனிது முடிந்து நிற்குஞ் செவ்வியும் இச் சிறுநாடகத்தில் விளங்கக் காணலாம். மதுபோதை மிக்க கபாலி தங்கு தடையின்றிப் பேசுந் தருக்கவாதங்களும், மதக்கோட் பாடுகளும் மிக அழகாகப் புனையப் பெற்றுள்ளன. மதுபானத்திலும் மாதராசையிலும் மட்டற்ற வாஞ்

சையாற் சபலசித்தங்கொண்ட பௌத்தபிக்ஷு தான் மேற்கொண்ட பௌத்த தருமத்தை விடாமலே பிடக புத்தகங்களிலிருந்து ஸ்திரீபரிக்ரக ஸூசாபான விதான பாகங்களைத் தேடவிரும்பிய மனோபாவமும், தேவ ஸோமையின் தந்திரமிக்க சமயோசிதவார்த்தைகளும், வைத்தியக்காரன் முன்னுக்குப்பின் முரணுகக்கூறுங் குழறுபடைமொழிகளும் இன்னோரன்னபலவும் யாவர்க்கும் இன்பம் பயப்பனொருதலை. இக்காலத்திற் காண்பதற்கரிய பைரவவேஷதாரிகளான காபாலிக மதத்தினர், அறுவகை யுட்சமயிகளுள் ஒருவகையினராகிய பாசுபதர், பௌத்தபிக்ஷுக்கள் முதலியோர் ஏழாம் நூற்றாண்டிலிருந்த நிலை யொருவாறு புலனாவதோடு, அவர்கள் மதவிஷயமாகத் தமக்குள்ளே கொண்டுள்ள பரஸ்பர அபிப்பிராய பேதங்களும், ஒருவர்க்கொருவர் பரிகாசமாகப் பேசிக்கொள்ளு முறையும், இத்தகைய பலவேறு சமயிகளையும் வேற்றுமையின்றி அக்காலத்திய அரசர் பொதுநோக்குடன் பரிபாலித்து வந்தனரென்பதும் இந்நூலான் இனிதுவிளங்கும்.

இந்த மத்தவிலாஸப்பிரகஸன வடமொழி நாடகத்தை, கி. பி. 1917-ம் ஆண்டில், திருவநந்தபுரம் கணபதிசாஸ்திரிகள் முதலில் அச்சிட்டு வெளிப்படுத்தினர். பின்னர், 1924-ம௵த்தில் லீப்ஸிக்நகர ஜெர்மானியப் புலவராகிய டாக்டர் ஜே. ஹெர்டல் என்பவர் ஜெர்மானிய பாஷையில் மொழிபெயர்த்தனர். பிறகு ஆங்கிலப்புலவராகிய W. பார்னேட் என்பவர் 1929ம் ௵த்தில் இதை ஆங்கிலத்தில் அழகுபெற மொழி பெயர்த்துள்ளார்.

அண்ணாமலை பல்கலைக்கழகச் சரித்திரப் பேரா சிரியராக இருந்த ஸ்ரீமான் P. T. ஸ்ரீநிவாஸையங் கார் அவர்கள் தக்ஷிண இந்தியாவில் அரசுபுரிந்த பல்லவராஜ குலதிலகனான மகேந்திர விக்கிரம வர்மா வரைந்துள்ள இந்நாடகத்தினைப் பலரும் பார்த்து மகிழவேண்டுமென்று பெருவிருப்புற்று, அதனைத் தமிழில் மொழிபெயர்க்க எனக்கு ஆஜ்ஞாபித்தனர். வடமொழியினின்றும் மொழிபெயர்க்கு மாற்றல் ஒரு சிறிதுமிலே னெனினும் பெரியாராணைக் கடங்கி யொழுகுதலைக் கடப்பாடாகக்கொண்டு அன்னார் மொழிக்கிணங்கி, வடமொழிவல்ல எனது நண்பர் களின் உதவியைக்கொண்டு ஒருவாறு இதனை மொழி பெயர்த்தனன். இதற்கு மிஸ்டர் பார்நெட் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்புப் பெரிதும் பயன்பட்டது. என்மீதுள்ள அன்புமேலீட்டால் எனது மொழி பெயர்ப்பையும் இனிதெனக் கருதிய ஸ்ரீமான் P.T. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள் இதனை 1930-ம் ௵ நவம்பர்மீ௳த்தில் நடைபெற்ற அண்ணாமலை யுனி வெர்ஸிடி ஸ்தாபகர் தினக்கொண்டாட்ட தினத் தில் தக்க அறிவாளரைக்கொண்டு நாடக அரங்கத் திலும் நடித்துக்காட்டிப் பலரையு மகிழ்வித்தனர். ஒன்றற்கும் பற்றாத எனது புன்மொழியா னியன்ற மொழிபெயர்ப்புக்கும் மகிழ்ந்து என்னைக் கௌரவித் துப் பல்லாற்றானும் ஊக்கியருளிய அப்பெருந்தகை யாளர்க்கு யான் செய்யுங் கைம்மா றென்றுமின்று.

"கைம்மாறு வேண்டா கடப்பாடு மாரிமாட்
டென்னாற்றுங் கொல்லோ வுலகு."

இச்சிறுநூலையச்சிட்டால் தமிழ்பயிலும் இளைஞர் பலரும் மகிழ்வரென்று கருதிய, என்மாட்டு உழுவலன்புடைய எனது நண்பரும், தமிழ்நூற்பயிற்சியொன்றையே தமக்குப் பெரும் பொழுதுபோக்காகக்கொண்டு எப்பொழுதும் புத்தகமுங் கையுமாக இருக்கும் காரைக்குடி ஸ்ரீமான் **மெ.நா.சித. நாகப்ப செட்டியார்** அவர்கள் இதனை அச்சிட்டுதவினர். அந்தமி லின்பச் செந்தமிழ் மொழியினைச் சந்ததம் வளர்க்குந் தவமேற்கொள்ளத் துறவுமேற்கொண்ட பெருந்தகையாளரும் அண்ணாமலை பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியருமாகிய ஸ்ரீமான் **விபுலானந்த சுவாமிகள்** அவர்கள் எனது மொழிபெயர்ப்பினைப் பார்வையிட்டுப் பெருங்கருணையோடு ஓர் முன்னுரையும் அன்புடன் வரைந்தருளினர். இப்பெரியார்கள் செய்த நன்றியை எழுமையும் மறவேன்.

அண்ணாமலைநகர்,
22—2—1932.

**ந. பலராம ஐயர்.**

1930-ஸு நவம்பர்மீ 9உ நடைபெற்ற

அண்ணாமலை யுனிவேர்ஸிடி ஸ்தாபகர்

தினக்கொண்டாட்டத்தில்,

பல்கலைக்கழகச் சரித்திரப்பேராசிரியராயிருந்த

ஸ்ரீமான் P. T. ஸ்ரீநிவாஸையங்கார் அவர்கள்

பார்வையின்கீழ்

இந்நாடகம் அரங்கேறியபொழுது ஆசிரியர்கூறிய

# வாழ்த்துப்பா

உலகமொரு நடனமிடு சாலையா கக்கொண்
டுயிர்த்தொகுதி பலவுமாட
வொளிதவழு மம்பொனம் பலமேவி நடமாடு
மொருவனது திருவருளினா
லிலகுதரு மம்பலவி னுங்கல்வியீ கைமேய
யிணையில தெனத்தேர்ந்துளத்
தின்பமொடு தன்பெயரி னாற்றனிப் பல்கலைக
ளியல்கழக மிவணிழைத்த
நலமலி தரும்புகழ்க் கொடையரச னிவனென்ன
நானில மியம்புசீர்த்தி
நண்ணரசன் அண்ணாமலைக் குருசில்நீடூழி
நாடோறு மினிதுவாழி
அலகிலழ குடனவ னளித்தகழ கம்வாழி
யன்னவன் பிரதானியாம் [வன்பர்
அரங்கநா தப்பெயர்கொ ளண்ணல்வாழிய
அனைவோரும் வாழியரோ.

சுபம்.

# மத்தவிலாஸப்பிரகஸன

## நாடகபாத்திரங்கள்

1. சத்தியசோமன்: ஒருகபாலி.
(மண்டையோட்டைக் கையிற் கொண்டு பிச்சை யெடுக்கும் பைரவ வேஷதாரியாகிய கபாலிக மதத்தினன்)

2. பப்புருகல்பன்: ஒருபாசுபதன்.
(அறுவகை உட்சமயத்தைச்சார்ந்த பாசுபதமதத்தினன்)

3. நாகசேனன்: ஒரு பௌத்தபிக்ஷு.

4. ஒரு பைத்தியக்காரன்.

5. தேவஸோமை: சத்தியசோமனின் காதலி.

6. சூத்திரதாரன், நடி.

கதை நிகழ்விடம்: காஞ்சிநகர வீதிகள்.

# மத்தவிலாஸப் பிரகஸனம்
# பிரஸ்தாவனை

---

## சூத்திரதாரன்:

(நாந்தி)

இவனொரு தலையின் றெங்கணும் நிறைந்த
இணையிலா வறிவுட னிலகி
நவையறு வினைமெய் சோற்குணங் கோலம்
நவிலுமுள் ளுணர்ச்சிசேர் சுவையோங்
குவமையில் நடன முளுற்றியுங் கண்டும்
உலகுய வளித்தோரு கையிற்
சவிதிகழ் கபால மேந்திய முக்கட்
சங்கரன் காக்கநந் தமையே. (க)

ஆகா! இந்த நல்லசமயத்தில் ஒரு நாடகத்தை நடித்துக்காட்டும்படி சபையோர் ஆஜ்ஞாபித்தது எனக்கு அநுகூலமாயிற்று. என்னுடைய இளையமனைவியோடு எப்பொழுதும் பிணங்கிக் கலகமிட்டுக்கொண்டிருக்கும் மூத்தமனைவியைச் சாந்தப்படுத்திச் சந்தோஷிப்பிக்க இதுவே நல்ல உபாயமாயிற்று. ஆகவே அவளை நெருங்குவோம். (அவளிருக்கும்புறம்நோக்கி) பிரிய சகி! இதோ அன்புடன் பார்.

நடி:

(கோபமாய்) ஓகோ! ஆர்ய! நெடுநாள்கழித்து வாலிபதசையின் * குணபாரத்தால் மநோரம்மத்த ஞய்ப் பலரும் பார்த்து நகைக்கத்தக்க மத்தவிலாஸ விளையாட்டை யாட என்னிடம் வந்தாயோ?

சூத்திரதாரன்.

ஆம். நீ சொல்லுகிறபடியே.

நடி:

ஆனல், உன்மனத்திற்கு உகந்தவளிடம் போய் விளையாடு.

சூத்திரதாரன்:

உன்னேடு விளையாடவே எனக்கு ஆஜ்ஞை.

நடி:

(1) அவள் எவளோ?

சூத்திரதாரன்:

ஆம் அப்படியே. மேலும் நீ கூடவந்தால், உனக்கு நல்ல சன்மானம் உண்டு.

---

* குணபாரம்—குணத்தின் மிகுதி. எல்லா நற்குணங்களையும் வகிப்பவன் என்று நூலாசிரியராகிய மகேந்திர விக்கிரம வர்ம பல்லவனுக்குக் குணபரனெனக் காரணப்பெயர்உண்டு. முகவுரை பார்க்க. மத்தவிலாஸ விளையாட்டு - களிப்பு மிகுதியால் ஆடும் லீலை என்று பொருள்படுவதோடு, மத்தவிலாஸம் எனப் பெரிய இந்நாடகம் என்றும் இருபொருள்படும்.

1. அவள்—இளைய மனைவி

3864



நடி:

இது, உன்காரியமன்றோ?

சூத்திரதாரன்:

பிரியே! வாஸ்தவம். இது என் சம்பந்தமானதே. உன்னுடைய திறமையைக் கண்டு மகிழ்ந்த சபை நன்றாக அநுக்ரகிக்கும்.

நடி:

(சந்தோஷமாய்) அப்படியா, பெரியோர்களுடைய திருவருள் எனக்குண்டாகுமோ?

சூத்திரதாரன்:

உண்மையாகவே உனக்கு உண்டு.

நடி:

அங்ஙனமானால், இந்த நல்ல சமாசாரத்தைச் சொன்னதற்கு என்ன கைம்மாறு செய்யப்போகிறேன்?

சூத்திரதாரன்:

உன் பிரிய வசனமாகிற கைம்மாறை முன்னமேயே பெற்றேன். இனித்திரும்பவும் வெகுமானத்தைப்பற்றி வீண்பேச்சு வேண்டாம். இதோபார்.

காதளாவிய கண்களிற்களிக்
காமர்நோக்குமக் காமனார்
காதுற்விபொரும் பூருவும்மிணை
யாடியன்ன கபோலமும்

சோதிவாணிலா மானுமூரலுந்
  தோயுநின்முகங் கண்டதன்
மீதுமோதுகைம் மாறுவேறென்று
  வேண்டுமோசொலாய் நங்கையே! (உ)

நடி:

ஐயா! இப்பொழுது நடிக்கப்போவதென்ன?

சூத்திரதாரன்:

பிரியசகி! நீசொன்ன மத்தவிலாஸப்பிரகஸனமே.

நடி:

உண்மையாகவே என்கோபம் அப்படிச்சொல்லத்தூண்டிற்று.—இதுநிற்க. நீங்கள் சொன்ன நாடகம் யார் இயற்றியது?

சூத்திரதாரன்:

பெண்ணே! சொல்லுகிறேன் கேள். பல்லவ ராஜ குலமாகிய பூமண்டலத்தில் மேருபர்வதம்போல் விளங்குபவனும் எல்லாக் குறுநிலமன்னரையும் நீதியால் வென்றவனும் பலபராக்கிரமத்தில் இந்திரனையும், செல்வத்தில் குபேரனையும் வென்றோனுமான ஸ்ரீஸிம்மவிஷ்ணுவர்ம மகாராஜன் புதல்வன்; காமக்ரோத லோப மோக மதமாத்ஸர்ய மென்னும் அறுபகையை அறுபகையாக்கினவன்; பரோபகாரத்திற் சிறந்தவன்; மகாராஜராஜபூஜித ஸ்ரீமகேந்திர விக்ரம வர்மனே இந்த நாடகத்தை இயற்றினவன்.

உலகினின் உயிர்கள் யாவும் ஒருவனை இறுதிக் காலத்
தலைகில வணுகு மாபோ லருளறம் பெருமை யீகை
குலவிய காந்தி வீரம் குசலம் ஸத்திய முன்னுள
அலகிலாக் குணங்க ளெல்லா
[மவனிடைப் புகுந்த வம்மா. (௩)

பொருளினி னுன்மிளிர் மணிநிகர் பதங்களைப் பொழியுந்
திருவி னிணிடைச் செல்வர்வேட் டணுகிய புலவர்
மருவுசொற்பொருண் மாட்சியிற் குறைபவ ரெனினும்
அருநிகர்த்தவன் தருபொருள்
[பொறுத்துமீள் குவரால். (௪)

நடி:

ஐயா! தாங்கள் ஏன் தாமதிக்கிறீர்கள்? இந்த நாடகம் அபூர்வமானதால் சீக்கிரம் அரங்கேறவேண்டாமா?

சூத்திரதாரன்:

ஆம்! யானேனெனில்,
கவிதையேபொருளெனக்கருது காட்சியினிலிக்
கவிஞரேறனையன் காதையினி லீடு படுவேன்

(நேபத்தியத்திலிருந்து)

'தேவஸோமா! என்னன்பே!'
யுவதியோடுகையி லோடுபொருளாக வருமிவ்
யோகிகள்ளுணவி னுள்ளழிவு கொள்ளுமதுபோல்.

[இருவரும் போகின்றனர்.] (௫)

பிரஸ்தாவனை முற்றிற்று.

# முதற்களம்

## இடம்—காஞ்சீநகர வீதி

## பாத்திரர்—கபாலியும் அவன் காதலியும்

---

கபாலி:

(குடிவெறியோடு) என் அன்புள்ள தேவ ஸோமா—உண்மைதான்—தபோ மகிமையினால் நினைத்த ரூபத்தை யெடுக்கலாமென்பது நிஜமே. இதோ பார், இந்த உத்தமமான மதுபான விரத யோகாநுஷ்டான மகிமையால் நீ ப்ரத்யக்ஷணத்திற்குள் திவ்ய தேஜஸோடு விளங்குகின்றாய்.

சீரமர் மதிமுகத்தில் தேன்துளி போலும் வேர்வும்
போரமர் விழிச்சி வப்பும் புருவவில் வளைவும் யாதோர்
காரண மின்றித் தோன்று நகையுந்தார்
[கழன்ற தோளில்
வாரமர் கூந்தல் சோர்ந்த மாட்சியும் கண்டேன் மாதே!
(௧)

தேவஸோமை:

ஆர்ய! நான் குடித்திருப்பதுபோலப் பேசுகிறீர்களே—நீங்கள் குடித்திருப்பதுபோல.

கபாலி:

ஆர்யே! என்ன சொல்லுகிறாய்?

தேவஸோமை:

உண்மையாகவே, நான் ஒன்றுஞ் சொல்லவில்லை.

கபாலி:

அப்படியானால், நான் குடித்திருக்கிறேனா?

தேவஸோமை:

ஆர்ய! என்னைச்சூழ்ந்து பூமி சுழலுகிறதென்று சுற்றுகிறது. குப்புற விழுவேனென்போ லிருக்கிறது. இப்பொழுது என்னைப் பிடித்துக்கொள்ளுங்கள்.

கபாலி:

என்னன்பே! அப்படியே;

(அவளைப்பிடிக்கப் போய்த் தான் விழுகிறான்)

பிரியே! ஸோமதேவா, உனக்கு என்மேற்கோபமா? நான்உன்னைப்பிடிக்க வரும்போது நீ விலகிவிட்டாயே!

தேவஸோமை:

ஆம்! ஸோமதேவைக்கு உமதுமேற் கோபந்தான். அவள் பிரணயத்தை நீக்கி நீர் அவளை நமஸ்கரித்தா லும் அவள் உம்மைவிட்டு விலகியே யிருக்கிறாள்.

கபாலி:

நிஜமாக நீ ஸோமதேவைதான்; (சிறிது சிந் தித்து) இல்லை, நான்சொல்லுகிறேன்—தேவஸோமா.

தேவஸோமை:

ஐயா, ஸோமதேவை உம்முடைய அன்பிற் குகந்த காதலியாதலின், நீர் என்னை என்பெயரால் அழைக்கக் கூட முடியவில்லை.

கபாலி:

ஆர்யே! என்னுடைய மதுபோதையாற் சொல் மாறுடி உன் விஷயத்தில் அபராதஞ்செய்து விட்டேன்.

தேவஸோமை:

நீரே செய்யாதது உம்முடைய நல்லதிருஷ்டந் தான்.

கபாலி:

என்ன! மதுபானதோஷம் என்னை இவ்வளவு தூரம் கெடுத்துவிட்டது! நல்லது, நல்லது, இன்று முதல் நான் ஒரு நாளும் மதுவை ஸ்பரிசிக்கப்போகிற தில்லை.

தேவஸோமை:

ஒகோ! ஸ்வாமி! உம்முடைய விருதாநுஷ்டானத் திற்குப் பங்கஞ்செய்து உமது தபஸைக் கெடுத்துக் கொள்ளவேண்டாம்! வேண்டாம்!! (அவன் காலிற் பணிகிறாள்)

கபாலி:

( ஸந்தோஷமாய் அவளைத் தூக்கிவிட்டு )

1 திருர்ண! திருர்ண!! சிவாயநம:, என் அன்பே!
கள்ளை யுண்ணலாங் காதலி வாண்முகங் காணலாம்
கொள்ள வேண்டு குதூகல வேஷங்கள் கொள்ளலாம்
விள்ளு றுமது மத்தனைப் மேருவில் வாங்கிய
வள்ள லார்சிரஞ் சீவியாய் வாழிநீ டூழியே! (எ)

---

1 திருர்ண - கபாலிகள் வாழ்த்தும்பொழுது கூறும் ஒரு வியப்பிடைச் சொல்.

தேவஸோமை:

ஸ்வாமி! தாங்கள் அப்படிச் சொல்லக்கூடாது. மோக்ஷமார்க்கத்தைப்பற்றி 1அருகத்துக்கள் வேறு விதமாக வருணித்துள்ளார்கள்.

கபாலி:

சுந்தரீ! ஆம்! ஆனால் அவர்கள் பிரஷ்டர்கள்.

காரியத்தி னோடைதைச்செய் காரணம் பொருஉமெனா
ஆருயிர்ப் பொருட்டுமுன் னறைந்தபின் னமண்கையர்
தேருமின்ப மானயாவுஞ் சேருமின்ன லாமெனா
வோரிலா துரைத்தசொல்லி னொழிந்து போவரால். (அ)

தேவஸோமை:

பாபம் சாந்தமாகட்டும்.

கபாலி:

பாபம் சாந்தமாகவேண்டும்! பாபம் சாந்தமாக வேண்டும்!! நீங்காத பிரமசரியம், மயிரைப் பறித்தல், அழுக்குடம்பு, உணவுக்கு வேளை நியமம், கந்தையான மலினவஸ்திரம் முதலானவற்றால் ஜீவன்களை வருத்துபவர்கள். இந்த ஆத்மத்துரோகிகளை விரோத பாவத்திற்கூட வாயில்வைத்துப் பேசக்கூடாது. மகா பாவம். இப்பொழுது இதுவரை இந்தத்தீயர்களைப் பற்றிப் பேசின வாயை என்ன செய்யலாமென்று யோசிக்கிறேன்.

தேவஸோமை:

கட்டாயம் அலம்பிவிடவேண்டும்.

---

1 அருகத்துக்கள்—அருகனைப் பின்பற்றுவோர்; ஆருகதர்; சமணர்.

கபாலி:

எதனால் அலம்புகிறது?

தேவஸோமை:

சாராயத்தால் அலம்புவோம்—அதோ சமீபத்திற் றெரியும் கள்ளுக்கடைக்குப் போவோம்.

கபாலி:

நல்லது, அப்படியே போவோம் வா. (இருவரும் போகின்றனர்)

முதற்களம் முற்றிற்று.

# இரண்டாங்களம்

## இடம்: காஞ்சீநகரத்தில் மற்ருெரு வீதியில் கள்ளுக்கடை வாயில்

## பாத்திரர்: கபாலி, தேவஸோமை

---

கபாலி:

தேவஸோமா! இந்தக் காஞ்சிநகரத்தின் அழகே அழகு. அதோ உப்பரிகைகளிலிருந்துவரும் மிருதங்க சப்தம் மாளிகைகளின் மேல் உறங்கும் மேகங்களின் தொனிபோல் விளங்குகிறது பார். இதோ தெரியும் புஷ்பக்கடைகள் இந்தக்காலத்தை வஸந்தகால மாக்கி விட்டன பார்த்தனையா! அழகான மாதர்களின் மேகலாபரணத்தி னொலி மன்மதனது ஜயபேரிகை நாதம் போல விளங்குவது தெரிகிறதா?

தத்துவ முணர்ந்த மேலோர்
தனிப்பெருஞ் சுகமென் றேதும்
நித்திய பரமா னந்த
நிமலவாழ் வனைத்துங் கூடி
இத்தலத் திருந்த தம்மா!
இந்திரி யங்க ளால்யாம்
நத்திய காம வின்பம்
நண்ணலற் புதமே யன்றோ? (கூ)

தேவஸோமை:

ஸ்வாமி! மகாமகிமை பொருந்திய மதுவைப் போல ரமணீயமான இந்தக் காஞ்சீநகரம் [1]வாருணீ தேவியின் ஸ்வரூபமென்றே கருதுகிறேன்.

கபாலி:

பிரிய சகி! இதோ பார்! இந்தக்கள்ளுக்கடை யாக சாலைபோல விளங்குகிறது. அந்தக் கொடி கட்டிய தூணே யூபஸ்தம்பம். அதோ பளபளவென்று குப்பி களிற் பிரகாசிக்கும் பிராந்தியே ஸோமபானம். கள் விற்பவர்கள் [2]ருத்விக்குக்கள். குடிக்கும் கிண்ணங் களே [3]சமஜங்கள். முள்ளால் குத்தி நெருப்பில் பத மாய் வாட்டப்பட்ட மாம்ஸாதிகளே ஹவிஸுகள். குடிப்பவர் வார்த்தைகளே யஜுஸுகள். போதையால் அவர் பாடும் பாட்டுக்களே ஸாமகானம். கள்ளையெடுக் கும் அகப்பைகளே [4]ச்ருவங்கள். குடியிலுள்ள ஆவலே யாகாக்கினி. இந்தக் கள்ளுக்கடை அதிகாரியே யாக கர்த்தா—பார்த்தனையா?

தேவஸோமை:

ஆம். இந்த யாகசாலையில் நம்மிருவருக்கும் ருத்ர பாகமான ஹவிஸ் பிக்ஷை கிடைக்கும்.

---

1 வாருணீதேவி - சமுத்திரராஜனான வருணன்மகள்; மது வின் அதிதேவதை.

2 ருத்விக் - யாகப்புரோகிதர்.

3 சமஜம் - ஸோமரஸம்வைக்கும் பாத்திரம்.

4 ச்ருவம் - யாகத்தில் நெய்யெடுத்து நெருப்பில்விடும் சிறு அகப்பை.

கபாலி:

அஹோ! அந்த மத்தள வோசைக்குச் சரியாகச் சதிபெயர்க்கும் நடனமாதர்களின் நூபுரவொலி எவ்வளவு மனோரம்மியமாகவிருக்கிறது. அவர்கள் இனிய கானவசனத்தோடு பொருந்தச்செய்யும் பல வித அபிநய அழகும் மந்தகாசத்தோடு கூடிய முக விலாசமும் என் மனத்தைக் கொள்ளைகொள்கின்றன. நழுவுகிற முன்றானையைச் சரியாக்க மேலே ஒரு கையைத்தூக்கியபொழுது இடையிலுள்ள வஸ்திரம் நழுவ, அதைத் திருத்தும்பொழுது தாளம் தவறு வதும் கழுத்திலணிந்த மாலைகள் நிலை குலைவதும் எவ்வளவு ஆநந்தமாயிருக்கின்றன!—பார்த்தனையா?

தேவஸோமை:

ஆ! மகாரஸிகர்களில்லையா தாங்கள்?

கபாலி:

இந்தக் கிண்ணங்களில் விடப்பட்ட வாருணீ தேவியாலன்றோ, பூஷணங்கள் வெறுக்கப்படுகின் றன; ஊடல்தீருகின்றது; அது யௌவன பராக்கிரம மாகவும் லீலாவிலாஸங்களின் ஜீவனாகவும் விளங்கு கின்றதைப் பார்—அதிகமாகச் சொல்வானேன்?

சிவனார் தம்நுதல் விழியா லுந்திய
தீயால் வெந்தனன் மதனென்ப
தவமே கூறிய பொய்யாம் அன்னவன்
அழலார் வெண்ணெயி னுருகிச்சொல்

உவமா னஞ்சிறி தில்லா மதுவா
யுண்டா ருள்ள மினையந்தோடி
நவமா கியவன லுருவா னுனது
நண்ணிய காமா நலமன்றோ? (௧0)

தேவஸோமை:

ஸ்வாமி! தாங்கள் சொல்வதே ஸரி. உலகத்திற்கு நன்மை செய்கிற லோகநாதன் உலகத்தை அழிக்க வேமாட்டான்.

(இரண்டுபேரும் கன்னங்களை உப்பும்படிச்செய்து கொண்டு வாக்கினுல் படகவாத்யத்தொனியைச் செய்கிறார்கள்)

கபாலி:

தாயே! பிக்ஷை போடு.

(நேபத்தியத்திலிருந்து)

ஐயா! இதோ பிக்ஷை. வாங்கிக்கொள்ளும்.

கபாலி:

இதோ வாங்கிக்கொள்கிறேன்.—என் அன்பே! என் கபாலம் எங்கே? (தேடுகிறான்)

தேவஸோமை:

நான் பார்க்கவில்லையே.

கபாலி:

(சிறிது சிந்தித்து) ஓகோ! அந்தக் கள்ளுக்கடையில் மறந்து வைத்துவிட்டேன் என்றுஎண்ணுகிறேன். நல்லது திரும்பிப்போய்த் தேடுவோம்.

தேவஸோமை:

ஆனால் ஐயா! அன்போடு உபசரித்துக் கொடுக்கப்பட்ட பிக்ஷையை வாங்காமலிருப்பது அதர்மம் ஆகுமே. இப்பொழுது என்ன செய்யலாம்?

கபாலி:

ஆபத்துக்குப் பாபம்இல்லை. நீ வைத்திருக்கும் பசுவின் கொம்பில் அதை வாங்கிக்கொள்.

தேவஸோமை:

ஆம், ஐயா, அப்படியே செய்கிறேன். (அவள் வாங்கிக்கொள்ளுகிறாள்; இருவரும் போகிறார்கள்)

இரண்டாங்களம் முற்றிற்று.

மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாத நூல் நிலையம், சென்னை -60

# மூன்றாங் களம்

## இடம்: காஞ்சியில் மற்றோர்வீதி

## பாத்திரர்; கபாலி, தேவஸோமா

---

கபாலி:

என்ன! அஃது இங்கும் காணோமே? (மிக்க விசனத்தோடு) ஐயா! ஐயா!! மகேச்வர பக்தர்களே! எங்கள் மண்டையோட்டை நீங்கள் கண்டீர்களா?—அவர்கள் என்னசொல்லுகிறார்கள்?— எங்கள் பிக்ஷா கபாலத்தைக்கண்டீர்களா?— இவ்விடம் வைத்து மறந்து போனதாக ஞாபகம்—என்ன சொல்லுகிறீர்கள்?— தாங்கள் பார்க்கவில்லை யென்று சொல்லுகிறீர்களே. ஆ! கெட்டேன். என் தபஸ் வீணாக அழிந்தது. நான் எப்படி மீளவும் கபாலியாவேன்? ஓகோ—கஷ்டம்! கஷ்டம்!!

உண்ணும் போதும் அருந்தும் போதும்
உறங்கும் போதும் உயிர்த்துணை
நண்பனான கபால வோட்டினை
நான்பிரிந்தெங்ஙனுய்குவேன்? (கக)

(விழுந்து தலையிலடித்துக்கொள்ளுகிறான்)

நல்லதிருக்கட்டும். 1இலக்ஷணையிருக்கிறது. நான் இன்னும் கபாலியே. (எழுகிறான்)

தேவஸோமை:

ஸ்வாமி! கபாலத்தை யார் எடுத்திருப்பார்கள்?

---

1 இலக்ஷணை—ஈண்டுத் தானியாகுபெயர்.

கபாலி:

நன்றாக வதக்கிப் பக்குவமான மாமிசத் துண்டு ஒன்றை அதில் வைத்திருந்தேன். அதனால் அந்தக் கபாலத்தையொரு நாயாவது, அல்லது, ஒருபௌத்த சந்நியாசியாவது எடுத்திருக்கவேண்டும்.

தேவஸோமை:

அப்படியானால் அதைத் தேடிக் கண்டுபிடிக்க இந்தக் காஞ்சீபுரம் முழுவதும் சுற்றிப் பார்ப்போம்.

கபாலி:

அதோ யாரோ வருகிற காலடிச்சத்தம் கேட்கிறது. நாமிருவரும் சிறிது மறைந்து நின்று கவனிப்போம். (இருவரும் சிறிது விலகி நிற்கிறார்கள்)

(பௌத்தபிக்ஷு கையில் கப்பரையுடன் வருகிறான்)

சாக்கியபிக்ஷு:

என்ன ஆச்சரியம்! நமது சிஷ்யன் தனதாஸ ச்ரேஷ்டி செய்யும் மகாதானம் வெகுசிலாக்கியமாயிருக்கிறது. அவனிடம் பிக்ஷைபோல மற்றெந்த வீட்டிலுங் கிடைக்காது. நமக்கு இன்றையதினம் அவன் இட்ட பிக்ஷைக்கு ஸமானம், நான் எங்கும், கண்டதில்லை. என்ன நிறம்? என்ன வாசனை? என்னருசி? எத்தனை வகை? மத்ஸ்ய மாம்ஸ விதங்களோடும் கூடின ஷட்ரஸ ஆகாரம் திருப்தியாய் நமக்குக் கிடைத்தது. பௌத்த ஸங்கம் இருக்கும் ராஜமடத்துக்கு இனிட்

போவோம்.—ஆஹா! பரமகருணாநிதியான 1 ததாகதர் மகாபுத்திமான்; அவர் பௌத்த ஸங்கத்தின் பொருட்டு ஏற்படுத்தின, தருமங்களில் நல்ல மாளிகைகளில் வாஸம்,பஞ்சணை மெத்தைகளடுக்கிய கட்டில்கள்மேற் படுக்கை, முற்பகலில் நல்ல சாப்பாடு, பிற்பகலில் ருசியான பானங்கள், 2 பஞ்சமுக வாஸங்களோடு கூடிய திவ்ய தாம்பூலம், நயமான மிருதுவஸ்திரம் தரித்தல், என்ற நன்மைகளை யெல்லாம் உபயோகிக்க விதித்திருக்கிறான், ஆனால் ஸ்திரீகளையடைதல், கட்குடித்தல் இவை இரண்டையும் ஏன் சொல்லவில்லை? எப்படி விட்டான்? ஸர்வஜ்ஞனும் பரதுக்க துக்கியுமான புத்த பகவான் இவற்றை யெங்ஙனம் கவனியாமல் விட்டு இருப்பான்?— ஆம்! ஆம்! இதுதான் உண்மை; உற்சாகமற்ற துஷ்டர்களான சில கிழ பௌத்த சந்நியாசிகள், நல்ல ரூப யௌவனர்களான எம்போலியர்கள் மேலுள்ள பொறாமையால், பிடக புஸ்தகங்களில் ஸ்திரீ பரிக்ரக ஸுராபான விதான பாகங்களை யழித்திருக்கவேண்டும். இப்பொழுது எந்த இடத்தில் அழியாத மூலபாடம் கிடைக்குமோ? கிடைத்தால் அதைக் கொண்டு பரிபூரணமான புத்த தருமோபதேச மொழிகளை உலகில் வெளியிட்டுப் பௌத்த ஸங்கத்திற்கு நன்மையைச்செய்வேன். (சிறிது போகிறான்)

---

1. ததாகதர்-புத்தர். அங்ஙனம் வந்தவன் என்பது பொருள்.

2. பஞ்சமுகவாசம்- "தக்கோலந் தீம்பூ தகைசா லிலவங்கங் கர்ப்பூரஞ் சாதியோ டைந்து."

தேவஸோமை:

ஸ்வாமி! அதோபாரும், பாரும். அந்தக்காஷாய தாரி போகிறானே, அவன் இந்த நிர்ப்பயமான இராஜ பாட்டையில் எல்லாரையும் போலின்றித் தன் அங்கங் களை யொடுக்கிக் கூசிக் கூசி அடிவைத்துக்கொண்டு இருபுறமும் மிரள மிரள விழித்த வண்ணம் அதிவேக மாகப் போகிறானே,—ஏன் அவ்விதம் போகிறான்? கவ னித்துப்பாருங்கள்.

கபாலி:

ஆம். என் அன்பே! அவ்விதமேதான். மேலும் அவன் கையில் எதையோ வைத்துத் தன் உத்தரீயத் தால் மூடி யெடுத்துப் போகிறான்.

தேவஸோமை:

அப்படியாயின், ஸ்வாமி, அவனைப்பற்றிக் கையி லுள்ளதைப்பிடுங்கிப்பார்த்துத் தெரிந்துகொள்வோம்.

கபாலி:

பெண்ணே, அப்படியே செய்வோம். (பௌத்த பிக்ஷுவின்கிட்ட அணுகி) ஓ! சந்நியாசி! நில், நில்.

சாக்கியபிக்ஷு:

எவன் நம்மைஇப்படிக் கூப்பிடுகிறான்? ஆச்சரியம்! (திரும்பிப்பார்க்கிறான்; தனக்குள்) ஓகோ! இவன் துஷ்டனான ஏகம்பக் கபாலியில்லையா? இவனது மத்த விலாஸத்திற்கு நாம் லக்ஷியமாகக்கூடாது.

(விரைந்து போகிறான்)

கபாலி:

என் அன்பே! இதோ என் கபாலம் அகப்பட்டுவிட்டது. ஸந்தோஷம்—என்னைக்கண்டதும் திகிலடைந்து தப்புவதற்காக விரைந்த அதுவே இவன் திருடன் என்பதற்குப் போதுமான ஸாக்ஷி. (விரைந்துபோய்க் குறுக்கிட்டு மறிக்கிறான்)

(கோபத்தோடு) ஆ! துஷ்டா! இப்பொழுது எங்கே போவாய்?

சாக்கியபிக்ஷு:

உபாஸிக! கபாலிக! அங்ஙனம் பேசாதே—ஈதென்ன?—(தனக்குள்) இந்த உபாஸிகை எவ்வளவு அழகுள்ளவள்!

கபாலி:

ஓ! சந்நியாசி! உன்கையில் கந்தையால் மூடி என்னவோ வைத்திருக்கிறாயே, அதைக்காட்டு பார்ப்போம்.

சாக்கியபிக்ஷு:

பார்க்க என்ன இருக்கிறது? பிக்ஷாபாத்திரம்தான்.

கபாலி:

அதனாலேதான் அதைப்பார்க்க விரும்புகிறேன்.

சாக்கியபிக்ஷு:

(கோபத்தோடு) அப்படிச் செய்யாதே! செய்யாதே!! உபாஸிக! அதை நாங்கள் மறைத்தே கொண்டு போக வேண்டும். உனக்குத் தெரியாதா?

கபாலி:

ஆம், உண்மையாகவே; இந்தமாதிரி வஸ்துக்களை மறைத்துக்கொண்டு போவதற்காகவே, புத்தர் உனக்கு அநேகவஸ்திர தாரணங் கற்பித்திருக்கிறார்.

சாக்கியபிக்ஷு:

அஃது உண்மைதான்.

கபாலி:

அது மறைபொருளான உண்மை. நிஜமான உண்மையன்றோ எனக்குத் தேவை.

சாக்கியபிக்ஷு:

போதும், போதும், இவ்வளவு பரிகாசம். எனக்குப் பிக்ஷாகாலம் கடந்துபோகிறது. நான் போக வேண்டும். (புறப்படுகிறான்)

கபாலி:

அடே! போக்கிலி! எங்கே போகிறாய்? என் கபாலத்தைக்கொடு.(அவன் போர்வைக்காஷாய துணியைப் பற்றுகிறான்)

சாக்கியபிக்ஷு:

ஓம் நமோ புத்தாய!

கபாலி:

'நமோ 1கரபடாய' என்று சொல். அவன்தானே களவுநூல் எழுதினவன். ஆனால் இந்தவிஷயத்தில் கரவடனைக்காட்டிலும் புத்தன் அதிஸமர்த்தன். அஃது எப்படித் தெரியுமா?

பார்ப்பார் உறங்குகையில்—அந்தப்
பாரதம் வேதாந்தம் பன்னியவாம்
கோப்பான வான்பொருளைப்—புத்தன்
கொள்ளைகொண்டு தன்னூல் கூறினனே. கஉ.

1. கரபடன்—களவுநூல்செய்தவன். இவனைக் கர்ணீஸுதன் என்று கூறுப.

சாக்கியபிக்ஷு:

பாபம் சாந்தமாகவேண்டும்! பாபம் சாந்தமாக வேண்டும்!!

கபாலி:

இவ்வளவு நல்லொழுக்கமுள்ள தபசிக்கு எந்தப் பாவந்தான் தணியாது?

தேவஸோமை:

ஸ்வாமி! தாங்கள் களைத்தவர்போலக் காணப்படுகிறீர். அந்தக்கபாலம் எளிதிற்கிடைக்காது. ஆகையால் இந்தக் கொம்பிலுள்ள சாராயத்தைக் கொஞ்சம் குடித்துத்திடமாக்கிக்கொண்டு இவரோடு வாதஞ்செய்யுங்கள்.

கபாலி:

அப்படியே! (தேவஸோமை மதுவைக் கொடுக்கிறாள்: அவன்குடித்து)

என்னன்பே! நீயும் களைப்பைப் போக்கடித்துக்கொள்.

தேவஸோமை:

பகவானே! அப்படியே! (குடிக்கிறாள்)

கபாலி:

பெண்ணே! இவன் நமக்கு மகாபராதஞ் செய்தவன்தான். இருந்தாலும், உள்ளதைப் பிறருக்குப் பகிர்ந்து கொடுத்தல் நமது முக்கியமான கொள்கையன்றோ? ஆகவே மிகுதியிருந்தால் அவனுக்குங் கொடு.

தேவஸோமை:

தாங்கள் எப்படி உத்தரவு செய்கிறீர்களோ அங்ஙனமே செய்கிறேன்.—ஐயா! நீர் வாங்கிக்கொள்ளும்.

சாக்கியபிக்ஷு:

( தனக்குள் ) ஓகோ! நமக்கு நல்லதிருஷ்டம் அணுகியது போலும். ஜனங்கள் பார்ப்பார்களே என்பதுதான் சங்கடம். (வெளிப்படையாக) வேண்டாம், அம்மா, வேண்டாம்! இது எங்களுக்குத் தகாது. (கடைவாயை நக்குகிறான்)

தேவஸோமை:

நாசமாய்ப்போவாய்! இவ்வளவு பாக்கியம் உனக்கு எங்கிருந்து கிட்டும்?

கபாலி:

என் அன்பே! அவன் தன் மனத்திலுள்ள ஆசைக்கு விரோதமாகப் பேசுகிறான்— இதற்கு வாயூறுகிறதால் அவன் பேச்சுக் குளறுகிறான்.

சாக்கியபிக்ஷு:

இப்பொழுதுகூட என்மேற் கருணையில்லையோ?

கபாலி:

கருணை இருந்தால் எப்படி 1 வீதராகன் ஆவேன்.

சாக்கியபிக்ஷு:

ஆனல், விருப்ப மில்லாதவன் வெறுப்புமில்லாதவனுகவும் வேண்டுமே. உனக்குக் கோபமேன் *

---

1 வீதராகன் - விருப்பமில்லாதவன்.

* இவ்வாறு வீதராகனுகவும் ரோஷமற்றவனுகவும் ஆசத்தக்கது

MAHAMAHOPADHYAYA

கபாலி:

என் சொத்தைக் கொடுத்துவிட்டால் கோபமற்றவனாவேன்.

சாக்கியபிக்ஷு:

உன்னுடைய சொத்து எது?

கபாலி:

கபாலம்.

சாக்கியபிக்ஷு;

என்ன? கபாலமா?

கபாலி:

"என்ன? கபாலமா?" என்கிறான். தகுந்தபடி தான் பேசுகிறான்.

காண லாவதோர் கடன்மலை காசினி யெல்லாம்
பூணு மாலினாற் பொய்யென வுரைத்தவன் புதல்வ!
நாணி லாதவ! நவில்சிறு கபாலநீ மறைக்க
எணி லாய்கொலோ வியம்பிய தற்புத மின்றே. கரு.

தேவஸோமை:

ஸ்வாமி! மயிலே மயிலே இறகு போடென்றாற் போடுமா? மெதுவாய்க்கேட்டால் கொடுக்கமாட்டான். ஆகையால் கையிலிருந்து வெடுக்கென்று பிடுங்கிக் கொள்ளுங்கள்; நாம் போவோம்.

கபாலி:

ஆம்! அன்பே! அப்படியே.(பிடுங்கமுயலுகிறான்)

சாக்கியபிக்ஷு:

ஏ! துஷ்ட கபாலிக! நாசமாய்ப்போ!
(கையால் தள்ளிக் காலால் உதைக்கிறான்)

கபாலி:

என்ன! நான் விழுந்துவிட்டேன்.

தேவஸோமை:

தாஸ்யாஃ புத்ரஃ! இதோ நீ மாண்டாய்.
(அவன் தலைமயிரைப் பிடித்திழுக்கப்போய்ப் பிடிப்பில்லாமல் கீழே விழுகிறாள்)

சாக்கியபிக்ஷு:

(தனக்குள்) தலையை மொட்டையடிக்கச்சொன்ன புத்தன் மகா புத்திமான். (வெளிப்படையாக) எழுந்திரு! உபாஸிகே! எழுந்திரு! (தேவஸோமையைக் கையைப்பற்றித் தூக்கிவிடுகிறான்)

கபாலி:

மாகேச்வரர்களே! பாருங்கள், பாருங்கள். இந்த நாகஸேனன் என்னும்பெயருள்ள துஷ்ட பிக்ஷு என் பிரியையைப் பாணிக்கிரகணம்செய்கிறான். *

சாக்கியபிக்ஷு:

ஹா! உபாஸிக! அப்படிச் சொல்லாதே, சொல்லாதே! ஆபத்தில் அன்புபுரிவது எங்கள் தருமமன்றோ?

* கையைப்பிடித்திழுக்கிறான்

MAHAMAHOPADHYAYA, U. V. SWAMINATHAIYAR LIBR... ...VANMIYUR, MADRAS

கபாலி:

என்ன! இதுவும் ஸர்வஜ்ஞ புத்தனுடைய தர்மமா?—நான் முன்னடி விழவில்லையா? நல்லது, அது கிடக்கட்டும். இப்பொழுது உன் கபாலம் என் பிக்ஷா கபாலமாகப்போகிறது, பார். (யாவரும் கலகமிடுகின்றனர்)

சாக்கியபிக்ஷு:

தூக்கம்! தூக்கம்!!

கபாலி:

மாகேச்வரர்களே! பாருங்கள், பாருங்கள்! பிக்ஷு என்று பெயர் பூண்ட இப்புல்லியன், என் கபாலத்தைத் திருடிக் கொண்டு தானே கூக்குரலிடுகிறான். இருக்கட்டும் — நானும் கூச்சலிடுகிறேன். ஐயோ! ஐயோ!!

(பாசுபதன் வருகிறான்)

பாசுபதன்:

ஸத்யஸோம! ஏன் அலறுகிறாய்?

கபாலி:

ஐயா! கீரிப்பிள்ளை போன்றவரே! பிக்ஷு என்ற பெயர் வகித்த இந்தத் துஷ்ட நாகஸேனன் என் கபாலத்தைத் திருடிக்கொண்டு கொடுக்க மாட்டேன் என்கிறான்.

பாசுபதன்:

(தனக்குள்) நாம் செய்ய நினைப்பது கந்தர்வ வழக்கமே. இந்தத் துராத்மா—

கையி லேந்திய புல்லினைக் காட்டியே
காஸி யாவினை யீர்க்குமக் காட்சிபோன்
மெய்யிற் போர்வை விசித்துள காஸினை
விளங்கக் காட்டியிப் பெண்ணை யிழுக்கிறான். கச.

இவள் இந்நாவிதன் வைப்பாட்டியாயினும் என் அன்புக்குப் பாத்திரமாகிறாள்.— ஆதலால், அந்த அயோக்கிய துஷ்டனைத் தூண்டிவிட்டு என்பகையை யொழிக்கிறேன். (வெளிப்படையாய்) ஏ! நாகஸேனா! இவன் சொல்லுகிறபடி தானா?

சாக்கியபிக்ஷு:

ஐயா! தாங்களும் இவ்விதமே சொல்லுகிறீர்களோ? எங்களுடைய கர்மங்களில் முக்கியமானவை, பிறரால் கொடுக்கப்படாததை எடுத்துக்கொள்ளாமை ஒன்று; பொய்சொல்லாமை ஒன்று; பிரமசரியம் தவறாமை ஒன்று; கொலைசெய்யாமைஒன்று; வேளைதவறி உணவு உண்ணாமை ஒன்று. இவை யெல்லாம் மனத்தில், எங்கள் குருவின் உபதேசத்தால், நிலைத்திருக்கின்றன. * புத்தம் சரணம் கச்சாமி.

பாசுபதன்:

நல்லது, ஸத்யஸோமா! அவர்கள் தருமம் அத்தகையது; நீ இதற்கு என்ன சொல்லுகிறாய்?

கபாலி:

என், எங்கள் தர்மம் பொய் சொல்லக் கூடாது என்பது.

* புத்ததருமத்தைச் சரணமடைகின்றேன்.

பாசுபதன்:

இருவர் கொள்கையும் சரி; இவ் விரண்டிற்குள் ஒருவன் தீர்மானிப்பது எங்ஙனம்?

சாக்கியபிக்ஷு:

புத்தனது உபதேசத்தைப் பிரமாணமாகக் கொண்ட ஒருவன் சாராயக்கிண்ணத்தைத் திருடினுன் என்று தீர்மானிப்பது எக்காரணம் பற்றி?

பாசுபதன்:

ஆம். ஹேதுவாதம் செய்பவனுக்கு பிரதிஜ்ஞா மாத்திரத்தினுல் சித்தாந்தம் செய்யமுடியாது.

கபாலி:

பிரத்யக்ஷ விஷயத்தில் ஹேதுவைச் சொல்வது பயனற்றது.

பாசுபதன்:

பிரத்யக்ஷம் என்கிருயே! அஃது எப்படி?

தேவஸோமை:

ஸ்வாமி! அந்தக் கபால பாத்திரத்தைக் கந்தையால் மூடி அவன் கையில்வைத்திருக்கிருன்.

பாசுபதன்:

ஐயா! கேட்டீரா?

சாக்கியபிக்ஷு:

ஓ! ஐயா! இந்தக் கப்பரை என்னுடையதே யன்றி வேறு எவருடையதுமன்று.

கபாலி:

அப்படியானால் அதைக்காட்டு.

சாக்கியபிக்ஷு:

இதோபார். (காட்டுகிறான்)

பாசுபதன்:

மாகேச்வரர்களே! பாருங்கள் ! பாருங்கள் !! இந்தக் கபாலியின் அபிப்பிராயத்தையும் இந்தக் கௌரவமுள்ள சாக்கிய பிக்ஷுவின் நல்லொழுக்கத்தையும்.

சாக்கியபிக்ஷு:

கொடாததை எடாதொழிவது புத்ததேவனுடைய ஆஜ்ஞை. பொய் சொல்லாதது புத்ததேவனுடைய ஆஜ்ஞை.

(கபாலியும் சாக்கியபிக்ஷுவும் கூத்தாடுகிறார்கள்)

சாக்கியபிக்ஷு:

சீ! கெட்டாய். வெட்கப்படவேண்டிய காலத்தில் கூத்தாடுகிறாயே.

கபாலி:

ப்பூ! எவன் கூத்தாடுகிறான்? (நாற்புறமுஞ் சுற்றிப்பார்த்து) ஆகா! திருட்டுப்போன என் பிக்ஷாபாத்திரத்தை மீளப் பார்த்ததால் உண்டான குதூகலமாகிய தென்றலால் அசைகிற சந்தோஷமாகிய கொடியினது அபிநயங்களைக் கண்டு நான் கூத்தாடுவதாக இவன் நினைத்துவிட்டனன். இது நிச்சயம்.

### சாக்கியபிக்ஷு:

ஐயா! இதை நீர் பாராமலிருப்பது எந்தக் காரணத்தினால்? இதன் நிறம் இன்னதென்று நீர் தயவு செய்து பாரும்.

### கபாலி:

இதுவிஷயமாகச் சொல்ல வேண்டியது என்ன இருக்கிறது? எனக்குத் தெரியவில்லையா ?— இந்த மண்டையோடு காக்கையினும் கறுப்பாயிருக்கிறது.

### சாக்கியபிக்ஷு:

அப்படியானால் இதுஎன்னுடையதென்று நீயே ஒப்புக்கொண்டுவிட்டாய்.

### கபாலி:

நிறமாறுட்டஞ் செய்யும் உன் ஸாமர்த்தியம் உண்மையாகவே ஒப்புக்கொள்ளப்பட்டது பார்.

சந்தமரை யின்வெளிய தந்துவி னியன்ற
அந்துகிலம் நின்னரிய ஆற்றலின் விசும்பிற்
பந்தியிருள் சிந்தியெழு பானுவினை மானச்
செந்துவர் நிறம்பெறத் திரித்ததறி யேனோ. க௫.

இன்னும்,

புறம்பும் உள்ளும் பொதிதர நீங்கலா
நிறங்கொள் செந்துவ ராடையி னின்றனை
திறமி தாமின்நிற் சேருங் கபாலநின்
னுறவி னல்நிறம் மாற லொழியுமோ? (க௬).

தேவஸோமை:

ஆகா! துர்ப்பாக்கியமுள்ள நான் கெட்டேன். எல்லா லக்ஷணங்களோடுங்கூடிப் பிரமகபாலத்திற்குச் சமானமாய்ப் பௌர்ணமிசந்திரனையொத்து விளங்குகிறதும், எப்பொழுதும் மதுவாசனை வீசுவதுமான இந்தக் கபாலத்திற்கு இந்த அசேதன பிக்ஷுவின் அழுக்குத் துணிச் சேர்க்கையால் இந்தக் கருநிறம் வந்துவிட்டதே, என்னசெய்வேன். (அழுகிறாள்)

கபாலி:

பெண்ணே! துக்கப்படாதே. அழவேண்டாம். நீளவும் அது சுத்தமாக ஆய்விடும். உயர்ந்த வஸ்துக்கள் மாசடைந்த காலத்திலும் பிராயச்சித்தத்தினால் பரிசுத்தமடைகின்றன. உதாரணமாக,

பிறையதி யணிந்த பெம்மான்
பிரமனார் தலையைக் கிள்ளும்
உறுபெரும் பாவம் நீங்கி
உய்ந்தமை யுணர்கி லாயோ?
மறையறி துவஷ்டா வீன்ற
மைந்தனைக் கொன்ற வானோர்
இறையவன் நூறு யாகம்
இயற்றியே புனித னானான். (கள)

ஹா! பப்ருகல்பா! சரிதானே.

பாசுபதன்:

நீ சொல்வது சாஸ்திர ஸம்மதமானது.

சாக்கியபிக்ஷு:

நல்லது. நீர் சொல்லுகிறபடி நான் வர்ணத்தை மாற்றிவிட்டாலும் இந்தக் கப்பரையின் அமைப்பையும் அளவையும் யார் மாற்றினார்கள்?

கபாலி:

ஐயா! நீங்கள் [1]மாயாவமிசத்திற் பிறந்தவர்களில்லையோ?

சாக்கியபிக்ஷு:

எவ்வளவுநேரம் உம்மோடு வாதுசெய்வது? ஐயா இதை வாங்கிக்கொள்ளும்.

கபாலி:

இந்தவிதமாகவே புத்தனாலும் தானபாரமிதை நிறைவேற்றப்பட்டது.

சாக்கியபிக்ஷு:

இந்த நிலையில் எனக்கு என்ன ஆதாரம்?

கபாலி:

நிஜமாக புத்த தரும சங்கங்களே.

பாசுபதன்.

இந்தவியவகாரம் என்னால் தீர்க்கமுடியாது. ஆகவே நாம் நியாயஸ்தலம் செல்வோம்.

தேவஸோமை:

அப்படியானால், ஐயா! கபாலத்திற்கு நமஸ்காரம்.

---

1 கௌதமபுத்தன் மாயாதேவியின் புதல்வனாதலின் இங்ஙனம் கூறினன்.

பாசுபதன்:

உன் அபிப்பிராயம் என்ன?

தேவஸோமை:

இந்த பிக்ஷு பலமடங்களிலிருந்தும் வரும் வருமானத்தினால் ஏராளமான திரவியம் வைத்திருக்கிறான். அதன் சகாயத்தால் அவன் இஷ்டம்போல நியாயாதிபதிகளின் வாய்க்குப் பூட்டிடுவன். நானோ பாம்புத்தோலும், திருநீறும் செல்வமாகக்கொண்ட ஒரு ஏழைக்கபாலியின் சிஷ்யை. நியாயஸ்தலத்திற்குப் போகும்படி எனக்கு என்ன செல்வம் இருக்கிறது?

பாசுபதன்:

அப்படியில்லை;

நேரிய வலிய பார நிலவிய சீர்த்த சாதி
சேரிய வகைமை சான்ற நிமிரிய தூண்கள் சேணிற்
காருறை மாடந் தாங்குங் கவினிய பரிசில் நீதி
யோரிய உணர்வின் மிக்கோர் உலகினில் ஒளிரு
[வாரால். (கஅ)

கபாலி:

போதும், போதும்; நியாயவழியிற் செல்பவன் ஒன்றுக்கும் அஞ்சவேண்டியதில்லை.

சாக்கியபிக்ஷு:

நல்லது ஐயா! நீர் முன்னாகப்போம்.

பாசுபதன்:

ஆம்! ஆம்! (யாவரும்போகின்றனர்)

மூன்றாம்களம் முற்றிற்று.

---

# நான்காம் களம்

இடம்: காஞ்சியில் மற்றொருவீதி

பாத்திரம்: பைத்தியக்காரன்

---

பைத்தியக்காரன்:

இதோ; இதோ; வெறிநாய்! நெருப்பில் வாட்டிப் பதமாக வதக்கப்பட்ட மாமிசத்தோடு கபாலத்தை யெடுத்துக்கொண்டு ஓடுகிறாயே! தேவடியாள்மகனே! எங்கே ஓடுகிறாய்?—அதோ இப்பொழுது கபாலத்தை வைத்துவிட்டு என்னைக் கடிக்க எண்ணி எதிரில் ஓடி வருகிறாயா? — (நாற்புறமுஞ் சுற்றிப்பார்க்கிறான். கையில் ஒரு கல்லை எடுத்துக்கொள்கிறான்) இந்தக் கல்லால் இதன் பற்களை யுடைத்துப் போடுகிறேன்;— என்ன, கபாலத்தைப் போட்டுவிட்டு ஓடுகிறாய்! ஓகோ! பைத்தியம்பிடித்த துஷ்டநாயே! இவ்வளவு சூரனை என்னிடம் உன்கோபம் செல்லுமா? உனக்குக் கூட ரோஷமா? ஊர் திரிகிற பன்றிமேலே ஏறிக்கொண்டு ஆகாசத்தில் கிளம்பின ஸமுத்திரம் இராவணனைக்கொன்றது! இந்திரன் பிள்ளையான திமிங்கிலம் பலாத்காரமாகப் பிடிக்கப்பட்டது! அடே, கொட்டைச்செடியே! என்னசொல்லுகிறாய்? 'பொய்', 'பொய்' என்றா? அடே, நீண்டு பருத்த உலக்கை போன்ற கைகளுள்ள இந்தத் தவளை எனக்கு ஸாக்ஷி. என்ன! மூன்று உலகமும் அறிந்த பராக்கிரமம் உள்ள எனக்குச் சாக்ஷிகூடத் தேவையா? நான்

இப்படிச் செய்கிறேன்—நாய் தின்றுயிருந்த எச்சில் மாமிசத்தை நான் தின்கிறேன்! (சாப்பிடுகிறான்) ஹோ! ஹோ! (கத்துகிறான்) கண்ணீரால் செத்தேன், செத்தேன்—(அழுகிறான்) யாரடா நீ என்னையடிக்கிறாய்? (சுற்றுமுற்றும்பார்க்கிறான்) துஷ்டப்பயல்களே! நான் யாரோ ஒருத்தனுக்கு மருமானில்லையா? பீமசேனனுக்குக் கடோற்கசன்போல. இதையும் கேள்.

(பாடுகிறான்)

அம்மம்ம நானென்ன செய்வேன்—ஆகா!
அஞ்சி நடுங்கி யலைந்துளம் நைவேன்—அம்.

சூலங்கள் கைகளி லேந்தி—நூறு
சுட்டிப் பிசாசுகள் கூடிப் பலவாம்
கோலங்கள் பூண்டென் வயிற்றில்—வெகு
கும்மாள மிட்டாடிக் கொண்டா னடிக்கும்
ஆனை யடிக்கும் கொடிய—பெரும்
அச்சமுண் டாக்கும் புலியொரு நூறும்
காளஸர்ப் பமுமொரு நூறும்—வாயாற்
கக்கிக்கக் கித்திக்கு முக்கிட்டு நிற்பேன். (கசு)

என்ன, தொந்தரவு செய்கிறார்கள்!—என்னை மன்னியுங்கள்! மன்னியுங்கள்!! குழந்தைப் பிரபுக்களே! இந்த மாமிசத்துண்டுக்காக என்னைத் தொந்தரவுசெய்யாதீர்கள். (எதிரில்பார்க்கிறான்) என்ன! ஓகோ! நமது ஆசாரியர் தூரத்திவருகிறாரே! அவரிடம் ஓடுகிறேன்.

(ஓடுகிறான்)

பாசுபதன்:

அடடா! இந்த பைத்தியக்காரன் இங்கே வருகிறான். இதோ வந்துவிட்டான். (பாடுகிறான்)

களைந்தெறிந்த பலவிதமாங் கந்தைகளாற்
பொத்துண்டு கழித்த சாம்பல்
அளைந்ததெருப் புழுதிபடிந் தனுங்கியதார்
கிடந்தசைய அடர்ந்த ரோமம்
தளைந்துபுற முகளவெச்சிற் சோறுமிழை
தருகாகம் தழுவிச் சார
வளைந்துவரும் பித்தன்மயற் குலியனார
வுருக்கொண்ட மாண்பு போல்வான். (உ0)

பைத்தியக்காரன்:

இவர் கிட்டப்போகிறேன். ( நெருங்குகிறான் ) சுவாமி! இந்தக் கபாலத்தைப் பெற்றுக்கொள்ளுங்கள். இந்தக் கிராமத்துச் சண்டாளனுடைய மரியாதையான நாயினிடமிருந்து கிடைத்தது. இதை வாங்கிக் கொள்ளுங்கள்.

பாசுபதன்:

தக்க யோக்கியனைப் பார்த்துக் கொடு.

பைத்தியக்காரன்:

மகாப்பிராமணா! தயவுசெய்யவேண்டும்.

சாக்கியபிக்ஷு:

இந்த மகாபாசுபதர் இதற்குத் தகுந்தவர்.

பைத்தியக்காரன்:

(கபாலியை நெருங்கிக் கபாலத்தை கீழேவைத்துப் பிரதக்ஷிணம் செய்து நமஸ்கரிக்கிறான்) மகாதேவ மூர்த்தி! அன்புடன் தயவுசெய்யவேண்டும். கைகூப்பித் தொழுகிறேன். *

கபாலி:

நம்முடைய கபாலம்! பார்த்தையா!

தேவஸோமை:

ஆம்! ஆம்! அதுதான்!

கபாலி:

கடவுளுடைய திருவருளால் மறுபடியும் கபாலியாய்விட்டேன். (எடுக்க முயற்சிக்கிறான்)

பைத்தியக்காரன்:

தேவடியாள்மகனே! விஷத்தைச் சாப்பிடு! (கபாலத்தைப் பிடுங்கிக்கொண்டு போகிறான்)

கபாலி:

(அவனைப் பின்தொடர்ந்து) இந்தக் காலதூதன் எனது உயிரைக் கொண்டுபோகிறானே! பெரியோர்களே! அவனைப் பிடிக்க உதவிபுரியுங்கள்.

இருவரும்:

ஆகா! அப்படியே காரியம் செய்கிறோம். (யாவரும் வழிமறிக்கிறார்கள்)

---

* அஞ்சலியஸ்தனுகிறேன்.

கபாலி:

அடே! நில்! நில்!!

பைத்தியக்காரன்:

ஏன் என்னை வழிமறிக்கிறீர்கள்?

கபாலி:

எங்கள் கபாலத்தைக் கொடுத்துவிட்டு ஓடிப்போ.

பைத்தியக்காரன்:

ஏ! மூடா! இது ஸ்வர்ண பாத்திரமாச்சே! தெரிய வில்லையா?

கபாலி:

ஸ்வர்ணபாத்திரமானால் யார் செய்தது?

பைத்தியக்காரன்:

ஸ்வாமி! நான் சொல்லுகிறேன். அந்தப் பீதாம்பர தாரியான தட்டான் செய்தான். இது ஸ்வர்ணபாத் திரம்.

சாக்கியபிக்ஷு:

என்ன சொல்லுகிறாய்?

பைத்தியக்காரன்:

இது ஸ்வர்ண பாத்திரம்.

சாக்கியபிக்ஷு:

பைத்தியக்காரனா?

பைத்தியக்காரன்:

திரும்பித்திரும்பிப் பைத்தியக்காரசப்தம் காதில் விழுகிறது.—இதை வாங்கிக்கொண்டு பைத்தியக்காரனைக்காட்டு. (கபாலத்தைக் கபாலிகையிற் கொடுக்கிறான்)

கபாலி:

(கபாலத்தை வாங்கிக்கொண்டு) அவன் அந்தச் சுவருக்குப் பின்புறம் இருக்கிறான். சீக்கிரம் தொடர்ந்து போ.

பைத்தியக்காரன்:

அநேக நமஸ்காரம். (வேகமாய் ஓடுகிறான்)

சாக்கியபிக்ஷு:

என்ன ஆச்சரியம்! என் விரோதிக்குண்டான லாபத்திற்குச் சந்தோஷமடைகிறேன்.

கபாலி:

(கபாலத்தை யணைத்துக்கொண்டு பாடுகிறான்)

உள்ளவின்ப மெல்லாம் உடன்கொண் டொளித்தாய்நீ
கள்ளனலை யோவென் கபாலமே கண்வளராய்! (உ௧

திண்ணமே நீங்கின்று சேமமாய் மீண்டாயே
கண்ணேயென் செல்வக் கபாலமே கண்வளராய்! (உ௨

நற்றவனும் நானே நடேசனருள் பெற்றேனே
கற்றவர்க ளேத்துங் கபாலமே கண்வளராய்! (உ௩

தேவஸோமை:

பகவானே! சந்திரனோடு கூடின ராத்திரிபோலச் சுவாமியைப்பார்க்கிற என்னுடைய கண் இப்பொழுது ஆநந்தம் அடைகிறது.

பாசுபதன்:

ஐயா! உமது அதிருஷ்டத்தைக் கண்டுமகிழ்கிறேன்.

கபாலி:

உண்மையாக ஆநந்தம் உங்களுக்கே.

பாசுபதன்:

(தனக்குள்) இன்று இந்தப்பிக்ஷு புலிவாயில்நின்று தப்பினான். 'நிர்த்தோஷிகளுக்குப் பயமில்லை' என்ற வசனம் உண்மை, உண்மை. (வெளிப்படையாக) என் நண்பனுக்கு உண்டான நன்மையைக்கருதிப் பரமாநந்த மடைகிறேன். குணவாயிற் கோட்டத்துப் பகவானுடைய [1]தூமகாலத்தை எதிர்பார்த்து நிற்கிறேன். இன்றுமுதல,

(பாடுகிறான்)

பாசுப தேசற்கும் பார்த்தனுக் கும்பண்டு
பாரினி லுண்டான போரினைப்போல்
நேசமா கிப்பகை நீங்கி யிருவரும்
நீடூழி தோறுநீர் வாழியரோ. (௨௪)

---

1- தூமகாலம்-தூமவேளை, தூமகால மென்பன, ஒருபொருளன; ஸ்மசானத்தில் பிணமெரிக்கும் புகை சூழ்ந்துள்ள காலத்தில் அங்குச் சஞ்சரிக்கவேண்டு மென்பது பாசுபதரின் மத விதிகளுள் ஒன்று.

கபாலி:

நண்ப, நாகஸேசனு! நான் செய்த குற்றத்தை மன்னித்து என்னைப் பொறுத்தருள்க.

சாக்கியபிக்ஷு:

இது கேட்டுக்கொள்ள வேண்டியதில்லையே. உன்னை மகிழ்விக்க நான் என்ன செய்யவேண்டும்?

கபாலி:

ஐயா! நீர் என்குற்றத்தைப் பொறுத்தருள்வதைக் காட்டிலும் வேறு என்ன வேண்டும்?

சாக்கியபிக்ஷு:

நான் உத்தரவு பெற்றுக்கொள்கிறேன்.

கபாலி:

ஐயா! வந்தனம். மீளவும் சந்திக்கவேண்டும்.

சாக்கியபிக்ஷு:

அங்ஙனமே.

கபாலி:

என் அன்பே! நாமும் போவோம்.

(யாவரும் செல்லுகின்றனர்)

நான்காம்களம் முற்றிற்று.

## பரதவாக்கியம்

மன்னுயிர்கள் மகிழ்சிறக்க வழிவ ழாது
வன்னியவி யேற்றிடுக வந்த ணாளர்
பன்னுமறை யொலிபயில்க பசுக்கள் மல்கிப்
பல்குகவிவ் வுலகுபிறப் பொழுக்க மேவித்
துன்னுகநன் முயற்சிசசி யுடுக்க ணுள்ள
துணையுமிடர் தவிர்கபகை யடக்கி நாளும்
நன்னரர சாட்சிபுரி [1] சத்ரு மல்லன்
நலங்குலவிப் புகழ்நிலவி வாழ்க மாதோ.

சுபம்

திருச்சிற்றம்பலம்

---

1. சத்ருமல்லன்-மகேந்திர விக்கிரம பல்லவனின் பட்டப் பெயர்களுள் ஒன்று.

PRINTED AT THE S. K. S. PRESS, CDM. 1—5—'32.

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய். | பக். | செய். | பக். |
|---|---|---|---|
| அம்மம்ம | 35 | சந்தமரை | 30 |
| இவனொரு | 1 | சிவனார்தம் | 13 |
| உண்ணும் | 16 | சீரமர் | 6 |
| உலகமொரு | ix | தத்துவமுணர் | 11 |
| உலகினின் | 5 | திண்ணமே | 39 |
| உள்ளவின்ப | 39 | நற்றவனும் | 39 |
| கவிதையே | 5 | நேரியவலிய | 33 |
| கள்ளோபுண்ண | 8 | பாசுபதேச | 40 |
| களைந்தெறிந்த | 36 | பார்ப்பார் | 21 |
| காணலாவதோர் | 24 | பிறைமதி | 31 |
| காதளாவிய | 3 | புறம்பும் | 30 |
| காரியத்தி | 9 | பொருளினன் | [illegible] |
| கையிலேந்திய | 27 | மன்னுயிர்கள் | 4[illegible] |


# பிழை திருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தம். |
|---|---|---|---|
| i | 18 | பஷையின் | பாஷையின் |
| ii | 6 | இச் ஸிம்ஹ | இச் சிம்ம |
| ix | 13 | கல்வியீ கையே | கல்வி யீகையே |
| 2 | 23 | பெரிய | பெயரிய |
| 3 | 24 | காதுற்வி | காதுவிற் |

# நளசக்ரவர்த்தி

(ஒரு நாடகம்)

7009

இது

தஞ்சாவூர் ஸெயின்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ப்பண்டி

வையை, R. சுப்பிரமணியையர்

இயற்றியது

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

சென்னபட்டணம்:

எஸ். பி. ஸி. கே. அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

1912

Price, As. 4.] [விலை, அ

All Rights Reserved

# இப்புத்தகத்தில் அடங்கியவை.


1. முகவுரை.
2. காட்சி, இடம், விஷயம்.
3. பாத்திரங்கள்.
4. ஊர்கள்.
5. ராஜவாழ்த்து.
6. நளசக்ரவர்த்தி (நூல்).
7. முதற்குறிப்பு (செய்யுள், கீர்த்தனம்)
8. அரும்பதவுரை.
9. விதூஷகன்.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41
1004

# முகவுரை.

நமது தமிழ்நாட்டில் பிரசித்திபெற்று விளங்கும் பல சரித்திரங்களுள், சந்திரவம்சத்து அரசனாகிய நளசக்ரவர்த்தியின் சரித்திரமும் ஒன்று. இந் நளன் மற்றொருவரைப் பணியாது தரணியாண்ட ஆறு சக்ரவர்த்திகளுள் ஒருவனாகக் கணக்கிடப்பெற்றிருக்கின்றான். அன்றியும், வரையாது கொடுக்கும் வள்ளல்களாகிய முதலெழுவள்ளல், இடையெழுவள்ளல், கடையெழுவள்ளல் என்னும் மூவெழு வள்ளல்களுள், முதலெழுவள்ளல்களில் ஒருவனாகவும் கணக்கிடப் பெற்றிருக்கின்றான். ஐந்தாம்வேதமாகிய மகாபாரதத்தில் இந் நளசக்ரவர்த்தியின் சரித்திரம் கூறப்பட்டிருப்பதும் யாவரும் அறிந்ததேயாம்.

இத்தகைய பெருமைவாய்ந்த நளசக்ரவர்த்தியின் சரித்திரத்தை அரங்கில் (Stage) நடித்தற்கு ஏற்ற நாடகரூபமாகச் செய்துதர வேண்டுமென்று "ஸெயின்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூல் தமிழ்ச்சங்க"த்து மாணவர்கள் கேட்க அவர்கள் சொல்லை மறுக்கமாட்டாது என் அறிவிற் கேற்றபடி இந் நூலைச் செய்து தந்தேன்.

இந் நாடகமானது — நமது மகாராஜ சக்ரவர்த்தியவர்களுக்கு டில்லிமாநகரில் நடந்த மகுடாபிஷேகத்தின் ஞாபகார்த்தமாக, 1911-ஆு டிஸம்பர்மீ 23உ ஸேயின்ட் பீட்டர்ஸ் ஹைஸ்கூலில் நடந்த கொண்டாட்டத்தில்—மேற்படி சங்கத்தாரால் நடித்துக்காட்டப்பெற்றது.

அரங்கில் எளிதாக நடித்துக்காட்டுவதற்கு ஏற்பவும், இக்காலத்து உலக இயல்புக்கு ஏற்பவும் கதையை உரிய இடங்களில் மாற்றியிருப்பதோடு, மூன்றுமணிநேரத்திற்குள் நாடகத்தை முடிப்பதற்கு ஏற்றபடி கதையைச் சுருக்கியும் இந் நாடகம் அமைக்கப்பெற்றிருக்கின்றது. இவ்வாறு செய்வது நாடகநூல்களுக்கு இயல்பேயொழிய புதிதன்று.

ஏற்ற இடங்களில் **செய்யுட்களும் கீர்த்தனங்களும்** அமைக்கப் பெற்றிருக்கின்றன. ஆயினும் பெரும்பான்மையான பாகம் வசனமே.

வசனத்தில் கொச்சையாய்ப் (Colloquial) பேசவேண்டிய சில இடங்களை அவ்வாறன்றி ஒழுங்கான நடையிலேயே எழுதியிருக்கின்றேன். ஏனெனில், இந்நாட்டில் அவ்வாறான பேச்சுக்கள் இடத்துக்கிடம் வேறுபட்டிருப்பதனால், ஒருவர் எழுதிய கொச்சை நடையை மற்றொருவர் எளிதில் வாசித்தறியக் கூடவில்லை; அன்றியும் இந் நாடகத்தை நடித்துக்காட்ட விரும்புவோர் அவ்வவ்விடத்து வழக்கத்துக்குத் தக்கபடி அந்தப் பேச்சுக்களை மாற்றிக்கொள்ளவேண்டியவர்களாகவும் இருக்கிறார்கள். அதனால் இந் நாடகத்தில் அப்படிப் பட்ட இடங்களில், கொச்சையாய்ப் பேசவேண்டுமென்று எச்சரித்து மாத்திரம் இருக்கின்றேன்.

இந் நூலில் — **தெய்வபக்தி**, **ராஜநீதிமம்**, **பெண்கல்வி**, **கைத்தொழில்**—முதலிய பல விஷயங்களும் ஆங்காங்கு பிரஸ்தாபிக்கப் பட்டிருக்கின்றன. இது சிறுநூலாதலின் யாவரும் வாசித்தறிதல் எளிதாயிருக்குமாதலால், இந்த முகவுரையை இவ்வளவோடு நிறுத்திக்கொள்ளுகிறேன்.

தஞ்சாவூர், 27-1-1912. } **வையை, R. சுப்பிரமணியையா.**

Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41
1007

# காட்சி, இடம், விஷயம்.

1. மாவிந்தநகரம் — நளசக்ரவர்த்தி ஸபையில் வீற்றிருத்தல்; ரிஷிகள் சக்ரவர்த்தியைக் கண்டு பேசுதல்.
2. விதர்ப்பபுரி—தமயந்தியின் கருத்தைத் தோழி அறிந்து பீமராஜருக்கு அறிவித்தல்.
3. விதர்ப்பபுரி—சேவகனும் விகடகவியும் அரசர்களைக்குறித்துப் பேசிக்கொள்ளுதல்.
4. விதர்ப்பபுரி—தமயந்தி சுயம்வரம்.
5. மாவிந்தநகரம்—தமயந்தி தன் குழந்தைகளின் கல்வியைக் கவனித்தல்.
6. மாவிந்தநகரம்—நளன் புஷ்கரனோடு சூதாடல்.
7. மாவிந்தநகரம்—நளன் தன் குழந்தைகளை விதர்ப்பபுரிக்கு அனுப்புதல்; அன்றியும், நளன் தன்பொருட்டு வருந்தும் மந்திரி முதலியோரைத் தேற்றுதல்.
8. காடு—நளனும் தமயந்தியும் காட்டிற் செல்லுதல்.
9. காடு—நளன் தமயந்தியைப் பிரிதல்.
10. விதர்ப்பபுரி—பீமராஜன் நளதமயந்திகளைத் தேடும்படி புரோகிதர்களை அனுப்புதல்.
11. காடு—தமயந்திக்கு நேர்ந்த ஆபத்து.
12. காடு—தமயந்தி தாய்வீடு செல்லல்.
13. சாலை — இரண்டு தொழிலாளிகள் நளனுடைய தொழிற் கல்வியைக்குறித்துப் பேசிக்கொள்ளுதல்.
14. அயோத்தியை அடுத்த காடு—வாகுகன் புலம்பல்; புரோகிதர்கள் அவன் செயலைக் கண்டு நளன் என நிச்சயித்தல்.
15. அயோத்தி — ருதுபர்ணரிடம் 'தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம்' என்று தெரிவித்தல்.
16. விதர்ப்பபுரி — தமயந்தி தனது கணவன் வரவை எதிர் பார்த்தல்.
17. விதர்ப்பபுரி—நளன் தனது உண்மை வடிவத்தை வெளிப்படுத்தல்.
18. மாவிந்தநகரம் — நளன் புஷ்கரனோடு மறுசூதாடி நாடு பெறுதல்.

19. மாவிந்தநகரம் — அரண்மனைச் சேவகனுக்கும் புஷ்கரனுடைய கொடிபிடிப்போனுக்கும் தர்க்கம்.

20. மாவிந்தநகரம் — நளசக்ரவர்த்தி பழையபடி அரசாளத் தொடங்குதல்.

## பாத்திரங்கள்.

[கடைசி எண்கள் அவர் காணப்பெறும் காட்சியின் எண்கள்.]

1. **நளன்**—நிஷததேசத்து அரசன். 1, 4, 6, 7, 8, 9, 17, 18, 20.
2. **வாகுகன்** — இவன் நளனே. தேர்ப்பாகனாக மாறுவேடம் பூண்டுகொண்டபொழுது நளன் இவ்வாறு பெயர் வைத்துக் கொண்டான். 14, 15, 17.
3. **பீமன்** — விதர்ப்பதேசத்து அரசன்; தமயந்தியின் தந்தை. 2, 4, 10, 17.
4. **புஷ்கரன்** — நளசக்ரவர்த்தியின் கீழ்ப்பட்ட சிற்றரசர்களுள் ஒருவன்; நளனுக்குத் தம்பிமுறையும் உள்ளவன். 6, 18.
5. **ருதுபர்ணன்**—அயோத்தி அரசன். 4, 15, 17.
6. **குருக்ஷேத்ர அரசர்**—
7. **பாஞ்சால தேசாதிபதி**—
8. **கேகய தேசாதிபதி**—
9. **ஸிந்து தேசாதிபதி**—
10. **கலிங்க தேசாதிபதி**—
11. **காந்தார தேசாதிபதி**—

(6–11:) தமயந்தியின் சுயம்வரத்துக்கு வந்திருந்த அரசர்கள். 4.

12. **தமயந்தி**—நளன் மனைவி; பீமன் மகள். 2, 4, 5, 7, 8, 9, 11, 12, 16, 17, 20.
13. **கேசினி (தோழி)**—தமயந்தியின் தோழி. 2, 4, 5, 16, 17, 20.
14. **இந்திரஸேனன்**—நளன் புத்திரன். 5, 7, 17, 20.
15. **இந்திரஸேனை**—நளன் புத்திரி. 5, 7, 17, 20.
16. **அச்சுதர் (புரோகிதர்)**—நளன் ஸபையில் கடவுள் வாழ்த்துச் சொல்லுகின்றவர். 1, 20.

TIRUVANMIYUR MADRAS-41 

17. **ஸுசீலர்**—பீமனுடைய புரோகிதர்களுள் ஒருவர். 7, 10.
18. **ஸுதேவர்**— மேற்படி 10, 12, 14.
19. **ஸுநாமர்**— மேற்படி 10, 14, 15, 17.
20. **மாதவர்**— மேற்படி 10.
21. **மந்திரி**—நளனுடைய மந்திரி. 1, 6, 7, 20.
22. **உபமந்திரி**—நளனுடைய இரண்டாம் மந்திரி. 1, 6, 7, 20.
23. **கணக்குப்பிள்ளை** — நளனுடைய உத்யோகஸ்தர்களுள் ஒருவர். 1, 6, 7, 18.
24. **கொடிபிடிப்போன்** — புஷ்கரனுடைய சூதாட்டக் கொடி பிடிப்பவன். 6, 18, 19.
25. **விகடகவி**—பீமராஜருடைய விகடகவி. 3.
26.–28. **சேவகர்கள்** — நளனுடைய அரண்மனைச் சேவகன்; 1, 6, 18, 19, 20. பீமராஜருடைய அரண்மனைச் சேவகன்; 3. ருதுபர்ணனுடைய அரண்மனைச் சேவகன். 15.
29.–30. **வேடர்கள்** — ஒருவன் கிழவன், ஒருவன் குமரன்; தமயந்தியைக் காட்டில் சந்தித்தவர்கள். 11.
31.–32. **தொழிலாளிகள்** — ஒருவன் மூத்தவன், ஒருவன் இளையவன்; நளனுடைய தொழிற்கல்வியைக்குறித்துப் பேசிக்கொண்டவர்கள். 13.

**ரிஷிகள் நால்வர்**—தீர்த்தயாத்திரையாக வருகிறவர்கள். 1.
**பெரியோர்கள்**—நிஷததேசத்துக் குடிகள். 20.
**பாடகர்கள்**—நளனுடைய அரண்மனைப் பாடகர். 20.
**தோழிகள்**—தமயந்தியின் தோழிகள். 4.
**உத்யோகஸ்தர்கள்**—நளனுடைய உத்யோகஸ்தர்கள். 1, 7, 20.

## ஊர்கள்.

1. மாவிந்தநகரம் — **நிஷததேசத்து** ராஜதானி.
2. விதர்ப்பபுரி — **விதர்ப்பதேசத்து** ராஜதானி.
3. அயோத்தி — **கோஸலதேசத்து** ராஜதானி.

# ராஜவாழ்த்து.

(ஆசிரிய விருத்தம்.)

உலகெலாந் தாங்குமோ ருயிரா யுயிர்க்கெலாம்
ஒளிதிக ழுடம்பு மாகி
ஒருபெருந் தெய்வத்தி னருமைபெறு மதிகாரம்
உலகில்வரு வழியு மாகி

அலகிலா முடிமன்ன ரடிநிழலி லுறையவே
அரசாளுந் தருவு மாகி
அருள்வல்லி யாம்மேரி யம்மையுடன் வாழும்நம்
அரசசக்ர வர்த்தி வாழி

மலர்குலாந் திருமங்கை மணவாள ரெனநமது
மகிமைபெறு நூல்க ளெல்லாம்
வாழ்த்துமத னுக்கிசைய மாறுத பரிதியொளிர்
வளநாடர் வாழி வாழி

பலர்குலா மிப்பரத கண்டத்தின் ஏகாதி
பத்யங்கொள் மூவ ருளுமிப்
பாரில்முன் முடிசூடும் ஜார்ஜ்-சக் கரவர்த்தி
பல்லூழி வாழி வாழி.

[மாறுத பரிதி யொளிர் வளநாடு — அஸ்தமிக்காத சூரியன் விளங்குகிற வளப்பம்பொருந்திய நாடு ("The Sun never sets in the British Empire"). ஏகாதிபத்யங் கொள் மூவர் — மாட்சிமைதங்கிய விக்டோரியா சக்ரவர்த்தினியாரவர்கள், எட்வர்ட் சக்ரவர்த்தியவர்கள், ஜார்ஜ் சக்ரவர்த்தியவர்கள். இப்பார்—இந்தியா.]

1047

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY
TIRUVANMIYUR, MADRAS-41

# நளசக்ரவர்த்தி.

## முதலாவது காட்சி.

விஷயம்: 1. நளசக்ரவர்த்தி ஸபையில் வீற்றிருத்தல்.
2. ரிஷிகள் சக்ரவர்த்தியைக் கண்டு பேசுதல்.

இடம்: நிஷததேசத்தின் ராஜதானியாகிய மாவிந்தநகரத்து அரண்மனையில் ராஜஸபை.

பாத்திரங்கள்: நளசக்ரவர்த்தி, மந்திரி, மற்றும் சில உத்தியோகஸ்தர்கள், புரோகிதர் (அச்சுதர்), நான்கு ரிஷிகள், சேவகன்.

[நளனும் மற்ற உத்தியோகஸ்தர்களும் உட்கார்ந்திருக்கிறார்கள். அப்பொழுது புரோகிதர் வருகிறார். வந்தவுடன் யாவரும் எழுந்து கைகூப்பி வணங்குகிறார்கள். புரோகிதர் ஆசீர்வாதஞ் செய்து, கடவுள்வாழ்த்துச் சொல்லக் கைகூப்பிக்கொள்ளுகிறார். யாவரும் கைகூப்பிக்கொள்ளுகிறார்கள்.]

### கடவுள் வாழ்த்து.

புரோகிதர்— (அகவல்.)

உலகெலாம் படைத்த ஒருதனிப் பொருளே!
அலகிலா உயிர்க்கும் அமுதளிப் பவனே!
வேந்தனாய் நின்று மிகுமுயிர்க் கெல்லாம்
சாந்தமாம் கருணைத் தண்மழை பொழிவோய்!

எங்கள்உள் ளத்தில் இருந்துநின் செயலைத்
துங்கமாய்க் காட்டித் துணைசெயுந் தேவே!
விளைவும் பொன்னும் மிகமிகச் செழித்துக்
களையெலாந் தீர்ந்துயிர் களிக்கவுஞ் செய்வோய்.
நின்னடி போற்றி! நின்னடி போற்றி!
நின்னருள் வெல்க! நின்னருள் வெல்க!
நீ, பல்லூழி வாழி! வாழி!
எல்லாமும் வாழிநின் இன்னரு ளாலே!

[இவ்வாறு கடவுள்வாழ்த்துக் கூறி முடித்ததும் புரோகிதர் போகத் தொடங்குகிறார். யாவரும் அவருக்கு வணங்குகிறார்கள். அவரும் ஆசீர்வாதஞ் செய்து போகிறார். உடனே எல்லாரும் உட்காருகிறார்கள். நளசக்ரவர்த்தி பேசத்தொடங்குகிறார்.]

**நளன்**—மந்த்ரீ!

**மந்திரி**—மகராஜ்!

**நளன்**—ஆ ஆ! தெய்வ வழிபாட்டின் பயனை நான் என்னவென்று சொல்வேன்! நாம் எவ்வளவோ சட்டதிட்டங்களையெல்லாம் ஏற்படுத்தியிருக்கிறோம். அவைகளெல்லாம் உபயோகமுள்ளவைகள்தாம் என்பதில் தடையில்லை. ஆயினும், ஒருவன் மனதில் உண்மையான தெய்வபக்திமாத்திரம் இருக்குமாயின் அது செய்யும் வேலையை நம்முடைய சட்டங்களெல்லாம் கூடினாலும் செய்ய முடியுமா? ஒருபோதும் முடியாது. உண்மை யன்பு இல்லாதவனை வெளிக்கட்டுக்கள் என்னசெய்யும்! தெய்வபக்தி எவ்வளவுக்கெவ்வளவு வளருமோ அவ்வளவுக்கவ்வளவு நமது சட்டங்களுக்கு உள்ள பாரம் குறையும். தெய்வபக்தியாகிய தாய்தான் நமது சட்டங்களாகிய குழந்தைகளைக் கால் நோகாதபடி தூக்கிச் செல்லல் வேண்டும்.

(வெண்பா.)

எத்தனைதான் கைகால் இரும்பாற் பிணிக்கினும்உள்
ளத்தனையாம் அன்பிற்கீ டாகுமோ—சுத்தமுள
அந்தஓ ரன்பே அரசர் சுமையையெல்லாம்
ஸந்ததமும் லேசாக்கும் தாய்.

ஆ! ஆ! அன்பு ஒருவன் மனதைப் பதப்படுத்துவது போல அவ்வளவு பதப்படுத்த, தேவர்களாலும் ஆகாதே! அப்படியாயின், நம்மால் முடியாதென்பது ஒரு அதிசயமோ! ஆதலால், அந்த அன்பே நமது சட்டத்துக்கு உயிர். அப்படிப்பட்ட தெய்வபக்தி வளர்வதற்கு உரிய முயற்சிகள் நமது நாட்டில் நன்றாய் நடைபெற்று வருவதற்கு நான் மிகவும் மகிழ்ச்சியுள்ளவனாக இருக்கிறேன்.

இன்னும், மந்த்ரீ! கூன் குருடு முதலிய எளியவர்களை ஆதரிப்பதும் ஒருவகைத் தெய்வவழிபாடே யொழிய வேறில்லை. தெய்வ அன்பு ஒருவன் உள்ளத்தில் இருப்பது உண்மையாயின் அவன் எப்படி எளியவர்களை ஆதரிக்காமல் இருப்பான்? எளியவர்களுக்கு இரங்காத ஒருவனுடைய தெய்வவழிபாடு உண்மையான வழிபா டாகாது.

(வெண்பா.)

எளியார்க் கிரங்குவதே ஈசன்றன் பூசை
எளியார்க் கிரங்கிலனே யென்னில்—களியார்ந்து
வான்விழுங்கும் தெய்வத்தை வாழ்த்துவது போல்எல்லாம்
தான்விழுங்கும் தந்திரமே தான்.

ஆதலின், எளியார்க்கு இரங்குவது கடவுள்வழிபாட்டின் ஒரு முக்கியமான அம்சம் என்று யாவரும் உணர்ந்திருப்பாராக. இதுநிற்க;

மந்த்ரீ! நமது நாட்டுச் சங்கங்களெல்லாம் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றனவா?

மந்திரி—மகராஜ்! எல்லாம் ஸமுகத்து ஆஜ்ஞையால் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன.

நளன்—மந்த்ரீ! நமக்குள்ள செல்வங்களெல்லாம் அச் சங்கங்களேயாம். அவயவங்கள் இல்லாவிட்டால் எப்படி உடம்பு இல்லையோ அப்படியே அச் சங்கங்கள் இல்லாவிட்டால் அரசாட்சியே இல்லை. ஆதலின், அத்தகைய சங்கங்கள் நீடூழி வாழ்வனவாக.

இன்னும் தொழிற்சாலை, வர்த்தகசாலை, கல்விச்சாலை முதலிய எல்லாம் நன்கு கவனிக்கப்பட்டு வருகின்றனவா?

**மந்திரி**—மகராஜ்! எல்லாம் நன்கு கவனிக்கப்பட்டு வருகின்றன.

**நளன்**—மந்த்ரீ! மற்றொரு முக்கியமான விஷயம். நமது பரிஜனங்களால் குடிகளுக்கு யாதொரு இடையூறும் இன்றி நன்கு கவனிப்பீராக. நமது கண்ணுக்கு உற்றாரென்றும் அயலாரென்றும் உண்டோ? குடிகள் யாவரும் அரசனுடைய மக்கள்; அவருள்ளும் எளியவர்கள் அரசனுடைய கைக் குழந்தைகள் என்பதை யாவரும் நன்கு உணர்வாராக.

எளியவர்கள் வலியவர்களால் வருத்தமடையாதபடி காப்பதற்குத்தான் இவ்வளவெல்லாம் ஏற்பட்டதேயொழிய வேறு இதில் நுட்பம் ஒன்றும் இல்லை.

மந்த்ரீ! நீர் அறியாதது என்ன இருக்கிறது? நம்முடைய முயற்சிகளுக்கெல்லாம் கடவுள் உதவிசெய்வாராக. நல்லது, போய்வாருங்கள். அவரவர்களுக்கு உரிய தொழில் நன்றாய் நடக்கட்டும்.

[யாவரும் எழுந்து அரசனை வணங்கிப் போகிறார்கள். சக்ரவர்த்தி மாத்திரம் வீற்றிருக்கிறார்.]

**சேவகன்**—மகராஜ்! சில ரிஷிகள் ஸமுகத்தைக் காண வந்திருக்கிறார்கள்.

**நளன்**—வரட்டும்.

[ரிஷிகள் வருகிறார்கள். அவர்களைக் கண்டவுடன் அரசன் எழுந்து எதிர்கொண்டு]

நமஸ்காரம்; வரவேண்டும் வரவேண்டும். (என்று சொல்லிக்கொண்டே அவர்கள் கொடுக்கும் காணிக்கைகளைப் பெற்றுக் கொண்டு, பீடங்களைக் காட்டி) எழுந்தருளவேண்டும்.

[இவ்வாறு சொல்ல, ரிஷிகளும் ஆசீர்வதித்து உட்கார்ந்து, அரசனை உட்காரச்சொல்ல, அரசனும் உட்காருகிறான்.]

நளன்—மகரிஷிகளே! உங்களுடைய வரவால் என் மனம் மிகுந்த ஆறுதல் அடைகின்றது. குளிர்ந்த மேகம் உலாவும்போது அதன் நிழல் பட்ட இடமும் குளிர்வது இயல்புதானே. உங்கள் வரவு நல்வரவாகுக. உங்கள் தவங்கள் குறைவின்றி நடக்கின்றனவா? துஷ்டர்களால் யாதொரு தீங்கும் இல்லையே?

ரிஷிகளுள் ஒருவர்—மகாராஜா! தங்களுடைய ஆளுகையில் எங்களுக்கு என்னகுறைவு; எங்கள் தவங்களெல்லாம் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன.

மற்ரெரு ரிஷி—மகாராஜா! தங்களைக் கண்டதனால் நாங்கள் மிகுந்த மகிழ்ச்சியை அடைகிறோம். நாங்கள் வேறு எதைத் துறந்தாலும் தர்மத்தைத் துறக்கக் கூடுமோ? அது கூடாதவரையில் அரசனைத் துறக்கவும் எங்களால் ஆகாது. நாங்கள் எவ்வளவு தர்மங்களை எழுதிவைத்தபோதிலும் அவைகளையெல்லாம் அநுபவத்துக்கு வரச் செய்யவேண்டியவர் தாங்களா யிருக்கிறீர்கள். கடவுளாகிய தோட்டக்காரர் ரிஷிகளாகிய தட்டில் புருஷார்த்தங்களாகிய பழங்களை வைத்திருக்கிறார். ஆயினும், அவற்றை விற்று ஜனங்களை உண்பிக்கும்படி செய்ய, தங்களையல்லவோ நியமித்திருக்கிறார். ஆதலால் அரசன் கேவலம் மனிதனல்ல; தெய்வத்துக்கும் மனிதர்களுக்கும் மத்தியி லிருப்பவன். தங்களுடைய தேஜஸ் கடவுள் தேஜஸ்தான். எங்களுடைய உயிர் தர்மம்; எங்களுடைய உடல் அரசன். ஆகையால், மகாராஜாவே! தங்களுடைய க்ஷேமத்தைக் காண எங்களுடைய கண்கள் களிக்கின்றன.

தங்களுக்கு விரைவில் விவாகம் நடந்து தங்களுடைய அருமைக் குழந்தைகளையும் காண எங்களுடைய கண்கள் அவாவுகின்றன. தங்களுடைய பரம்பரையையன்றே உலகம் நம்பியிருக்கிறது. கடவுள் விரைவில் திருவருள் புரிவாராக.

நளன் — எல்லாம் பெரியோர்களுடைய ஆசிர்வாதம். இன்னும் எனக்கு அறிவிக்கவேண்டிய புத்திமதிகள் ஏதாவது உண்டானல் அடியேனுடைய பாக்கியம்.

**ரிஷிகளுள் மூன்றுமவர்**—மகாராஜா! நாங்கள் பலவிடங்களிலும் தீர்த்தயாத்திரை செய்துகொண்டு வருகிறோம். விதர்ப்பதேசாதிபதியாகிய பீமராஜருடைய மகள் தமயந்தியைக்குறித்து மிக வியந்து பேசிக்கொண்டார்கள். நாங்களும் நேரில் பார்த்தோம். அவளுடைய அழகுக்கு அளவில்லை. அவளுடைய குணங்களுக்கோ அளவே யில்லை. அவளுடைய பெற்றோர்களின் நற்குணங்களுக்கு அவள் தக்க ஸாக்ஷியா யிருக்கிறாள்.

மகாராஜா! தாங்கள் அநேக சுயம்வரங்களுக்குப் போகாமலே இருந்துவிட்டீர்கள் என்பதை நாங்கள் அறிவோம். ஆயினும் தமயந்திக்குச் சுயம்வரம் நடந்தால் தாங்கள் அவசியம் போகவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம். இது நாங்கள் உலக நன்மையின்பொருட்டுச் சொன்னதேயொழிய வேறில்லை. தங்களுக்கு மங்களம் உண்டாவதாக. போய் வருகிறோம் மகாராஜா! உத்தரவு கொடுக்கவேண்டும். (என்று எழுந்திருக்கிறார்கள்.)

**நளன்** — (எழுந்திருந்து கைகூப்பிக்கொண்டு) நமஸ்காரம். கிருபை இருக்கவேண்டும்.

[என்று சொல்ல, ரிஷிகள் ஆசீர்வாதஞ் செய்து போகிறார்கள்.]

முதலாவது காட்சி முற்றிற்று.

## இரண்டாவது காட்சி.

**விஷயம்:** தமயந்தியின் கருத்தைத் தோழி அறிந்து பீமராஜருக்கு அறிவித்தல்.

**இடம்:** விதர்ப்பதேசத்தின் ராஜதானியாகிய விதர்ப்பபுரியில் கன்னிமாடம்.

**பாத்திரங்கள்:** தமயந்தி, அவள் தோழி கேசினி, பீமராஜர்.

[தமயந்தி தனியாக இருந்துகொண்டு, ஒரு புத்தகத்தை எடுத்து, அதில் ஏதோ குறிப்பிட்ட ஓர் பக்கத்தை நோக்கி வியந்துகொண்டும், தெய்வத்தை வேண்டிக்கொண்டும் இருக்கிறாள்.

தமயந்தி— (விருத்தம்.)

1. அலகிலா உலகெலாம் படைத்தாய்
அவற்றிலே உயிரையும் படைத்தாய்
இலகவே இவர்க்கிவ ரென்றே
எழுதியும் வைத்தனை எனினும்
நிலவுபோல் முகத்தொளி வீசும்
நிமலனைக் குணமெலாம் நிறைந்த
தலைவனை அடியனேன் சாரத்
தண்ணருள் பொழிவதுன் பாரம்.

2. இத்தனை அரசர்கள் இருந்தும்
இந்தளூர் அரசரே யன்றோ
பித்தியாம் எனதுளம் கவர்ந்து
பேரொளி காட்டியே நின்றார்
எத்தனை தான்இழுத் தாலும்
என்மனம் கேட்கில தந்தோ
கர்த்தனே உன்கருத் தேதோ
காண்கிலேன் கருணைசெய் வாயே.

[இவ்வாறு தெய்வத்தை வேண்டிக்கொண்டும், நளன் வடிவத்தைப் படத்தில் நோக்கிப் புன்சிரிப்புச் செய்துகொண்டும் இருக்கிறாள். அப்பொழுது தோழி வருகிறாள். உடனே தமயந்தி புத்தகத்தை மூடிச் சொல்லுகிறாள்.]

தோழீ! வா.

தோழி—அம்மா! வந்தேன். (தமயந்தியைச் சற்று நிதானித்துப் பார்த்து) அம்மா! நீ மிகுந்த மகிழ்ச்சியோடிருக்கிறாய்; ஆயினும் அதில் கொஞ்சம கவலையும் கலந்திருக்கிறது. அதைக் கடவுள் விரைவில் தீர்ப்பாராக.

அம்மா! நீ வாசிக்கும்படி யான் கொடுத்த இந்தப் புத்தகத்தை ஸாமானியமென்று எண்ணாதே. இதில் குறித்தவை அவ்வளவும் நம்முடைய தந்தையாலும் மற்றும் பல பெரியோர்களாலும் நன்றாய்ப் பரிசோதிக்கப்பட்டவை. எல்லாம் நம்பிக்கைக்கு இடமான செய்திகள்.

அந்தந்த அரசர்களின் குணம், புத்திநுட்பம், வீரம், கல்வி, செல்வம், அவர்கள் பரம்பரையின் பெருமை ஆகிய எல்லாம் உள்ளபடியே எழுதப்பட்டிருக்கின்றன. அன்றி யும், அந்தந்த அரசர்களின் உருவம், நிறம், சாயல் இவை களைக் காட்டும்படி அமைக்கப்பெற்றிருக்கும் படங்களோ மிகவும் உண்மையுள்ளவை.

அம்மா! நீ கல்வியறி வில்லாதவ ளல்ல. கல்வியறிவும் அதோடு பருவமும் நிறைந்தவளா யிருக்கிறாய். வெறு அழ கைமாத்திரம் கவனிப்பது ஸாதாரணப் பெண்களின் ஸ்தூல அறிவை ஒருவாறு புலப்படுத்துமேயொழிய வேறில்லை. அழகையும் அதோடு குணத்தையும் சீர்தூக்கிப் பார்ப் பதுதான் உன்னைப்போன்ற அறிவாளிகளுக்கு ஏற்றது.

அம்மா! இந்தப் புத்தகத்தில் எத்தனையோ அரசர்கள் இருக்கிறார்கள்; அப்படியிருந்தும், உன் கருத்தும் உன் தந்தை முதலிய எல்லாப் பெரியோர்களின் கருத்தும் ஒத் துப்போனதைப்பற்றி நான் மிகவும் மகிழ்ச்சியுள்ளவளா யிருக்கிறேன்.

**தமயந்தி** — தோழீ! என் கருத்து உனக்கு எப்படித் தெரியும்?

**தோழி**—உன்னோடு இவ்வளவு பழகிய எனக்கு உன் கருத்துத் தெரியாதென்றால் அப்புறம் நீ உன் தோழியிடம் வைத்திருக்கும் உண்மை என்ன? உன் வாயால் சொல்ல வில்லை என்கிறாயோ? அவ்வளவு புத்திநுட்பம் இல்லாதவ ளென்று உன் தோழியை நீ குறைக்காதே.

**தமயந்தி**—தோழி! அப்படியொன்றும் எண்ணாதே; உன் குறிப்பு ஒருநாளும் தவறுவதில்லை என்பது யாவருக்கும் தெரியுமே! (என்று சற்று நாணுதலோடு புன்சிரிப்புக் கொள்ளு கிறாள்.)

**தோழி**—அம்மா! மற்றப் பக்கங்க ளெல்லாவற்றையும் விட உன் கைச்சுவடு மிகுதியாகப் பதிந்த ஒரு பக்கம் இந் தப் புத்தகத்தில் இருக்கிறது. அந்தப் பக்கத்தில்தான் உன் தந்தைக்கும் மிகுந்த பிரியம். எனக்கும் அதுதான் மிகவும்

திருப்திகரமான பக்கம். இதுதானே அது? (என்று சொல்லிக் கொண்டே அந்தப் புத்தகத்தை எடுத்து நளனை எழுதப்பெற்ற பக்கத்தைக் காண்பித்து) நான் தவறவில்லை என்றே எண்ணுகிறேன். அம்மா! என்னிடம் தவறுதல் உண்டானால் சொல்.

**தமயந்தி**—(சிரித்துக்கொண்டு) தவறுதல் கனவிலும் வராத ஒரு தோழியை நான் பெற்றிருக்கும்பொழுது அதென்ன அப்படிச் சொல்லுகிறாய்?

**தோழி**—அம்மா! உன் தந்தை இந்தப் புத்தகத்தை என்னிடம் கொடுக்கும்பொழுது, அவரும் நானும் ஒரு தடவை இந்தப் பக்கத்தைப் பார்த்தோம். உடனே உன்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிட்டேன். பிறகு ஒரு தடவை இந்தப் பக்கத்தை நான் பார்க்கவேண்டுமென்று எவ்வளவோ ஆசைப்பட்டும் உன் கை அதற்கு இடமே கொடுக்கவில்லை அம்மா! (என்று சிரித்துக்கொண்டு சொல்லுகிறாள்.)

**தமயந்தி**—கேசினீ! உனக்குப் பேசக் கற்றுக்கொடுக்க வேண்டுமா! இருக்கட்டும், நம் தந்தை வருவதாகச் சொல்லி யிருந்தாரே; அவர் வரும் நேரமாயிற் றல்லவோ?

**தோழி**—ஆம், இப்பொழுது வரவேண்டிய காலந்தான். அவர் வரவேண்டியது ஒன்றுதான் பாக்கி. மற்றப்படி எல்லாம் முடிந்துவிட்டது.

[என்று சொல்லி, தோழி வாயிலில் போய்ப் பார்த்துத் திரும்பிவந்து]

அம்மா! நமது தந்தை வருகிறார்.

**தமயந்தி**—வரட்டும்.

[என்று சொல்லிக்கொண்டே எழுந்திருக்க, உடனே தோழி போய் பீமராஜரை எதிர்கொண்டு அழைத்து வருகிறாள். பீமராஜர் வந்தவுடன் தமயந்தி சற்று ஒதுங்கி நின்று]

பிதா! நமஸ்கரிக்கிறேன்.

**பீமராஜர்**—(பீடத்தில் அமர்ந்து) அம்மா! உனக்கு மங்களம் உண்டாகட்டும். உன் கல்வியறிவும் நற்குணங்களும் உண்மையான ஒளியை வீசும் காலம் வந்திருக்கிறது. ஒரு

பெண்ணின் வாழ்நாளில் கடவுளுடைய பரிபூரண கிருபையை எதிர்பார்க்கும் காலம் இது. கடவுள் நம்முடைய நல்ல நோக்கங்களை நிறைவேற்றுவாராக.

[இவ்வாறு சொல்லிக்கொண்டே அங்கிருந்த புத்தகத்தைத் தற்செயலாய்ப் புரட்ட, அதில் வைத்திருந்த ஒரு அடையாளக் கடிதம் கீழே விழுகிறது. உடனே பீமர்]

ஓகோ! ஏதோ அடையாளம் வைத்திருந்தாற்போ லிருக்கிறது. அது நழுவிவிட்டதே (என்று சொல்லிக்கொண்டே அடையாளக் கடிதம் விழுந்த இடத்தைப் பார்க்கிறார். உடனே தோழி வந்து,)

**தோழி**—அதனால் பாதகமில்லை. அந்த இடம் எனக்கு நன்றாய்த் தெரியும் (என்று சொல்லிக்கொண்டே, அந்த அடையாளக் கடிதத்தை எடுத்து, புத்தகத்தைப் பிரித்து, நளனுடைய உருவம் எழுதியிருக்கும் பக்கத்தைச் சுட்டி) **இதுதான் என் தோழி குறிப்புவைத்த இடம்;** இதில் சந்தேகமே இல்லை. (என்று சொல்லி, அடையாளக் கடிதத்தை அங்கே வைக்கிறாள். உடனே)

**பீமராஜர்**—ஆ! ஆ! தெய்வம் கிருபை செய்தது. இப்பொழுதே சுயம்வரத்துக்கு ஏற்பாடு செய்கிறேன். மிகவும் சந்தோஷம். (தமயந்தியைப் பார்த்து) அம்மா! போய்வருகிறேன். (தோழியைப் பார்த்து) கேசினீ! போய்வரட்டுமா (என்று சொல்லிக்கொண்டே எழுந்திருக்கிறார்.)

**தோழி**—மகாராஜா! நமக்கு வேண்டியவர் சுயம்வரமண்டபத்துக்கு வருவதைக்குறித்து, தக்க முன்ஜாக்கிரதை இருக்கட்டும்.

**பீமராஜர்**—கேசினீ! அதைக்குறித்து நீ ஸந்தேகப்பட வேண்டாம். நாம் யாரைக் குறிப்புவைத்துக்கொண்டு சுயம்வரம் ஏற்படுத்துகிறோமோ அவர் வராவிட்டால் மற்ற அரசர்களெல்லாம் சும்மா திரும்பிப்போகவேண்டியதேயொழிய வேறொன்று நடக்குமென்று நீ எண்ணாதே. அதனால் குற்றமென்ன? எத்தனை அரசர்கள் வந்தாலும் மாலை ஒருவருக்குத் தானே; மற்றவர்களெல்லாம் எப்பொழுதுமே திரும்பிப் போகவேண்டியவர்கள்தானே.

ஆனாலும், கேசினீ! இதைக்குறித்து உனக்கு ஸந்தேகமே வேண்டாம். இந்த ஸமயம் கடவுள் நமது நோக்கத்தை நிறைவேற்றுவார் என்று பெரியோர்கள் சில குறிப்புக்கள் சொல்லியிருக்கிறார்கள். எல்லாம் நன்றாகவே நடந்தேறும். நான் போய்வருகிறேன். ஸுகமேயிருப்பீராக.

[என்று சொல்லி பீமராஜர் போகிறார். அவர் போன பிறகு, தமயந்தி கல்யாணம் நிறைவேறும் விஷயத்தில் சற்றுக் கவலையுள்ளவள்போல் காணப்பட, உடனே]

தோழி—அம்மா! நீ யாதொரு கவலையும் அடையவேண்டாம். தெய்வம் நமது பங்கில் இருக்கிறது. கடவுள் அருளால் எல்லாம் நன்றாக நடந்தேறும். கடவுளைப் பிரார்த்திக்கவேண்டியது நமது கடமை. நம்முடைய எண்ணத்தை நிறைவேற்றவேண்டியது அவருடைய கடமை. அவரால் ஆகாதது என்ன இருக்கிறது? நாம் கடவுளைப் பிரார்த்திப்போம் வா.

[இவ்வாறு சொல்லவே, இருவரும் பயபக்தியோடு கைகுவித்துக் கொண்டு பாடுகிறார்கள்.]

(கீர்த்தனம்—சங்கராபரணம், திரிபுடை.)

### பல்லவி.

தெய்வமே அருள்செய்வாய் நீயே—உன்றன்
திருவரு ளன்றிஎமக் கொருதுணை இல்லை தாயே (தெய்)

### அனுபல்லவி.

செய்தவம் ஒன்றறியோம் திருவரு ளும் தெரியோம்
கைதவ மில்லாமல் கருணைசெய் வாய் சிறியோம் (தெய்)

### சரணம்.

இந்தச் சமயம்அருள் செய்யா மல்நீதான்
எந்தச் சமயம்அருள் செய்வா யோஉலகில்
இந்தச் சமயம்அன்றோ எந்தப்பெண் களுக்கும்ஓர்
சொந்த சமயம்அல்லால் சொந்தம்வே றேதுஉண்டோ (தெய்)

இரண்டாவது காட்சி முற்றிற்று.

## மூன்றாவது காட்சி.

—∞∞—

**விஷயம்:** சேவகனும் விகடகவியும் அரசர்களைக்குறித்துப் பேசிக் கொள்ளுதல்.

**இடம்:** விதர்ப்பபுரியில் பீமராஜர் அரண்மனையில் ஒரு வாயிலைச் சார்ந்த இடம்.

**பாத்திரங்கள்:** சேவகன், விகடகவி.

[விகடகவி வருகிறார். வாயிலை அடுத்து நின்றுகொண்டிருந்த சேவகன் அவரைப் பார்த்துச் சொல்லுகிறான்.]

(**குறிப்பு** — இதில் வரும் பேச்சுக்களை ஸமயோசிதமாய்க் கொச்சையாய்ப் பேசவேண்டும்.)

**சேவகன்**—விகடகவியாரே! நமஸ்காரம்.

**விகடகவி**—சேவகனாரே! ஆசீர்வாதம்.

**சேவகன்**—(ஏதோ ஒரு செய்தி சொல்லத் தொடங்கி) இருக்கட்டும்—

**விகடகவி**—பேஷா இருக்கட்டும். யார் வேண்டாம் என்கிறார்கள்.

**சேவகன்**—இதெல்லாம் என்ன ஐயா. (என்று அவர் விகடத்தில் மனம் வெறுத்தவனைப்போல் சொல்லுகிறான்.)

**விகடகவி**—இதெல்லாம் அரண்மனைதான்.

**சேவகன்**—சரியாப்போச்சு போம். உம்மைக் கண்டு வெகுநாளாச்சே, ஏதாவது பேசலாம் என்றால் என்னென்னவோ ஆரம்பிக்கிறீரே.

**விகடகவி**—என்னைக் கண்டு வெகுநாளாச்சா? என்னடா முழுப்பூசணிக்காயைச் சோற்றிலே மறைக்கிறாய். இப்போதுதான் நேரில் பார்க்கிறையேடா.

**சேவகன்**—ஏது, உம்மிடத்தில் செய்தி ஆரம்பிக்கிறதற்குள்ளே பொழுதுபோய்விடும்போலே இருக்கிறதே.

**விகடகவி** — பொழுதுபோய்விடும்போல இருக்கிறதா? எத்தனை சோம்பேறி ராஜாக்கள் பொழுதுபோகவில்லையே என்று வருத்தப்படுகிறார்கள்; உனக்குப் பொழுதுபோகிறதே என்று வருத்தமாயிருக்கிறதோ?

**சேவகன்**—சுயம்வரத்துக்கு, ராஜாக்களெல்லாம் வருகிறார்களாமே, அதற்கல்லவோ கேட்கிறேன்.

**விகடகவி**—அடாடா, இதை முந்தியே சொல்லியிருக்கக் கூடாதா? அந்தப் பேச்சை எடுத்தால்தான் இன்றைக்கெல்லாம் பேசலாமே.

**சேவகன்**—ராஜாக்கள் வருகிறார்களே, அவர்களையெல்லாம் தங்களுக்குத் தெரியுமா?

**விகடகவி**—தெரியுமாவா, நல்லகாரியம் பண்ணினாய், எனக்குத் தெரியாத அரசர்களும் உண்டா?

**சேவகன்**—எல்லாரையும் உமக்கு எப்படிஐயா தெரியும்?

**விகடகவி**—எப்படித் தெரியுமா, எத்தனை ராஜாக்களிடத்தில் நான் போயிருக்கிறேன், எத்தனை ராஜாக்கள் நம் ராஜாவினிடத்தில் வந்திருக்கிறார்கள், இன்னும் எத்தனை சுயம்வர கல்யாணத்துக்குப் போயிருக்கிறேன்; ராஜாக்களை எப்படித் தெரியுமா, ராஜாக்கள் பழக்கந்தான் அப்பா நமக்கு அதிகம்.

**சேவகன்**—அப்படியா, எத்தனையோ சுயம்வரகல்யாணத்துக்குப் போயிருக்கிறீரா? ஒரு சுயம்வரத்திலாவது உமக்கு மாலை கிடைக்கவில்லையா?

**விகடகவி**—கிடைக்காமலென்ன, எதேஷ்டம்.

**சேவகன்**—அதென்ன, எந்த ஊர் ராஜாபெண் உமக்கு மாலை போட்டாள்.

**விகடகவி**—ஓகோ! அந்த மாலையா—கல்யாணத்தில் எல்லாருக்கும் போடுகிற பூமாலையையல்லவா சொன்னேன்.

**சேவகன்**—அது கிடக்கிறது ஐயா, சுயம்வரமாலையை யல்லவா கேட்கிறேன்.

**விகடகவி**—அது கிடக்கிறதடா, சுயம்வரமாலை போட்டுக்கொள்ள எனக்கு என்ன பயித்தியமா பிடித்திருக்கிறது.

**சேவகன்**—சுயம்வர மாலை என்ன ஐயா அவ்வளவு இளப்பம்?

**விகடகவி**—அப்படிக் கேளு,—ஒரு ராஜாபெண் எனக்கு மாலைபோட்டாள் என்று வைத்துக்கொள், உடனே நான் ஒரு ராஜாவுக்கு மாப்பிள்ளையாகவேண்டுமல்லவா?

**சேவகன்**—ஆம்.

**விகடகவி**—எப்பொழுது மாப்பிள்ளையாகிவிட்டேனே உடனே நானும் ஒரு ராஜாதானே?

**சேவகன்**—ஆம்

**விகடகவி**—எப்பொழுது நான் ஒரு ராஜாவாகிவிட்டேனே, ராஜாவுக்கு ராஜா மரியாதையாய் இருக்கவேண்டுமல்லவா?

**சேவகன்**—ஆம்.

**விகடகவி**—ஏனடா எனக்கு இந்தக் கஷ்டம்? இப்பொழுதென்றால் எந்த ராஜாவிடத்திலும் போவேன், எதுவேண்டுமானாலும் பேசுவேன், அவர்களும் சிரிப்பார்கள், நானும் சிரிப்பேன்; இதையெல்லாம் விட்டுவிட்டு, சிங்கத்தைக் கூட்டில் அடைத்தாற்போல மாப்பிள்ளையாய்ப் போகிறதற்கு எனக்கு என்ன தலையில் எழுத்தா?

**சேவகன்**—இருக்கட்டும், அதென்ன, ராஜாக்களிடத்தில் என்னவேண்டுமானாலும் பேசலாமோ?

**விகடகவி**—ஆம், அதற்கென்னதடை, அதற்காகத்தானே நாங்கள் ஏற்பட்டிருக்கிறோம்; ராஜாக்களிடத்தில் அநேக குறைகள் இருக்கும்; ராஜாவைச் சேர்ந்தவர்களிடத்திலும் அநேக குறைகள் இருக்கும், அதையெல்லாம் எடுத்துச் சொல்

வதென்றால் எல்லாரும் பயப்படுவார்கள். நாங்களென்றால் வேடிக்கையாய்ச் சொல்லிப்போடுவோம். அவர்களும் சிரிப்பார்கள், நாங்களும் சிரிப்போம்.

**சேவகன்**—ஒரு ஸமயம் கோபம் வந்துவிட்டாலோ?

**விகடகவி**—தலைபோனாலும் போனதுதான். அதற்குத் தானே மந்திரிமார்களெல்லாருங் கூடி நம்மை ஏற்படுத்தி வைத்திருக்கிறார்கள். போனாலும் என்ன, மாதம் இருபது முப்பது ரூபாய் உயிர்தானே.

**சேவகன்**—உண்மைதான், அப்படியும் ஒருவர் வேண்டியதுதான்.

**விகடகவி**—உனக்கென்ன, நம்ம தலையல்லவா போகிறது.

**சேவகன்** — இருக்கட்டும், கொங்கணதேசத்து ராஜா வாமே அவர்களைத் தங்களுக்குத் தெரியுமா?

**விகடகவி**—பேஷ் பேஷ்! முதலில் நல்ல ஆளைத்தான் பொறுக்கி எடுத்தாய்; அவர் வராத சுயம்வரம் ஒண்ணுமில்லை, அவருக்கு மாலையிடுகிற பெண்ணுமில்லை.

**சேவகன்**—அதேனையா அப்படி?

**விகடகவி**—வேறென்ன, வயது எழுபத்தெட்டுத்தான் ஆச்சு.

**சேவகன்**—எழுபத்தெட்டா! அப்படியானால் சுயம்வரத்துக்கு ஏன் வருகிறார்?

**விகடகவி**—அவருக்கு இப்பொழுதுதான் சரியான யௌவனமாம்.

**சேவகன்**—அதெப்படி?

**விகடகவி**—ஒரு அறுபது வயது ஆகிவிட்டால் மறுபிறப்புக்கு ஸமானமாம்.

**சேவகன்**—இருக்கட்டும்.

**விகடகவி**—அதற்குமேல் பதினெட்டு வயதுதானே ஆகியிருக்கிறது; பதினெட்டுவயது நல்ல யௌவனந்தானே, அது தான் சுயம்வரத்துக்கு வருகிறார்.

**சேவகன்**—பேஷ் பேஷ்! நல்ல கணக்கு இது! மீசைகூட நரைத்துப்போயிருக்குமே?

**விகடகவி**—ஆஹா, அதற்கென்ன தடை; அதை நம்பித் தானே அவர் சுயம்வரகல்யாணத்துக்கு வருகிறார்.

**சேவகன்**—அதென்ன?

**விகடகவி**—சின்னப்பசங்களுக்கெல்லாம் பெண்ணைக் கொடுத்துவிடுகிறார்களாம்; அந்தப் பசங்களுக்குப் பெண் களை நடத்தத் தெரியாமல் அவர்களையும் கெடுத்து, தாங்களும் கெட்டுப்போகிறார்களாம்; அப்படியெல்லாம் இல்லாமல், தான் மிகுந்த அநுபோகசாலியாம், அதற்கு அந்த மீசைகள்தான் யோக்யதாபத்திரமாம். அதுதான் அவருடைய கருத்து.

**சேவகன்**—இருக்கட்டும்—மராட தேசாதிபதியாமே, அவரென்ன?

**விகடகவி**—அவரா—அவர் நல்ல அழகுதான்; ஆனால், படிப்புக்கலந்தான் பூஜ்யம். தனக்காவும் ஒன்றும் தெரியாது, சொன்னாலும் கேட்கமாட்டார். அந்த இரண்டுங்கெட்டானை வைத்து நிர்வகிப்பது மகா கஷ்டம்.

**சேவகன்**—மாளவதேசத்து ராஜாவாமே, அவர் என்ன?

**விகடகவி**—ஓகோ! அவரா—அவரைக் கல்யாணஞ் செய்துகொண்டால் அப்புறம் அந்தப் பெண், பேய்பிசாசு ஒன்றுக்கும் பயப்படவேண்டியதில்லை.

**சேவகன்**—ஏன்?

**விகடகவி**—அவரைப் பார்த்தாலே பெரிய பிசாசுமாதிரிதான் இருக்கும், வேறென்ன.

**சேவகன்**—மச்சதேசாதிபதியாமே, அவர் செய்தி என்ன ஐயா? அவரை மிகவும் செல்வவான் என்கிறார்களே.

**விகடகவி**—அது உண்மைதான், அதில் தடையில்லை. பெண்ணைக் கல்யாணம்செய்துகொடுத்தால் போதும். உடனே தங்கத்தினாலேயே ஒரு சிறைச்சாலை கட்டி அதில் வைத்துப்போடுவார். ஒரு காற்றுக்கூட அந்தப் பெண்ணின்மேல்

வீசாது. இது க்ருதயுகமோ த்ரேதாயுகமோ என்கிற செய்தி கூட அவள் காதில் விழாது. அதற்கு ஸம்மதமிருந்தால் பெண்ணைக் கொடுக்கலாம்.

**சேவகன்**—சாலவதேசாதிபதியாமே, அவர் என்ன?

**விகடகவி**—அவரா? அவருக்குப் பெண் என்றால் ஏதோ ஆடு மாடு என்றுதான் எண்ணம். கட்டிக்கொட்டி வருகிறதை யெல்லாம் சுற்றிப்போட்டு வைக்கிறது. அவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால் அந்த மந்தைகளிலே ஒரு ஆடாய்ச் சேரவேண்டியதுதான்.

**சேவகன்**—காம்போஜதேசாதிபதியாமே, அவர் என்ன?

**விகடகவி**—அவர் ஒருமாதிரி. அஸ்தமித்தால் அவரோடு பேச்சுக்கொடுக்கக்கூடாது.

**சேவகன்**—அதென்ன?

**விகடகவி**—அந்தப் பேச்சு நமக்கு என்னத்துக்கு அப்பா, அவரைச் சேர்ந்த குடிகள் யாராவது கேட்டுக் கொண்டிருக்கப்போகிறார்கள். அப்புறம்—

**சேவகன்**—வங்கதேசாதிபதி எப்படி?

**விகடகவி**—என்னடா, யார்யாரையோ போய்க் கேட்கிறாய்—அவர் எப்போதும் சின்முத்திரையும் கையுமாய்த்தான் இருப்பார், வேறென்ன.

**சேவகன்**—சின்முத்திரையா? அதென்ன விளங்கவில்லையே.

**விகடகவி**—அதெல்லாம் நாம் பொடிவைத்துத்தான் பேசுகிற வழக்கம். மேலே—

**சேவகன்**—நளமகாராஜாவாமே, அவர் என்ன ஐயா?

**விகடகவி**—ஆ, அப்படிப் பார்த்தல்லவா கேட்கவேண்டும். அவர் தக்கவர்தான். (சற்று யோசனைபண்ணி) ஆனால் ஒரு காரியம். மகா கோழை மனது. அவ்வளவு அருள் இருந்தால் உலகத்தில் பிழைக்க முடியாது.

**சேவகன்**—அப்படியா! அவ்வளவு அருள் உள்ளவரா!

**விகடகவி**—ஆம், அது இருக்கட்டும்; இன்னொரு காரிய மல்லவா அவரிடத்தில்.

**சேவகன்**—அதென்ன?

**விகடகவி**—சுயம்வரம் என்றால் போதும், அந்த திக்கு வழி வரமாட்டார். பெண்டாட்டி என்றால் அவருக்குப் பய மாகத்தான் இருக்கிறதோ, இல்லாவிட்டால் ஸந்யாஸந்தான் வாங்கிக்கொள்ளப்போகிறாரோ, அவர் கருத்து நமக்குத் தெரி யாது அப்பா.

**சேவகன்**—என்ன ஐயா, எல்லாரையும் தூஷிக்கிறீரே. உம்மிடத்தில் ஒரு குற்றமும் இல்லையா?

**விகடகவி**—இல்லையென்று யார் சொன்னார்கள்? விகட கவிராஜாவைக்குறித்து நீ கேட்டாயா?

**சேவகன்**—இப்போதுதான் சொல்லுமே. உம்மிடத்தில் ஒரு குற்றமும் இல்லையா?

**விகடகவி**—இல்லாமலென்ன, இத்தனைபேர் குற்றத்தை எடுத்துச் சொல்லுவதே என்பேரில் ஒரு குற்றந்தானே— ஆனால் உன்னிடத்தில் குற்றமில்லை என்கிறாயோ?

**சேவகன்**—என்னிடத்தில் என்ன குற்றம்? உம்மைப் போல யாரையாவது தூஷித்துப் பேசினேனா?

**விகடகவி**—அது வேறு எண்ணிக்கொண்டிருக்கிறாயோ? இத்தனை பேச்சும் யாராலேடா வந்தது, உன்னாலேதானே. நீதான் முதற் குற்றவாளி.

**சேவகன்**—வேடிக்கையாய்ப் பேசிக்கொண்டிருந்தோமே யொழிய வேறென்ன?

**விகடகவி**—அதுதான் கேட்டேன். ஒன்றையும் வினை யாக எண்ணிக்கொண்டுவிடாதே என்கிறேன். வேறென்ன.

**சேவகன்**—இருக்கட்டும், ஸ்வாமீ! தங்களுக்கு மிகுந்த சிரமம் கொடுத்தேன், மன்னிக்கவேண்டும். அரசர்கள் வருகிற நேரமாயிற்று, போய்வாருங்கள்.

**விகடகவி**—நான் என்ன. வேலையற்றவன் என்று எண்ணிக்கொண்டாயோ? எத்தனை அரசர்கள் நான் வரவில்லையென்று காத்துக்கொண்டிருப்பார்கள். இதோ போகவேண்டாமா எனக்கு.

[என்று சொல்லிக்கொண்டே விகடகவி ஓடுகிறார்.]

மூன்றுவது காட்சி முற்றிற்று.

## நான்காவது காட்சி.

**விஷயம்:** தமயந்தி சுயம்வரம்.

**இடம்:** விதர்ப்பபுரியில் சுயம்வர மண்டபம்.

**பாத்திரங்கள்:** நளன் முதலிய எட்டு அரசர்கள், பீமராஜர், தமயந்தி, தோழி கேசினி, வேறு சில தோழிகள்.

---

[சுயம்வர மண்டபத்தில் நளன் முதலிய அரசர்கள் வீற்றிருக்கின்றனர். பீமராஜர் வருகிறார். எல்லா அரசர்களும் எழுந்து மரியாதை செய்கின்றனர். அரசர்களையெல்லாம் உட்காரச்சொல்லி, பீமராஜர் சொல்லுகிறார்.]

**பீமராஜர்**—மகா மகிமையுள்ள அரசர்களே! நீங்களெல்லாரும் என் வேண்டுகோளுக்கு இணங்கி இவ்வளவுதூரம் வந்ததற்கு நான் மிகவும் நன்றி பாராட்டுகிறேன். உங்களுடைய பெருமையையெல்லாம் உள்ளபடி உணர என்னாலும் இல்லை; என்னைச் சேர்ந்தவர்களாலும் இல்லை.

என் மகள் தமயந்தி ஏதோ தனக்குத் தோற்றியவண்ணம் ஒருவருக்கு மாலையிடுவாள். ஒருவருக்கு ஒரு பொருள் சுவையாயிருந்ததுகொண்டே அந்தப் பொருளின் தன்மை

நிச்சயிக்கப்பட்ட தாகாது என்பதை நீங்கள் அறியாதவர் களல்ல. ஒவ்வொருவருக்கு ஒவ்வொன்று சுவையாய்த் தோன்றும், உலகம் பலவிதம். அதெல்லாம் அவரவர் ஊழ் வினையைப் பொறுத்ததேயொழிய வேறில்லை. எல்லாம் அறிந்த உங்களுக்கு நான் அதிகமாகச் சொல்லவேண்டியது என்ன இருக்கிறது?

[இவ்வாறு சொல்லித் திரும்பிப் பார்க்கிறார். உடனே தோழியைப் பின்னிட்டுக்கொண்டு, தமயந்தி வந்து நிற்கிறாள். அபபோது பீமராஜர் தமயந்தியைச் சுட்டி]

அரசர்களே! இவள்தான் என் மகள் தமயந்தி. இவளை நான் அறிவேன். ஆயினும், நீங்கள் இவளை இன்னாரென அறி யீர்கள். இவள் யாருக்கு மாலையிடுகிறாளோ அவர் இவளைத் தன் மனைவியென அறிவாராக. மற்றையவர் இவளைத் தமது தங்கையென அறிவார்களாக. மாலைபெற்றவர் தயவுசெய்து என் பெண்ணை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்ளுகி றேன். மற்றவர்கள் தம்பதிகளை ஆசீர்வதித்து என்னையும் கனப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். எல்லாரும் தயவுசெய்யவேண்டும்.

கேசினி! குழந்தைக்கு அரசர்களைத் தெரிவி. அம்மா தமயந்தி! கடவுள் திருவருள் தோற்றுவிக்கிறபடி ஒருவ ருக்கு மாலையிடுவாயாக! உனக்கு மங்களம் உண்டாகட்டும்.

[என்று சொல்லி, பீமராஜர் உட்காருகிறார். கேசினி தமயந்தியை நோக்கி]

**தோழி**—அம்மா! அவர்தான் குருக்ஷேத்ர அரசர்—அவர் பாஞ்சாலதேசாதிபதி — அவர் கேகயதேசாதிபதி — அவர் சிந்துதேசத்தரசர் — அவர்தான் கலிங்கதேசாதிபதி — அவர் காந்தாரதேசத்தரசர் — அவர் அயோத்தியரசர் — அவர்தான் நிஷததேசாதிபதி—

[இவ்வாறு சொன்னதும் தமயந்தி, தோழி கையிலிருந்த மாலையை வாங்கி, அத்தோழி பின்தொடரச் சென்று நளனுக்கு மாலை யிட்டு வணங்கி நிற்கிறாள். அப்பொழுது நளன் தான் அணிந் திருந்த ஒரு மாலையையெடுத்துத் தமயந்திக்குப் போடுகிறான். உடனே தமயந்தி சற்று ஒதுங்கி நளனுக்குப் பின்பாக நிற்

கிறாள். ஸ்ரீமன் முதலிய பெரியோர்கள் வாழ்த்தி, புஷ்பம் முதலியவற்றைத் தூவுகிறார்கள். அப்போது கேசினி முதலிய **தோழிகள்** பாடுகிறார்கள்.]

(கௌரீ கல்யாணம்—குறிஞ்சி, ஜம்பை.)

### பல்லவி.

கல்யாண மே வைபோக மே, கல்யாண மே வைபோகமே.

### சரணங்கள்.

1. எங்கள்தம யந்திக்கு ஏற்றமண வாளன்
சிங்கார லோலன் ஸ்ரீநள பாலன் (கல்)

2. இந்திரர்களும்புகழும் ஸௌந்தரப்ர தாபன்
சந்த்ரகுல தீபன் ஸ்ரீநள பூபன் (கல்)

3. செல்வமும் மக்களும் சிறந்துநீ டூழி
நல்லதம யந்தியும் நளனுமே வாழி (கல்)

(லாலி—ஆனந்தபைரவி, ஜம்பை.)

### பல்லவி.

லாலிலா லையலா லீ—சந்த்ரகுல
தீபமே லாலிலா லீ—
லாலிலா லையலா லீ—ஸௌந்தரஸ்வ
ரூபனே லாலிலா லீ.

### சரணங்கள்.

1. எங்கள்தம யந்திநா தா—பகைவர்கள்
ஏங்கிடும் சங்கநா தா—
துங்கமிகு ஞானபோ தா—தூண்டாத
ஜோதியாம் அருள்கொள்நீ தா (லாலி)

2. நீதிபொரு வடிவமா கி—இவ்வுலக
நெறியினைநடத்தும்யோ கி—
பாதிமதி நுதலெந்தோ ழி—மணவாள
பல்லூழி வாழிவா ழி (லாலி)

நான்காவது காட்சி முற்றிற்று.

## ஐந்தாவது காட்சி.

விஷயம்: தமயந்தி தன் குழந்தைகளின் கல்வியைக் கவனித்தல்.

இடம்: மாலிந்தநகரத்தின் அரண்மனையில் அந்தப்புரம்.

பாத்திரங்கள்: தமயந்தி, அவள் மகன் இந்திரஸேனன், மகள் இந்திர ஸேனை, தோழி கேசினி.

**தமயந்தி** — தோழி! நம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வா.

**தோழி** — அம்மா! இதோ அழைத்துக்கொண்டு வருகிறேன்.

[என்று சொல்லிப் போய்க் குழந்தைகளை அழைத்துக்கொண்டு வருகிறாள்.]

**இந்திரஸேனன்**—அம்மா! வந்தனம் செய்கிறேன்.

**இந்திரஸேனை**—அம்மா! நமஸ்கரிக்கிறேன்.

**தமயந்தி**—தீர்க்காயுஸாய் இருங்கள் — இந்திரஸேனா! நேற்று குருவினிடம் பாடங்களைச் செவ்வையாய் ஒப்புவித்தாயா?

**இந்திரஸேனன்**—கூடியமட்டில் ஒப்புவித்தேன் அம்மா; குரு யாதொரு பிழையும் எடுக்கவில்லை. தாங்கள் நேற்றுக் காலையில் கேட்ட கேள்விகளே பெரும்பாலும் வந்தன. சில கேள்விகள் புதிதாயும இருந்தன. அவைகளுக்கும் எனக்குத் தோற்றிய பதில்களைச் சொன்னேன். குரு சரியாயிருக்கிறதென்று ஸந்தோஷப்பட்டார்.

**தமயந்தி**—அதற்குமேல் புதுப்பாடம் நடத்தினாரா?

**இந்திரஸேனன்** — ஆம் அம்மா, வாசகத்தில் அதற்கு மேல் ஒரு பாடம் நடத்தினார்.

**தமயந்தி**—அந்தப் பாடத்தில் என்ன நீதி கற்பிக்கப்பட்டிருக்கிறது, ஞாபகமிருக்கிறதோ?

**இந்திரஸேனன்**—அம்மா! ஞாபகமிருக்கிறது. நல்லவர்கள் துஷ்டர்களிடம் வாக்குக்கொடுக்கக்கூடாது; அப்படிக் கொடுத்தால் ஒரு ஸமயம் தமக்கே நீங்காய் முடியும் என்பது. அதில் இன்னொரு நீதியும் வந்திருக்கிறது அம்மா. அதாவது: பொருளுக்கு ஆசைப்பட்டு நியாய விரோதமாய்த் தீர்ப்புச்செய்ய லாகாது என்பது. இந்த இரண்டு நீதிகளும் வரும்படி ஒரு கதைகூடப் புதிதாய்ச் சொன்னார்.

**தமயந்தி**—அந்தக் கதையைச் சொல்லு பார்ப்போம்.

**இந்திரஸேனன்**—ஒரு மரத்தில் சில குருவிகள் கூடுகட்டிக்கொண்டு வாழ்ந்திருந்தன. ஒருநாள் மிகுந்த மழை பெய்தது. சில குரங்குகள் அந்த மழையினாலே மிகவும் வருந்துகிறதைக் கண்டு, கூட்டிலிருந்த குருவிகள், "ஏ குரங்குகளே! உங்களுக்குக் கைகால்கள் இருக்கின்றனவே, ஒரு கூடு கட்டிக்கொண்டு ஸுகமாய் இருக்கக் கூடாதா?" என்று சொல்ல, உடனே அந்தக் குரங்குகளுக்குக் கோபம் வந்து இந்தக் குருவிகளின் கூட்டையெல்லாம் பிய்த்து எறிந்துவிட்டன.

உடனே குருவிகள் அவ்வூர் நியாயாதிபதியிடம் போய் முறையிட அவர் குரங்குகளைக் கூப்பிட்டு நீங்கள் அப்படிச் செய்தது தகாது என்று அதட்டினார். அதற்குள் சில குரங்குகள் ஒரு பெரிய பலாப்பழத்தைக் கொண்டுவந்து நியாயாதிபதியின் பின்பக்கமாக வைத்துவிட்டு வந்து, நியாயாதிபதியைப் பார்த்து, "மகாப்பிரபுவே! தாங்கள் எங்களை அவ்வாறு அவமதிக்கலாகாது. கொஞ்சம் முன்பின் பார்த்துப் பேசவேண்டும்" என்று சொல்ல, நியாயாதிபதி திரும்பிப் பார்த்து ஸமாசாரத்தைத் தெரிந்துகொண்டார். உடனே புத்தி மாறிப்போய், குருவிகளைப் பார்த்து "ஓ குருவிகளே! என்ன இருந்தாலும் நீங்கள் அற்பப் பிராணிகள்தானே, குரங்குகளுடைய ஸாமர்த்யம் எங்கே? நீங்கள் எங்கே? இனிமேல் பெரியோர்களுக்குப் புத்திசொல்லுகிற அதிகப்பிரஸங்

# ஆறுவது காட்சி.

**விஷயம்:** நளன் புஷ்கரனேடு சூதாடல்.

**இடம்:** மாவிந்தநகரத்து அரண்மனையில் ஒரு மண்டபம்,

**பாத்திரங்கள்:** நளன், புஷ்கரன், புஷ்கரனுக்குக் கொடிபிடிப்போன், நளனுடைய கணக்குப்பிள்ளை, மந்திரி, உபமந்திரி, சேவகன்.

[நளமகாராஜர் தனியே உட்கார்ந்திருக்கிறார்.]

**சேவகன்**—மகாராஜ்! புஷ்கராஜர் வந்திருக்கிறார்.

**நளன்**—வரட்டும்.

**புஷ்கரன்**—மகாராஜா, நமஸ்காரம்.

**நளன்**—வாரும் தம்பி, க்ஷேமமா?

**புஷ்கரன்**—தங்களுடைய தயவால் எல்லாரும் க்ஷேமம்.

[புஷ்கரன்பின்னுக ஒருவன் ஒரு கொடி பிடித்துக்கொண்டு நிற்கிறான். அதை நளன் நோக்கி]

**நளன்**—தம்பி! இது என்ன கொடி? புதிதாயிருக்கிறதே!

**புஷ்கரன்**—மகாராஜா, அதற்காகத்தான் இங்கு வந்தேன். இது சூதாட்டத்தில் மற்ற அரசர்களை வென்று எடுத்த கொடி. ஸமுகத்தில் தரிசனம் செய்துவிட்டுப் போகலாம் என்று வந்தேனேயொழிய வேறென்றுமில்லை. மகாராஜா! தாங்கள்பார்த்துத்தான் என் கல்வியை மெச்சவேண்டும்.

**நளன்**—சூதாட்டம் என்ன, அப்படிப்பட்ட ஒரு சிறந்த வித்தையா?

**புஷ்கரன்**—மகாராஜா! தங்கள் வாக்கால் அப்படிச் சொல்லக்கூடாது. இதன் பெருமையை இதுவரையில் தங்களுக்கு எவரும் உள்ளபடி சொல்லவில்லை என்றே எண்ணுகிறேன். இது அரசர்களுக்காகவே ஏற்பட்ட ஒரு ஆட்டமேதவிர,

வெறும்பிழைப்புப் பிழைக்கும் உத்யோகஸ்தர்களுக்காவது மற்ற ஏழைகளுக்காவது ஏற்பட்டதல்ல. ஆதலால், இதன் பெருமையை அரசனுக்கு அரசன் அறிவிக்கவேண்டியது நியாயந்தான். நான் சொல்வதெல்லாம் பொய்யோ மெய்யோ என்பதை அநுபவத்தினால் அறியவேண்டுமேயொழிய வெறு யுக்திகள் பிரயோசனமில்லை. ராஜஸபாகமே அறியாத சிலருடைய சொல்லைக் கேட்டுத் தாங்கள் மயங்கவேண்டாம்.

இதோ இருக்கிறது பாருங்கள் ஆடுகிற பாய்ச்சிகைகள். தாங்கள் நன்றாய்க் கையில் வாங்கிப் பார்க்கலாம். (என்று சொல்லி, பாய்ச்சிகைகளை நளனுடைய கையில் கொடுக்கிறான். அவரும் வாங்கிப் பார்க்கிறார்.) இதில் 'ரத்தத்தில் கலந்து அறிவை மயக்கும் பொருள்' ஒன்றும் நடவியிருக்கவில்லை. இதைத் தொட்டால் நம்மை ஒன்றும் ஒட்டிக்கொள்ளாது. வெறுஞ் ஜடபதார்த்தந்தான்.

ஹா ஹா! உலகத்தில் தான் என்ன அறியாமை! இதைக் கண்டு சிலர் என்ன ஓட்டம் ஓடுகிறார்கள்! ஜோதிஷ சாஸ்திரமானது எப்படி நம்முடைய அதிர்ஷ்டத்தைத் தெரிந்து கொள்ள ஒரு வழியாயிருக்கிறதோ, அப்படியே இதுவும் நம்முடைய அதிர்ஷ்டத்தைத் தெரிந்துகொள்ள ஒரு சுருக்கமான வழி. இவ்வளவுதான் இதில் உள்ள ஸாரம்.

இதைப்பற்றிப் பெரியோர்கள் மிகவும் மெச்சியிருக்கிறார்கள்.

(விருத்தம்.)

1. உலகத்தின் துன்ப மெல்லாம்
 ஒருங்குற வீட்டி இன்பம்
அலகிலா தளிக்கும் இந்த
 ஆட்டத்தில் அமர்ந்து விட்டால்
பலபல தவங்கள் செய்த
 பக்குவ ஞானி யர்க்கும்
இலகிலா நிராசை யெல்லாம்
 இப்போதே காண லாமே.

2. பிறப்பினே டிறப்பு மூப்பென்
றிவையெலாம் பிரிந்து போன
துறக்கத்தி லிருப்பார் போல
ஒன்றுமே தோன்று தையா
சிறப்புள இந்த ஆட்டச்
சீரெலாம் செப்ப வென்றால்
மறப்பன்றோ தடுக்கும் நீர்தான்
மறுத்திடா தாடு வீரே.

மகாராஜா! தங்கள் ஸமுகத்துக்கு வந்து தங்களோடு ஒரு ஆட்டமாவது ஆடாமற்போனால் என்னை எல்லா அரசர்களும் இகழ்வார்கள். தங்கள் ஸமுகம் நாடி வந்த என்னை தயவுசெய்து கனப்படுத்தி அனுப்பவேண்டும்.

**நளன்**—புஷ்கரரே! நீர் சொல்வது எப்படி இருந்தாலும் இருக்கட்டும். அந்த ஆட்டத்தில் எனக்கு மிகுந்த பரிச்சயம் இல்லையே.

**புஷ்கரன்**—மகாராஜா! இதென்ன, தாங்கள் சொல்லுவது அதிசயமாயிருக்கிறதே! காயை உருட்டினால் விழுகிற எண்ணிக்கையை எண்ணப் பரிச்சயம் என்ன? இது என்ன, கண்கட்டி வித்தையா? அன்றியும், தாங்கள் மகா அறிவுடையவர்கள்; ஏகஸந்தக்ராகி; ஒரு ஆட்டம் நான் ஜயித்து அந்த நுட்பத்தைக் கண்டுகொண்டீர்களானால் அப்புறம் உங்களை வெல்ல யாரால் ஆகும்? மகாராஜா! தங்களைப்போன்ற விவேகிகளுக்கு இதெல்லாம் ஒரு பெரிய காரியமல்ல.

**நளன்**—உட்கார்ந்து ஒரு ஆட்டம் ஆடும் பார்ப்போம்.

[உடனே புஷ்கரன் உட்கார்ந்து தன் பையிலிருந்த சூதாடு பலகையை (ஒருவகைத் துணி) எடுத்துப் பரப்பி, தன் கை மோதிரத்தைக் கழற்றி வைக்கிறான். அதைக் கண்ட நளன்]

ஏன் மோதிரத்தை வைக்கிறீர்?

**புஷ்கரன்**—மகாராஜா! பந்தயம் என்பது இல்லாமலே ஆடினால் அதில் ஊக்கம் கொடுக்காது. அதிலும் இது பிள்ளையார் ஆட்டம். தெய்வவிஷயத்தில் தக்ஷிணையில்லாமல் ஆட நாம் என்ன அவ்வளவு கணக்குப் பார்க்கிறோமா?

**நளன்**—இருக்கட்டும், அதனாலென்ன. (என்று சொல்லிக்கொண்டே தன் மோதிரத்தைக் கழற்றத் தொடங்குகிறார். உடனே)

**புஷ்கரன்**—மகாராஜா! அது வேண்டாம். அது மரியாதையல்ல. மகா சக்ரவர்த்திகளாகிய தங்கள் உடம்பில் இருப்பதை ஏன் கழற்றவேண்டும்? கணக்குப்பிள்ளையை வரவழையுங்கள். ஏதாவது ஒரு பந்தயப்பொருளைக் குறித்துக்கொள்ளச் சொன்னால் ஆச்சு. இது என்ன பிரமாதகாரியம். இதற்காகத் தங்கள் அருமைத் திருமேனியினின்றும் ஒன்றைக் கழற்றுவது அழகல்ல.

**நளன்**—ஆனால் தாங்களும் அப்படியே செய்யலாம். மோதிரத்தை அணிந்துகொள்ளுங்கள்.

[என்று சொல்லித் திரும்பிப் பார்க்கிறார். உடனே கணக்குப்பிள்ளை வருகிறார்.]

**புஷ்கரன்**—கணக்குப்பிள்ளையவர்களே! இத்தனையாவது ஆட்டம், இன்ன பந்தயம், இன்னாருக்கு ஜயம் — என்று குறித்துக்கொண்டேவாரும்.

[என்று சொல்ல, கணக்குப்பிள்ளை நளன் முகத்தைப் பார்க்கிறார்.]

**நளன்**—அப்படியே செய்யும்.

[என்று சொல்ல, கணக்குப்பிள்ளை உட்கார்ந்து ஓலைக்கட்டை அவிழ்த்து எழுதத் தயாராகிறார். அப்பொழுது புஷ்கரன் நளனைப் பார்த்து]

**புஷ்கரன்**—மகாராஜா! நாம் பந்தயப்பொருள் வைப்பதிலும் கணக்குப்பிள்ளையை எழுதிக்கொள்ளச் சொல்வதிலும் அடிக்கடி புத்தியைச் செலுத்தினால் ஆட்டத்திலுள்ள ஸுக முங் கெடும்; அதன் நுட்பங்களைத் தாங்கள் அறிந்துகொள்ள இடையூறாயும் இருக்கும். இதற்கு ஒரு சுருக்கமான வழி இருக்கிறது. அதாவது, யானைகளையே பந்தயமாகக் குறித்துக்கொள்ளச் சொல்லலாம்.

**நளன்**—யானையா?

**புஷ்கரன்** — மகாராஜா! யானையென்றால் வேறொன்றுமல்ல; ஒரு ஆயிரம் பொன்னுக்கு யானை என்பது ஒரு பரிபாஷை.

முதல் ஆட்டத்துக்கு ஒரு யானை வைக்கிறது. மறு ஆட்டத்துக்கு முதலாட்டத்தில் ஜயித்த இரண்டு யானையையும் வைத்துவிடுகிறது. இப்படியே அவரவர்கள் ஜயித்த பொருளைப் பந்தயமாக வைத்துக்கொண்டுவந்தால் போதுமானது. ஒருவருக்குள்ள அவ்வளவு யானையே மற்றொருவருக்கும் எழுதிக்கொள்ளட்டும். கடைசியில் பார்த்துக்கொள்ளலாம். கணக்குப்பிள்ளையவர்களே! தெரிந்ததா? வெற்றி தோல்விகளை எங்கள் பேச்சைக்கொண்டு உணர்ந்து எழுதிக்கொண்டுவாரும். குறுக்கே பேசுக்கொடுக்கவேண்டாம். மகாராஜா! அப்படியே உத்தரவு செய்யவேண்டும்.

**நளன்**—கணக்குப்பிள்ளை! அப்படியே எழுதிக்கொண்டு வாரும்.

**புஷ்கரன்**—மகாராஜா, ஆடலாம்.

**நளன்**—தாங்கள் ஆடுகிறதுதானே.

**புஷ்கரன்**—அப்படியல்ல, எதிலும் பெரியவர்கள் என்கிற முறையை மறக்கக்கூடாது. தங்கள் கையால் முதலில் ஆட நான் கொடுத்துவைக்கவேண்டுமே. எத்தனை கட்டிடங்களுக்கு அஸ்திவாரக்கல் வைத்த கை, எத்தனை அருமையான கட்டிடங்களைத் திறந்த கை, எத்தனை தானதர்மங்கள் செய்த கை, எத்தனை வெற்றி பெற்ற கை, எத்தனை அரசர்களை வைத்து ஆளும் கை—அந்தக் கையால் ஆட நான் கொடுத்து வைக்கவேண்டுமே. அண்ணன் முந்தியோ, தம்பி முந்தியோ? ஆடவேண்டும் மகாராஜா.

**நளன்**—(ஆடுகிறார்; புஷ்கரனும் ஆடுகிறான்.)

**புஷ்கரன்**—ஆ ஆ! முதல் ஆட்டம் தங்களுக்கே ஜயம். பெரியவர் என்கிற முறையை ஆட்டங்கூடக் காண்பிக்கிறது பார்த்தீர்களா! இந்த ஆட்டத்தில் ஒரு தெய்வத்தன்மை

இருக்கிறது என்பதுமாத்திரம் உண்மைதான். இல்லாமலா பெரியோர்களெல்லாம் கையாண்டு வந்திருக்கிறார்கள்! மகா ராஜா, இப்பொழுதும் தாங்கள்தான் ஆடவேண்டும். ஜயித்தவர்கள்தானே முதலில் ஆடவேண்டியது.

[ஆடுகிறார்கள்.]

புஷ்கரன்—மகாராஜா! இந்த ஆட்டமும் தங்களுக்குத் தான் ஜயம். (ஆடுகிறார்கள்.) இந்த ஆட்டமும் தங்களுக்குத் தானா? இருக்கட்டும். என் கொடியின் மகிமையை இன்றோடு இண்டிலொன்று தெரிந்துகொண்டு விடுகிறேன். சுத்த வீரன் தன் உயிர் உள்ள அளவும் போரில் பின்வாங்கான்; நான் என் பொருள் உள்ள அளவும் இதில் பின்வாங்கேன். தெய்வச்செயல் பார்ப்போம். மகாராஜா, ஆடலாம்.

[ஆடுகிறார்கள்.]

புஷ்கரன்—இதில் எனக்கு. (ஆடுகிறார்கள்.) இதிலும் எனக்குத்தானா. ஆட்டமென்றால் அப்படித்தான் இருக்கும்.

[இவ்வாறு பல ஆட்டங்கள் ஆட அவற்றிலெல்லாம் புஷ்கரனே ஜயிக்கிறான். மந்திரி வருகிறார்.]

மந்திரி—மகாராஜ்! ஒரு செய்தி கேட்கவேண்டும்.

நளன்—சற்றுப் பொறும். (ஆடுகிறார்கள்.)

புஷ்கரன்—இதிலும் எனக்கு—இதிலும் எனக்குத்தான்.

மந்திரி—மகாராஜா! இது தர்மமல்ல. தமயந்தியம்மா உடனே சொல்லும்படி ஒரு செய்தி சொல்லியனுப்பியிருக்கிறார்கள். இந்த ஆட்டம் இப்படித்தான் மயக்கும்.

நளன்—புஷ்கரரே! சற்றுப் பொறும். மந்திரீ! நான் ஆடினால் ஆட்டம் என்ன செய்யும்?

மந்திரி—மகாராஜா, அப்படியல்ல. நாங்கள் வந்தால் சற்றுப் பொறும் என்று சொல்லுகிற வழக்கம் இதுவரையில் உண்டா? ராஜாங்கவிஷயம் அரைக்ஷணம் தப்பினால் ஆயிரக் கணக்கான சேதம் வருமே. மகாராஜா! இந்தப் போதனை தங்களுக்கு யார் செய்தார்கள்.

காலத்தின் அருமையைத் தெரியவொட்டாமல் மறைக்கும் பாவி இதை விட்டால் வேறொன்று மில்லை. இதில் இறங்கிவிட்டால் தன் கடமைகள் மறந்துபோமே, தன் பெருமை மறந்துபோமே, தர்மார்த்த காம மோக்ஷங்களெல்லாம் ஒரு ஆதாயஞ் செலவாய்த் தோன்றுதே!

மகாராஜா! பொருள் என்றால் ஸாமானியமானதா? அது ஒரு தெய்வமல்லவோ? ஒருவர் பொருளை ஒருவர் கொள்ளத் தகுதியான காரணம் வேண்டாமா? நியாயமான விஷயங்களில் ஒருவன் தன்னை விற்றும் செலவழிக்கலாமே; அநுவசியமான விஷயங்களில் ஒரு பைஸாவைக்கூடக் கணக்குத் தான் பார்க்கவேண்டும். அப்படியிருக்க, என்ன அநியாயம், வீண் பொழுதுபோக்குக்காக ஒருவர்பொருளை ஒருவர் கொள்ளைகொள்ளுகிறதா! வெறும் வஞ்சனைக்கும் பயனற்ற ஒருவிதக் கைப்பழக்கத்துக்குமா தன் பொருளையெல்லாம் ஒருவன் தோற்றுவிடுகிறது?

மகாராஜா! பொழுதுபோகாதவர்கள்கூட வேறுவிதமான விளையாட்டுக்களில் தங்கள் பொழுதைப் போக்கவேண்டுமே யொழிய இப்படிப்பட்ட வீண் பந்தயங்களில் பொழுது போக்கலாமா? ஆ ஆ! மனித ஜன்மத்துக்கா பொழுது போக்க வழியில்லை? அதுவும் தங்களைப்போன்ற சக்ரவர்த்திகளுக்கு இன்னும் எவ்வளவு பொழுது இருந்தாலும் வேண்டுமே.

மகாராஜா! தங்கள் பெருமைக்கு இது தகாது. தங்களைச் சேர்ந்தவர்களுக்கெல்லாம் துன்பம் செய்ய இதைவிட வேறுவழி இல்லை. தயவுசெய்து இப்பொழுதே ஆட்டத்தை விட்டு எழுந்திருக்கவேண்டும்.

**உபமந்திரி**— (கீர்த்தனம்—கேதாரம், திரிபுடை.)

**பல்லவி.**

இந்த ஆட்டம் வேண்டாமையா—சந்த்ரகுலத்தில்
இந்த ஆட்டம் வேண்டாமையா.

**அநுபல்லவி.**

எந்தநாளும் இல்லாமல் எவருடனும் சொல்லாமல் (இந்த)

RAMAMANDPADHYAYA
Dr. U. V. SWAMINATHAIYAR LIBRARY



காரணங்கள்.

1. பொய்யர்க்கும்புரட்டர்க்கும் புகுந்துலாபம்கொடுக்கும்
மெய்யர்க்குஆகாது வீணுய்த்துன்பம்கொடுக்கும் (இந்

2. கள்ளோகுடித்தபின்பு கருத்தைமயக்கிவிடும்
கள்ளச்சூதாட்டமோ கண்டால்மயக்கிவிடும் (இந்த)

3. இந்தோஜயம்வந்ததென் றேமாற்றிநேரம்போக்கும்
ஸந்தோஷம்தந்தாற்போல் ஸகலதுன்பமும்ஆக்கும் (இந்)

4. தனக்குச்சரியில்லாத தாழ்ந்தோரையும்சரியாய்
நினைத்துஅழைத்துஆட நினைவில்தோன்றும்வெறியாய்.

5. நாட்டைஆள்வதற்கேஉம் நாழிகைபோதாதே
ஆட்டம்ஆடஉமக்கு ஐயோநேரம்ஏதே (இந்த)

6. வாயிலில்உம்மைக்காண வந்துநெருங்கிநின்றார்
ந்யாயம்பெருமலே நின்றுநின்றுசென்றூர் (இந்த)

7. பொல்லாஇதனைவிட்டுஇப் போதேஎழுந்துபோவீர்.
இல்லாவிட்டால்துன்பம் எல்லோர்க்கும்செய்தீர்ஆவீர்.

மகாராஜா! உடனே இவ்விடம்விட்டு எழுந்திருக்கவேண்டும். இதில் யோசனை செய்யக்கூடாது.

**நளன்** — இருக்கட்டும். நீங்கள் சொல்வது என் மனதில் பட்டுவிட்டது தமயந்தி என்ன சொல்லியனுப்பியிருக்கிறாள், மந்த்ரீ! அதையும் சொல்லும்.

**மந்திரி** — அதுவும் இதைக்குறித்துத்தான். இதுவரையில் ஆடினதைக் கணக்குத் தீர்த்துக்கொண்டு மேல் ஆடுவதைப்பற்றி யோசிக்கச் சொன்னூர்கள். ஏனென்றால், நாடு நகரம் எல்லாம் போய்க் கடனும் ஆகிவிட்டால் நன்றாயிராதே என்பது அம்மாவுடைய யோசனை. எங்களுக்கும் அதுதான் அபிப்பிராயம்.

**நளன்** — (சிரித்துக்கொண்டு) அது நல்ல யோசனைதான். ஆனால் அவ்வளவு பொருள் ஆகியிருக்குமென்று நான் எண்ணவில்லையே, கணக்கைப் பாரும் மந்த்ரீ!

[மந்திரி கணக்கை வாங்கிப் பார்க்கிறார்.]

**மந்திரி**—ஆ ஆ! எவ்வளவு பொருள் ஆகிவிட்டது, பாதி நாடே போய்விட்டதே! பேஷ் பேஷ், நல்ல கணக்கு இது! ஒரு யானை முதல் இரட்டித்துக்கொண்டே போகிறதா! தெய்வமே, என்னமோசம் இது! பார்த்தால் வேடிக்கையாய்த் தோன்றுமே, எவ்வளவு பொருள் ஆகிவிடும். 1, 2, 4, 8—16, 32, 64—நூறு, ஆயிரம், லக்ஷம், கோடி—இது என்ன அநியாயம்.

கணக்குப்பிள்ளை! என்ன உமக்குக்கூடக் கணக்குத் தெரியவில்லையா? கையில் ஏட்டை வைத்துக்கொண்டு இருக்கிறீரே.

**கணக்குப்பிள்ளை** — நான் என்ன செய்வது, குறுக்கே பேசக்கூடாதென்று கண்டிப்பாய்ச் சொல்லிவிட்டார்கள். இருந்தபோதிலும் கண்ஜாடையினாலே மிகவும் சிரமப்பட்டுத் தங்களுக்குச் சொல்லியனுப்பினேன். சேவகர்கள் சொல்லியிருப்பார்களே.

**மந்திரி**—சொன்னார்கள். ஏதோ அவ்வளவாவது தைரியமாய் வேலைசெய்தீரே, அதுவே பெரியகாரியம்.

மகாராஜா! ஏதோ காலகதி அவ்வளவோடு போகட்டும். புஷ்கரரைக் கணக்குத்தீர்த்து அனுப்பிவிடலாம்.

[நளன் யோசிக்கிறார்.]

**புஷ்கரன்**—மகாராஜா! தாங்கள் அப்படி என்னை அவமானப்படுத்தக் கூடாது. நான் தங்கள் ஸத்தியத்தையே நம்பியிருந்தேன். என் பொருள் உள்ளவரையில் ஆடுவேன் என்று சொன்னேன். அப்பொழுது தாங்கள் ஒன்றும் மறுத்துச் சொல்லவில்லை. ஒருவருக்கு உள்ளதுதானே மற்றொருவருக்கும். இப்பொழுது தாங்கள் ஆடமாட்டேன் என்றால் தங்களைப் பலவந்தப்படுத்த நான் ஆளல்ல. அழியக்கூடிய இந்தப்

பொருளுக்காக அழியாத தங்களுடைய ஸத்தியத்தை வீணாக்கவேண்டாம் என்று ஞாபகப்படுத்தினேனேயொழிய வேறில்லை. அப்புறம் தங்களுடைய இஷ்டம்.

மந்திரி—நல்ல நியாயம் இது.

புஷ்கரன்—தன் பொருள் முழுவதையும் ஒருவன் ஆடித் தோற்கட்டும் என்று பார்த்துக்கொண்டிருப்பது நியாயம், மற்றொருவரும் அப்படியே செய்யவேண்டுமென்றால் அது அநியாயம். ஏதோ அபிப்பிராயபேதம். மகாராஜாவினுடைய இஷ்டப்படி செய்யட்டும். எனக்கு அதில் ஒருதடையுமில்லை.

மந்திரி—ஆனால் எப்பொழுதுதான் ஆட்டத்தை நிறுத்துகிறதென்கிறீர்கள், யாராவது ஒருவருடைய பொருள் முழுவதும் போனபிறகுதானே?

புஷ்கரன்—அப்பொழுதும் நிற்குமென்று எண்ணவேண்டாம். தோற்றவர்கள் எத்தனை நாள் கழித்துத் திரும்பப் பொருள் கொண்டுவந்தாலும் சரி, அப்பொழுதும் அவரோடு ஆடவேண்டும். ஆனால், அந்த ஆட்டம் புது ஆட்டமாகவே பாவிக்கப்பட்டு, பந்தயப்பொருள்மாத்திரம் அடியில் நின்றே துவக்கப்படும்.

மந்திரி—இப்படித் தொடர்ந்துகொண்டேயிருந்தால் இந்த பாத்தியம் எப்பொழுதுதான் விடுபடுகிறது என்கிறீர்கள்?

புஷ்கரன்—அதற்கு இடம் இருக்கிறது. அவரவர் பொருள் அவரவர் கைக்கு வந்துவிடும்படியான ஸந்தர்ப்பமும் இந்த ஆட்டத்தில் நேரிடும். அது ஆட்டத்தின் துவக்கத்துக்கு ஸமானமாதலால் அப்பொழுது நிறுத்தினால் அழகு. அதுதான் நியாயம். ஏன், அப்படிப்பட்ட ஸந்தர்ப்பங்கள் நேரிடுவது ஸகஜந்தானே.

மந்திரி—மகாராஜா! இதெல்லாம் சரியல்ல; அவர் பொருள் நம் கையில் வந்திருந்தால் யோசிக்கவேண்டியதுதான். சீக்கிரம் அவருக்கு உத்தரவு கொடுக்கவேண்டும்.

புஷ்கரன்—மகாராஜா! என்னைப்போலத் தாங்களும் உறுதியுள்ளவர்களென்று நம்பினேன். என் பொருள் உள்ளவரை

யில் ஆடுவேன் என்று சொன்னேன். தாங்களும் அப்படியே மௌனமாயிருந்தீர்கள். ஸத்தியம் பெரிது. தங்களுடைய இஷ்டம்.

**நளன்**—மந்த்ரீ! நான் இவ்வளவெல்லாம் இதில் யோசிக்கவில்லை. வேடிக்கையா யிருந்துவிட்டேன். புஷ்கரர் சொல்வதிலும் நியாயமிருக்கிறது. ஒருவர் பொருள் நமக்குச் சேர்ந்துகொண்டிருக்க நாம் பார்த்துக்கொண்டிருப்பது தவறு தானே. அந்தத் தவறுதலுக்கு உள்ள பயன் ஏது வந்தாலும் சரி; நான் அனுபவிக்கவேண்டியதுதான். வினையின் பயனை யார் கடக்கக்கூடும்.

[மந்திரிமுதலியோர் வருந்துகின்றனர்.]

**நளன்**— (கலிநிலைத்துறை.)

1. நூலெ லாம்கற்று நுண்ணுணர்வி யாவையும் வாய்ந்து
சால மாதவம் செய்திடும் தவத்தின ரேனும்
காலம் வந்திடிற் கடந்திட வல்லரோ இன்றேல்
ஏலும் என்பொருட் டிாங்கலீர் நல்லீர்காள் போமின்.

2. எனக்கு நேர்ந்தஅவ் வினைப்பயன் யானுகர் கின்றேன்
தனக்கு நேரிலாத் தன்மையீர்! தளர்ந்திட லழகோ
மனக்கி லேசந்தை மாற்றுவீர் என்னுடை வினையைத்
தினைக்கு ளேயின்னும் சோதித்து வருகின்றேன் சென்மின்.

மந்த்ரீ! போய்வாரும். இந்த ஒரு ஆட்டத்தில் இரண்டிலொன்று தெரிந்துகொண்டு வருகிறேன். தங்களைப்போன்றவர்கள் இங்கிருக்கத் தகாது. புஷ்கரரே! ஆடும்.

**புஷ்கரன்**—சித்தப்படி நடக்கிறேன்.

[ஆடுகிறார்கள். புஷ்கரன் ஜயிக்கிறான்.]

**நளன்** — புஷ்கரரே! உமக்குத்தான் ஜயம் (என்று சொல்லிக்கொண்டே எழுந்திருந்து) இனி எல்லாம் உம்முடையவை. போய்வருகிறேன். உத்தரவு கொடுக்கவேண்டும். என்னுடைய உத்தியோகஸ்தர்கள் குடிகள் எல்லாரையும் அன்பாய்க் காப்பாற்றும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அவர்கள்

ஏதாவது குற்றங்கள் செய்தாலும் என்னைவேண்டி மன்னிக்க வேண்டும். இவ்வளவுதான் எனக்கு வேண்டியது.

**புஷ்கரன்**—(வருத்தப்பட்டுக்கொண்டாற்போல்) மகாராஜா! நாங்கள் அவ்வளவுபெரிய வார்த்தை சொல்லக்கூடாது. என்னை முன்னிலையாக வைத்து ஸ்வாமி தங்களைச் சோதித்தது தான் எனக்கு வருத்தம். ஏதோ தெய்வச்செயலை யார் அறிவார். தயவிருக்கவேண்டும் மகாராஜா. (என்று சொல்லிக்கொண்டு கைகுவித்து வணங்க)

**நளன்**—ஸௌக்யமாயிரும்.

[என்று சொல்லிவிட்டுப் போகிறார். மந்திரி முதலியோர் பின்தொடர்கின்றனர்.]

ஆறாவது காட்சி முற்றிற்று.

## ஏழாவது காட்சி.

விஷயம்: 1. நளன் தன் குழந்தைகளை விதர்ப்பபுரிக்கு அனுப்புதல்;

2. அன்றியும், நளன் தன்பொருட்டு வருந்தும் மந்திரி முதலியோரைத் தேற்றுதல்.

இடம்: 1. மாவிந்தநகரத்தில் தமயந்தியின் அந்தப்புரம்;

2. பிறகு, அந்தப்புரத்தின் வெளியிடம்.

**பாத்திரங்கள்:** நளன், தமயந்தி, குழந்தைகள், புரோகிதர் (ஸுசீலர்); பிறகு மந்திரி முதலியோர்.

[நளன் அந்தப்புரத்துக்கு வருகிறார். தமயந்தி எழுந்து மரியாதையாய் ஒதுங்கி நிற்க, நளன் பீடத்தில் அமர்ந்து, தமயந்தியை நோக்கி]

**நளன்**—குழந்தைகளெங்கே?

**தமயந்தி**—புரோகிதரோடுகூட வெளியில் போயிருக்கிறார்கள். இதோ வந்துவிடுவார்கள். (நளன் கொஞ்சம் புன்சிரிப்புக் கொள்ள, அதைத் தமயந்தி சற்று நிதானித்து) தங்களுடைய புன்

சிரிப்பு ஏதோ ஒரு விசேஷம் உண்டு எனக் காட்டுகிறது. சொல்லக்கூடுமானல்—

**நளன்**—உனக்குச் சொல்லக்கூடாதது ஒன்று உண்டா. மனைவி மந்திரிகளுள் ஒருவானன்றே. மற்ற மந்திரிகள் நாடு உள்ளவரையில்தான். இந்த மந்திரி அப்படியல்லவே. தேகம் உள்ளவரையி லன்றே. மற்ற எல்லாரையும்விட என் இன்பதுன்பங்களில் பங்கும் இந்த மந்திரிக்கு அதிகந்தான்.

**தமயந்தி**—இப்பொழுது தாங்கள் அடையும் மகிழ்ச்சியி லும் எனக்குப் பங்கு உண்டானல்—

**நளன்**—அதற்குத்தானே இங்கு வந்தேன். இப்பொழுது நமக்கு ஒரு நல்லகாலம் வந்திருக்கிறது. நம்முடைய சுமையை ஒருவர் வலுவில்வந்து தாம் சுமந்துகொண்டார். நாம் அழகான மலைச்சாரல்களிலும் பசுமையான காடுகளி லும் சிலகாலம் இளைப்பாறுவோம். பின்பு கடவுள் தோற்று விக்கிறபடி நடக்கட்டும்.

**தமயந்தி**—நியாயந்தான்; அந்த ஸௌகர்யத்தையும் நாம் அறிய வேண்டியதுதானே. கடவுள் எந்தெந்த ஸமயத்தில் எந்தெந்த நிலைமையைக் கொடுக்கிருரோ, அந்தந்த ஸமயத்தில் அந்தந்த நிலைமைகளி லுள்ள லாபங்களை நன்ருய் அநுபவிக்கவேண் டும். எல்லாம் நன்மையின்பொருட்டே அவ்வாறு மகிழ்வது தான் தங்களைப்போன்ற பெரியோர்களுக்கு அழகு. குழந் தைகளை ஊருக்கு அனுப்பிவிட்டுப் புறப்படுவோமா—

**நளன்**—ஆ ஆ! தெய்வம், இன்று நேரிடப்போவதை யறிந்து நேற்றே உன் தகப்பனர் வீட்டிலிருந்து புரோகிதனை அனுப்பியிருக்கிறது. மாமா இதோடு பலநடவை சொல்லி யனுப்பியும் குழந்தைகளை அனுப்பமுடியாமற் போயிற்றல் லவோ. இப்பொழுதும் அனுப்பாமலிருந்தால் அவருக்கு மிகவும் வருத்தமாயிருக்கும். நமக்கும் குழந்தைகளைக் காட்டில் அழைத்துப்போவது மிகுந்த வருத்தத்துக்கு இடமாயிருக்கும். ஆனலும் எனக்கு ஒன்று தோன்றுகிறது தமயந்தி!—குழந்தைகள் உன்னைப் பிரிந்து இருக்கமாட்டார் கள் என்பது உனக்கே தெரியுமே.

**தமயந்தி** — என்னையும் கூடப் போகும்படி ஏவுகின்ற ...றிப்பே தங்களுக்கு நிகழவேண்டாம். நமது நாடுநகரங்கள் ...ானதைக்குறித்தும் எனக்கு லக்ஷ்யமில்லை. குழந்தைகளைப் ...ிரிவதிலும் எனக்கு லக்ஷ்யமில்லை. அவைகளெல்லாம் தங் ...ளுடைய உடைமைகள். என் உடைமை தாங்கள் ஒருவரே. ...தில்மாத்திரந்தான் எனக்கு லக்ஷ்யம். ஒரு பொருளையே ...னது ஸகல பாக்கியமாகவும் நம்பியிருக்கும் அடியாள் ...ிஷயத்தில் சோதிக்கவேண்டாம்.

**நளன்**—தமயந்தி! காட்டில் நிகழும் துன்பங்களை நீ அறி ...ாய். பகைவருடைய வாளை மார்பில் ஏற்றுக்கொள்ளும் ...ீரருக்கே அது சற்று வருத்தமாயிருக்கும். என் அருமைக் ...ாதலியாகிய உன்னை அப்படிப்பட்ட துன்பத்துக்கு ஆளாக்க ...னமில்லையே.

**தமயந்தி**—அப்படியானால் அதிலும் மேலான துன்பத் ...தக்கு ஆளாக்க மனம்வரலாமோ. தங்கள் ஸந்நிதானத்தைப் பிரிவதைவிட மேலான துன்பம் எனக்கு எங்கு உண்டு. இந்த ஸமயம் தங்கள்கூட இல்லாத மனைவி எதற்காக இருக்கிறாள். ஆருமற்ற காட்டில் ஒரு குரல் கூப்பிடுமுன் ஏன் என்று தங்களுக்குப் பணிவிடைசெய்ய உதவாமல் விதர்ப்பபுரியின் அரண்மனைக் கட்டிலில் படுத்துத் தூங்கத்தானோ என்னை மணஞ்செய்தீர்கள்? அது அழகல்ல. தாங்கள் அப்படிச் செய்தால் பெண்களுடைய தர்மத்தைப் பெண்கள் தெரிந்து கொள்ளமாட்டார்கள். சக்ரவர்த்தியாகிய தாங்களல்லவோ நடத்திக் காட்டவேண்டும். இதுவரையில் என் மனம் அறி யாத ஒன்றைத் தாங்கள் ஞாபகப்படுத்தவேண்டாம். தாங் கள் அறியாததல்ல. இதோ புறப்பட்டுவிட்டேன்.

[என்று சொல்ல, நளன் ஒன்றும் பேசாம லிருக்கிறார். அப்பொழுது குழந்தைகளை அழைத்துக்கொண்டு புரோகிதர் வருகிறார்.]

**நளன்** — (புரோகிதரைக் கண்டவுடன் எழுந்திருந்து) ஸுசீலரே! வரவேண்டும். நமஸ்காரம். மாமாவுக்கும், மாமிக் கும் என் வந்தனங்கள் சொல்லவேண்டும். மற்றவர்களையும் நான் விசாரித்ததாய்ச் சொல்லவேண்டும். குழந்தைகளைச்

சிறிதுகாலம் அங்கே வைத்துக்கொண்டிருக்கட்டும். அவர்களுக்கு இல்லாத அன்பு எங்களுக்கு ஏது.

குழந்தைகளே! போய்வாருங்கள். உங்கள் பாட்டனூர் உங்களைக் காணவேண்டுமென்று சொல்லியனுப்பியிருக்கிறார். படிப்பில் கவனம் இருக்கட்டும். மற்றவைகளை எந்தப் பருவத்திலும் ஸம்பாதித்துக்கொள்ளலாம். ஆனால், கல்விக்கு உரிய அஸ்திவாரம் இளமையிலேயே போடப்படவேண்டும்.

இந்திரஸேனை! போய் வருகிறாயா.

**இந்திரஸேனை**—அம்மா! நீ வரவில்லையா?

**தமயந்தி** — அப்பாவோடு ஒருவரும் இருக்கவேண்டாமா? உன் பாட்டி உன்னைக் காணவேண்டுமென்று காத்துக்கொண்டிருக்கிறாள். உனக்கு அருமையான விளையாட்டு ஸாமான்களெல்லாம் வாங்கி வைத்திருக்கிறாள். ஒழிந்த போது அண்ணாவோடு விளையாடு. குழந்தைகளே! பெரியோரிடம் பணிவாயிருங்கள். இந்திரஸேனா! போய்வருகிறாயா. நன்றாய் வாசி. கண்மணிகளே போய்வாருங்கள்.

**நளன்**—இந்திரஸேனா! தங்கையைப் பிரியாமல் உன் விளையாட்டுக்களால் அவளை ஸந்தோஷப்படுத்திக்கொண்டிரு.

ஸுசீலரே! குழந்தைகளை அழைத்துக்கொண்டு போய் வாருங்கள். எங்களை ஆசீர்வதிக்கவேண்டும்.

**தமயந்தி**—(புரோகிதரை நோக்கி) பெரியோர்களுக்கு என் நமஸ்காரம் சொல்லவேண்டும்.

**ஸுசீலர்**—தர்மம் தலைகாக்கும். போய்வருகிறேன்.

[என்று சொல்லி, குழந்தைகளை அழைத்துக்கொண்டு போகிறார். குழந்தைகள் போனதும் தமயந்தி சற்று வருத்தத்தோடு, நளன் அதை உணராதபடி கொஞ்சம் ஒதுங்கி அவருக்குப் பின்பக்கமாய் நிற்கிறாள். நளன் பீடத்தி லமர்ந்து]

**நளன்**—ஆ ஹா! இதென்ன! இப்பொழுதுதானே குழந்தைகள் போனார்கள். அதற்குள் அவர்களை மறுபடி காண

வேண்டும்போல் தோற்றுகிறதே! தமயந்தி, இது என்ன அதிசயம்! உள்ளுக்குள் என்னவோ செய்கிறதே! அன்பு என்பது இப்படித்தானே இருக்கும். அடிவயிற்றில் தோன்றி உடம்பெல்லாம் பரவுகிறதுபோலிருக்கிறதே. ஆஹா! குழந்தைகள் என்ன அமைதியோடு கண்கொட்டாமல் என் புலம்பலைப் பார்த்துக்கொண்டு நிற்கிறார்கள். "பெற்ற மனம் பித்து" என்பது இதுதானே! அன்பு என்பது இப்படியிருக்கும் என்று நான் இதுவரையில் அறியேனே! ஆஹா! அன்பே, உன் வடிவம் இதுவா! குழந்தைகளே, புறத்தில் நிற்கிறீர்களோ, என் உள்ளுக்குள் நிற்கிறீர்களோ? என்னால் இன்னதென்று நிச்சயிக்கக் கூடவில்லையே! உங்களை ஒரு முறை தழுவ என் மார்பும் கையும் ஆசைப்படுகிறதே! தமயந்தி! மறுபடியும் குழந்தைகளை எப்பொழுது காண்போம்? இதென்ன எனக்கு இவ்வளவு மாறுபாடு! ஆ! எனக்கே அதிசயமாயிருக்கிறதே! "தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும்" என்கிறார்களே இதுதானே?

தமயந்தி—மகாராஜா! தாங்கள் என்ன, ஒன்றும் அறியாதவர்கள் அல்லவே. இதுவோ பிறருடைய இடம். இந்த இடத்தில் நாம் தைரியமும் ஸந்தோஷமும் காட்டவேண்டியிருக்க அதற்கு மாறாய்த் தாங்கள் இப்படிப் புலம்புவது நியாயமல்ல. கடவுளை இந்த ஸமயம் மறக்கலாமோ? யார் பிதா, யார் மைந்தர்? ஸர்வலோகபிதா அவரல்லவோ? அவர் அருளுக்கும் எல்லையில்லை, அவர் குழந்தைகளுக்கும் எல்லையில்லை. இந்த இரண்டு குழந்தைகளையும் காக்கவேண்டிய பாரத்தில் ஒரு சிறு பங்கை நம்மிடமும் வைத்திருந்தார். இந்த ஸமயம் நிர்தாக்ஷிண்யமாய் அந்த பாரத்தையும் அவர் தலையிலேயே ஏற்றவேண்டுமேதவிர வருத்தப்படலாமோ? படைத்தவருக்கல்லவோ காக்கக் கடன்? நாம் யார்? தைரியத்தை விடலாமோ? புறப்படுங்கள்.

நளன்—தமயந்தி! நீ சொல்வது நியாயந்தான். கடவுள் என்றவுடன் என் துன்பமெல்லாம் பறந்துவிட்டது. தெய்வ அன்பை வளர்க்கவே இந்தக் காலம் நமக்கு வந்திருக்கிறதென்று எண்ணுகிறேன். அடுத்துப் பாலூட்டும் அருமைத்

தந்தை அவரல்லவோ? இதோ புறப்பட்டுவிட்டேன். போவோம் வா.

[இருவரும் அந்தப்புரத்தினின்றும் வெளியில் வர, **மந்திரிமுதலியோர்** இவர்களைக் கண்டு வருந்த,]

**நளன்**—நீங்கள் ஒன்றுக்கும் வருத்தப்படவேண்டாம். உங்கள் உதவியினாலேயே நான் இவ்வளவோடு தப்பினேன். முடிவுவரையில் நீங்கள் காட்டிய அன்புக்கு நான் என்ன கைம்மாறு செய்வேன். எல்லாம் இறைவன் செயல்.

நீங்களெல்லாரும் என்னிடம் நடந்துகொண்டதுபோலவே புஷ்கரனிடமும் நடந்துகொள்ளுங்கள். ஒருவரிடமும் வெறுப்பு வேண்டாம். அவரவர் நுகர்வது அவரவர் வினைப் பயன். வெறுப்பதெல்லாம தன்னைக்குறித்தும், மகிழ்வதெல்லாம் பிறரைக்குறித்தும் நிகழ்ந்தால் அது எப்பொழுதும் நல்லது. யாவரும் நில்லுங்கள். நல்லோரைக் கெடுக்க எவராலும் இல்லை. தெய்வத்துக்குக் கேடு உண்டானாலன்றோ நல்லோர்களுக்கும் கேடு உண்டு. தர்மம் தலைகாக்கும். நில்லுங்கள். போய்வருகிறேன். எல்லோருக்கும் நன்மை உண்டாகட்டும்.

[நள தமயந்திகள் போகிறார்கள்.]

ஏழாவது காட்சி முற்றிற்று.

## எட்டாவது காட்சி.

**விஷயம்:** நளனும் தமயந்தியும் காட்டிற் செல்லுதல்.

**இடம்:** காடு.

**பாத்திரங்கள்:** நளன், தமயந்தி.

[தமயந்தியை முன்னே விட்டு நளன் பின்னே போகிறார்.]

**நளன்** — தமயந்தி! மெல்லப் போ. இன்னம் நமக்கு என்ன கவலை. இப்பொழுதுதான் உண்மையான மனித

இன்பம் உண்டாகும் காலம். இதுவோ கட்டுப்பாடற்ற இடம். கட்டுப்பாடற்ற காலம். நாமோ கட்டுப்பாட்டினின்றும் நீங்கியவர்கள்.

[சற்று தூரம் போகிறார்கள்.]

தமயந்தி! அடியைப் பார்த்துப் போ. என்னை அடிக்கடி பார்க்காதே. கீழே பருக்கைக்கற்கள் மிகுதியாய் இருக்கின்றன. எனக்கு இவைகளிலெல்லாம் பழக்கம் உண்டு. உன் காலின் மென்மையையும் இதுகாறும் நீ அறியாய். அதையும் இப்பொழுது அறிந்துகொள்ளும் காலம் வந்திருக்கிறது. உன் மேனியின் மென்மையையும் இதுவரையில் நீ கவனிக்கவில்லை. அதுவும் இப்பொழுது வெளிப்படுகிறது. வேர்வையைத் துடைத்துக்கொள்.

[சிறிது தூரம் போகிறார்கள்.]

ஆஹா! தமயந்தி! வெய்யில் என்ன உக்கிரமாய் வீசுகிறது! அடி பொறுக்கவில்லையே. தமயந்தி! வேர்வையைத் துடைத்துக்கொள். என்ன செய்கிறது! சற்று விரைவாய் நட. அதோ தெரிகிற மரத்தடியில் தங்குவோம்.

[போய், இருவரும் மரத்தடியில் நிற்கிறார்கள்.]

தமயந்தி! உன் முகம் எப்படிச் சிவந்துபோய்விட்டது; ஐயோ! இப்படிப்பட்ட ஒரு காட்சியை நான் காணவேண்டுமென்றுதானே சூதாட்டம் ஏற்பட்டது. உன் மனம் பொறுத்தாலும் உன் மேனி பொறுக்கவில்லையே. நீ என்ன செய்வாய்! கடவுள் அப்படி உன்னைப் படைத்து என் கையிலும் ஒப்புவித்துவிட்டார். அந்தப் பொருளை அதன் அருமைக்குத் தக்கபடி வைக்கிற பாக்யம் நான் அடையாமற் போனேன். நான் உன்னை இந்த நிலைமையில் வைக்கப் போகிறேன் என்று நீ கனவிலும் கண்டிருக்கமாட்டேயே!

ஓ! தெய்வமே! உன் ஸங்கல்பம் இப்படியா இருந்தது. ஒன்றுக்கும் அஞ்சாத தீரனாகிய என்னை வருத்த இந்த வழியொன்று வைத்திருந்தாயா? ஓ! தெய்வமே! என்னை வருத்துவதற்காக நீ பிறரை வருத்துவது நியாயமல்லவே. எப்படியாவது நான் வருந்தினால் போதுமென்பது உனக்குக் கருணை

யோ? எனக்காகப் பிறரை வருத்தாதே. அந்த வருத்தத்தை யெல்லாம் சேர்த்து நூறு பங்கு என்னை வருத்து. அது என் பாக்யம்.

தெய்வமே! இவள் வருத்தத்துக்கு ஒரு வழி விடக் கூடாதா? என்னைச் சேர்ந்தவர்களுடைய துன்பத்தைக் காணத்தானே நான் ஒரு ஜன்மம் எடுத்தேன்!

(கண்ணிகள்—நீலாம்புரி, ஆதி.)

1. என்னைநம்பியிருந்த இந்தப்பெண்பாவம்காண
என்கண்ணைப்படைத்தாயோ தெய்வமே—
உன்னையேநம்பிவந்த ஓரிருவர்க்குந்துன்பம்
ஒன்றாய்நீகொடுத்தாயோ தெய்வமே.—

2. அடிகளெல்லாம்கொப்புளம் அடிக்கடிக்காய்நிறைந்தால்
ஆர்தான்கண்டுபொறுப்பார் தெய்வமே—
முடிகளெல்லாந்துறந்தும் முடியாமலேதுன்பம்
மூண்டால்யாரைவெறுப்பார் தெய்வமே.—

3. என்குடைநீழலிலே எத்தனைபேரிருந்தார்
எல்லாம்நீஅறிந்தாயே தெய்வமே இன்று
பொன்போல்இரண்டடிகள் புகஇடமில்லாத
புதுமையுந்தெரிந்தாயே தெய்வமே.—

4. என்னசுமையானாலும் என்மேல்சுமத்திவைப்பாய்
இவளைநீவருத்தாதே தெய்வமே—
என்னதுன்பமேனும்யான் எய்துவேன்என்துன்பத்தில்
இவளைநீபொருத்தாதே தெய்வமே.

[என்று அழுகிறார்.]

**தமயந்தி**—ஸ்வாமி! தாங்கள் ஏன் இப்படி வருந்தவேண்டும். என்னையும் தங்களையும் இவ்வளவு பிரித்துப் பேசி நான் இதுவரையில் கேட்டதில்லையே. தாங்கள் இப்படி வருந்துவது என் மனத்தை வருத்துகிறதேயொழிய இந்தக் காடு என்னை ஒன்றும் செய்யவில்லை. இப்பொழுது நமக்கு என்ன ஆபத்து வந்துவிட்டது. இதை ஒரு ஆபத்தாகத் தங்களைப்போன்ற விவேகிகள் பாராட்டலாமா?

(விருத்தம்.)

1. இந்தவோர் உலகந் தானும்
இருபிள வான போதும்
அந்தரம் அசைந்த போதும்
அசையாத தீர ரேநீர்
எந்தவோர் காரி யத்திற்
கிப்படி வருந்த லானீர்
சந்ததம் உலக வாழ்வு
சலித்திடல் வழக்கந் தானே.

2. உலகெலாம் சுழன்ற போதும்
பரிதிதான் சுழல்வ துண்டோ
பலபல உலகங் கட்கும்
பரிதிதான் ஸாக்ஷி யானன்
நிலமெலாம் தகர்ந்த தேனும்
நெடுவிசும் பழிந்த தேனும்
தலைவரே நீர்தாம் ஸாக்ஷி
என்பது தவிர லாமோ?

3. அழிகின்ற பொருள்க ளுக்கோ
அழிதலே யியல்பா றாற்போல்
அழியாத தீர ருக்கும்
அழியாமை யியல்பே யன்றோ?
அழியாத பொருளாம் தன்னை
அழித்தற்காம் பொருளு முண்டோ
அழிவதே அழியும் என்றும்
அழியாத தழியா தையா!

4. ஈதெலாம் எனக்கு நீரே
இசைத்திட்ட டொனினும் இப்போ(தி)
யாதுமே அறியார் போல
எய்தினீர் துன்ப மெல்லாம்;
பேதையைச் சோதித் தற்கோ
இப்படிப் பேச லானீர்
போதுதான் இறங்கிற் றையா
போகலாம் போது வீரே.

பிராணநாதரே! தங்கள் பெருமையை நினைத்துக்கொள்ளுங்கள். பெரிய காரியங்களை யெல்லாம் அற்பமும் கவலையின்றிச் சிரித்துக்கொண்டு கவனிக்கும் தாங்கள் இந்த அற்பகாரியத்தில் இவ்வளவுதூரம் சிந்தை வைத்தது அடியேனுடைய நிர்ப்பாக்யமென்றே எண்ணுகிறேன். தங்கள் சிரித்த முகத்துக்கு ஒரு வேறுபாட்டைக் கொடுக்க நான் பிறந்தேன் என்று என்னை நான் நிந்தித்துக்கொள்ளும்படி தாங்கள் செய்யவேண்டாம்.

**நளன்**—தமயந்தி! அப்படிபொன்றும் எண்ணாதே. வருத்தம் என்பதைக் கண்டால் பொறுக்காத குணம் எனக்குப் பிறவியமைப்பாய் இருக்கிறது. அது என்னை இப்படியெல்லாம் புலம்பவைத்ததேயொழிய வேறில்லை. வெயில் தணிந்து போய்விட்டது போவோம் வா. மெல்ல நட.

[சிறிது தூரம் போகிறார்கள்.]

ஆ! ஹா! நல்ல காற்று வீசுகிறது. எங்குப் பார்த்தாலும் என்ன பசுமை! என்ன அழகு! அதோ அந்த மலையில் மேகங்கள் படிந்து நகர்வதைப் பார்த்தாயா? இந்த இயற்கையழகு எங்குக் கிடைக்கும். இந்த ஆற்றைப் பார். எவ்வளவு அழகான நீரோட்டம்! இரண்டு கரையிலும் எவ்வளவு உயர்ந்த மரங்கள்! அதோ போகிறது ஒரு வழி பார்த்தாயா? அதுதான் விதர்ப்பதேசம் போகிற வழி. வரவர இருட்டுகின்றது. கையெழுத்து மறையலாயிற்று. இனிமேல் இந்தக் காட்டில் வழிநடக்கக்கூடாது. எங்குத் தங்கலாம். (நாற்புறமும் பார்க்கிறார்) ஓகோ! அதோ ஒரு மண்டபம் தெரிகிறதே, அங்குப் போய்ப் பார்ப்போம். இந்தக் காட்டில் நமக்கென்றே கட்டிவைத்ததுபோல் இருக்கிறது. இதுவும் தெய்வச்செயல்தான். இருட்டு, மெல்ல வா. இனிமேல்—தான் காட்டினுடைய கொடுமைகள் வெளிப்படும் காலம். அதோ காட்டுத்தீ தெரிகிறது பார்த்தாயா? என் கையைப் பிடித்துக்கொள். மெல்ல வா.

[இருவரும் போகிறார்கள்.]

எட்டாவது காட்சி முற்றிற்று.

## ஒன்பதாவது காட்சி.

விஷயம்: 1. நளன் தமயந்தியைப் பிரிதல்.
2. தமயந்தி புலம்பல்.

இடம்: காட்டில் பாழ் மண்டபம்.

காலம்: இரவு.

பாத்திரங்கள்: நளன், தமயந்தி.

[நள தமயந்திகள் காட்டிலிருக்கும் பாழ்மண்டபத்தை அடைகின்றனர்.]

**நளன்**—ஆஹா! கூடியமட்டில் நல்ல இடம். இந்தக் காட்டில் இந்த மண்டபம் கிடைத்தது நமக்கு அரண்மனையை விட அதிக மகிழ்ச்சியைத் தருகிறது. இது உன்னுடைய அதிர்ஷ்டம் என்றே சொல்லவேண்டும். ஏனென்றால், ஆண் பிள்ளைவிடப் பெண்கள் விஷயத்தில் இவைகளெல்லாம் மிகவும் கவனிக்கத்தக்கவை. தமயந்தி! உட்காரு; இன்றைக்கு உனக்கு மிகுந்த சிரமம். அவ்வளவுக்கவ்வளவு நல்ல தூக்கம் வரும். "நித்திரை ஸுகமறியாது."

**தமயந்தி**—தாங்களும் உட்காரலாமே. தங்களுக்கும் மிகுந்த சிரமந்தான்.

[இருவரும் உட்காருகிறார்கள்.]

**தமயந்தி**—என்னவோ மற்றநாளைவிட இன்றைக்குச் சீக்கிரமாகவே எனக்குத் தூக்கம் வருகிறது.

**நளன்**—தமயந்தி, என் தூக்கத்தை நீ கவனித்து முடியாது. உன் முகத்தில் சிரமம் நன்றாய்த் தெரிகிறது. உடலுக்குத் தொந்தரவு கொடுக்காதே. படுத்துக்கொள். சற்றுக்கழித்து நானும் படுத்துக்கொள்ளுகிறேன். படுத்துக்கொள்.

**தமயந்தி**—(கைகுவித்துக் கடவுளைத் தொழுது) கடவுளே! நீர் செய்துவைத்த நேசம் நீடூழி வாழ்வதாக. இவ்வளவு

கருணைக்குக் குறைவில்லாமலிருந்தால் போதும். மற்றவை உம்முடைய சித்தம். தர்மம் நிலைக்கட்டும். ஸாதுக்கள் வாழட்டும். என் கணவனுக்கு ஸகல பாக்கியமும் உண்டாவதாக.

[என்று பிரார்த்தித்துப் படுத்துக்கொள்ளுகிறாள். வழிவந்த வருத்தத்தினால் அயர்ந்து தூங்கிவிட்டாள்.]

**நளன்**— தூக்கம் வராமல் உட்கார்ந்துகொண்டிருக்கிறார். என்னென்னவோ யோசனைகள் செய்கிறார். ஏதோ தனக்குள்ளேயே முணு முணுத்துக்கொள்ளுகிறார். விதியை நொந்துகொள்ளும் பாவனையாய்த் தலையைத் தொட்டுக்கொள்ளுகிறார். சற்று எழுந்திருந்து நிற்கிறார். உட்காருகிறார். தமயந்தியை உற்றுப்பார்க்கிறார். அவள் முகம் வாடிப் போனதைக் கண்டு வருந்துகிறார். கண்ணைத் துடைத்துக்கொள்ளுகிறார். அழுகையை அடக்கிக்கொள்ளுகிறார். மெல்ல எழுந்துபோய் அவள் பாதங்களைப் பார்க்கிறார்; வருந்துகிறார். பாதங்களைத் தொட்டுப் பார்க்க ஆவல்கொண்டவர்போலக் கையைக் கிட்டக் கொண்டுபோகிறார். தொட்டால் விழித்துக்கொள்ளுவாளோ என்று அஞ்சினவர் போலக் கையைச் சரேலென்று இழுத்துக்கொள்ளுகிறார். "தெய்வமே, இப்படியும் ஒரு காலம் வருமா" என்று சொல்லுகிறவர்போல ஆகாயத்தை நோக்கி இருகைகளையும் தூக்கி நொந்துகொள்ளுகிறார். பிறகு மெல்லெலன அவள் கிட்ட உட்காருகிறார். தன் துடையில் முழங்கையை ஊன்றிக் கையை நெற்றியில் வைத்துக்கொண்டு அசையாமல் இருந்து ஆழ்ந்த யோசனை செய்கிறார் அதிலிருந்து ஒரு நிச்சயம் செய்துகொண்டவர்போல் தைரியமாய் நிமிர்ந்து தமயந்தியின் தூக்கத்தைக் கவனிக்கிறார். அவள் அயர்ந்து தூங்குகிறாள் என்று அறிந்து மெல்ல எழுந்திருந்து ஓசைப்படாமல் சில அடிகள் நகர்ந்து கீழே மண்ணில் **விதர்ப்பதேசம் போ** என்று எழுதுகிறார். பிறகு திரும்பிவந்து தமயந்தியை மறுபடியும் உற்றுப்பார்க்கிறார். பின்பு சற்று அசைவற நின்று, மறுபடியும் ஒருதடவை தமயந்தியைப் பார்த்துச் சிறிது கலைந்திருந்த அவள் ஆடையை மெதுவாய்த் திருத்தி "தெய்வமே நீதான் காப்பாற்றவேண்டும்" என்னும் பாவனையாய் ஆகாயத்தை நோக்கிக் கைகாட்டி மெல்லெலன நடந்து அவளைப் பிரிந்து போகிறார். அவள் காது கேளாத அவ்வளவுதூரம் போனதும் வாய்விட்டுப் பின்வருமாறு கைகுவித்துச் சொல்லுகிறார்.)

தெய்வமே! என் அருமைக் காதலியை யான் பிரிந்து போகின்றேன். நீதான் அவளைக் காப்பாற்றவேண்டும். நான் என்னசெய்வேன்! அவளோ, என்னைப் பிரியேன் என்

கிறாள். அவள் வருத்தமோ என்றால் காணக்கூடவில்லை. அன்றியும், நான் இவளோடு இப்படி இருந்தால் என் காரியங்கள் எப்படி ஆகும்? இழந்த நாட்டைத் திரும்பவும் பெற நான் முயற்சிசெய்யவேண்டாமா?

நான் தேர்ப்பாகன்வேடம் பூண்டு அயோத்தியராசராகிய ருதுபர்ணரிடத்தில் வேலைக்கு அமரவேண்டும். அவர் என் தேரோட்டும் வித்தையைக் கண்டு வியந்து அந்த வித்தையைத் தமக்குச் சொல்லித்தரும்படி கேட்பார். நான் என் வித்தையைக் கற்றுக்கொடுத்து அவர் அறிந்த சூதாடும் வித்தையை அவரிடம் நான் கற்றுக்கொள்ளவேண்டும். இந்த முயற்சிகளெல்லாம் தமயந்தி என்னோடுகூட இருந்தால் முடியுமா? ஓ தெய்வமே! உன்னையே நம்பினேன்! அவளை அவள் பிறந்த வீட்டில் சேர்க்கவேண்டியது உன் பாரம். உன்னையே நம்பினேன்!! உன்னையே நம்பினேன்!!! போய் வருகிறேன்.

(விருத்தம்.)

காட்டி லேயென்றன் காதலி யைவிட்டு
நாட்டி லேசென்று வேற்றுரு நான்கொள்வேன்
கேட்டி லேநின்றும் நீக்கிக் கிளியினை
வீட்டி லேகொண்டு சேர்ப்பாய்மெய்த் தெய்வமே.

[என்று சொல்லிப் போகிறார்.]

தமயந்தி—(தூக்கத்தில் புரளுகிறவள் சற்று உணர்ச்சிவந்து, தலைமாட்டில் இருந்த நளன் தன் கைக்குத் தட்டுப்படாமையால், எட்டி இருக்கிறாரோ என்னும் நோக்கத்தோடு, சற்று எழுந்து தடவிப்பார்த்து, அப்பொழுதும் கைக்குத் தட்டுப்படாமையால் நன்றாய் எழுந்து உட்கார்ந்து) ஸ்வாமீ! எங்கு இருக்கிறீர்? எட்டிப் போய்ப் படுத்துக்கொண்டிருக்கிறீர்களா? தாங்கள் இருக்கிற இடம் எனக்குத் தெரியவில்லையே—ஸ்வாமீ! தங்கள் தூக்கத்துக்குப் பங்கம் செய்கிறேன் என்று எண்ணக்கூடாது. பெண்ஜந்மந்தானே. 'ஏன்' என்று ஒரு குரல் கொடுத்தாலும் போதும்—

ஸ்வாமீ! வெளியில்போயிருக்கிறீர்களா? இவ்வளவு அயர்ந்து தூங்கி நான் எப்பொழுதும் பார்த்ததில்லையே. சற்று ஓசைப்பட்டாலும் விழித்துக்கொள்ளுவீர்களே — ஸ்வாமீ! இவ்வளவு பேச்சும் உம்முடைய காதில் விழவில்லையா? ஆஹா! வெளியில்தான் போயிருக்கிறார் (என்று சொல்லிக் கொண்டே எழுந்து நின்று காட்டை நோக்கித் திரும்பி)

ஸ்வாமீ!—ஸ்வாமீ!—பிராணநாதா! எங்குப்போயிருக்கிறீர்!—ஒரு பெண் குரல் கேட்காத அவ்வளவுதூரம் தாங்கள் போகமாட்டீர்களே, இராக்காலமல்லவோ, யாருமற்ற காடாயிற்றே, நான் என்னசெய்வேன்!—

ஆஹா! ஸ்வாமீ, தாங்கள் இவ்வளவுநேரம் வாராமலிருக்க நியாயமில்லையே. தங்கள் நிலைமை இன்னதென்று நான் அறியாதவளாயிருக்கிறேன். காலமோ இரவாயிராநின்றது. இடமோ காடு. மேடுபள்ளமோ மிகுதி. துணிந்துசெல்வோமென்றாலும் உம்முடைய நோக்கத்தைத் தெரிந்துகொள்ளாதவளாயிருக்கிறேன். நான் உம்மைத் தேடப் புறப்படுவதில் உமக்கு ஸம்மதந்தானோ? ஸ்வாமீ, நான் ஒன்றும் அறியாதவளாய்த் தவிக்கிறேனே!—

ஆஹா! பொழுது விடியும் நேரமாயிற்றே. இன்னும் நீர் வரவில்லையா! எனக்கு வேறொன்றும் வேண்டாம். முதலில் தங்களுடைய க்ஷேமம் தெரிந்தால் போதும். பிரபோ! ஏதாவது ஒரு குறிப்பேனும் வைத்திருக்கக்கூடாதா. தாங்கள் மிகுந்த விவேகிகளாயிற்றே, மகா அருள் உள்ளவர்களாயிற்றே. அடியேனுக்கு ஒரு கதியும் இல்லையோ! நான் அப்படி ஒன்றும் தங்களுக்குத் தவறு செய்ததாகத் தெரியவில்லையே! (விடியற்காலமாயிற்று. சற்று வெளிச்சம் தெரிகிறது.)

ஓகோ! இதென்ன, தங்களுடைய எழுத்துப்போல் இருக்கிறதே. ஆஹா! தங்களுடைய எழுத்துத்தான். என்ன எழுதியிருக்கிறீர்கள். (வாசிக்கிறாள்) "விதர்ப்பதேசம் போ" (உடனே மூர்ச்சித்து விழுகிறாள். பிறகு தெளிந்து எழுந்து) ஸ்வாமீ! இப்படியா மோசஞ்செய்து போனீர்!

காட்சி—9.

(கீர்த்தனம்—ஆனந்த பைரவி, திரிபுடை.)

பல்லவி.

ஐயோநான் என்னசெய்வேன் என்னுடைஸாமி
அடியேனெங்குப்போய் உய்வேன்.

அநுபல்லவி.

மெய்யாகஉமையன்றி வேறுநிக்கறியேனே
ஐயோஉமைப்பிரிந்து அரைக்ஷணம்தரியேனே (ஐயோ)

சரணங்கள்.

1. கனவிலும்உமைப்பிரிந்து கண்டறியேனே
நனவில்எப்படிப்பிரிவேன் [என்னுடைஸாமி]
நினைவில் அறிந்திருந்தால் நேற்றுநான்உறங்கேனே
நீர்என்னசொன்னாலும் நெஞ்சம்இரங்கேனே (ஐயோ)

2. இந்தவஞ்சகமெல்லாம் இத்தனைநாள்நீர்
எங்குவைத்திருந்தீரோ [என்னுடைஸாமி]
எந்தன்விதிவசத்தால் இந்தவிதம்எண்ணினீர்
சொந்தஊர்க்குவழிதான் சொல்லிமோசம்பண்ணினீர் (ஐ)

3. என்னைக்கண்டுநீர்செய்த இரக்கமெல்லாம்
எடுத்துரைக்கவும்போமோ [என்னுடைஸாமி]
அன்னையிலும்மேலாக அடியேனைக்கண்டுநொந்தீர்
அதிகஅருளாலன்றோ அனர்த்தம்மிகவேதந்தீர் (ஐயோ)

ஸ்வாமீ! எனக்காக எங்குச் சென்றீர்! எந்தக் கடுங் காட்டில் ஓடுகிறீர்! ஆஹா! உமக்குத்தான் என்ன தைரியம்! நான் ஏகமாய் ஊர்போய்ச் சேருவேன் என்பதில் உமக்கு என்ன அவ்வளவு நம்பிக்கை! தெய்வத்தை நம்புவதென்றால் அதற்கு ஒரு எல்லையில்லையா! முயற்சிவேண்டாமா! இருந் தாலும் உமக்கு இவ்வளவு தைரியம் ஆகாது—ஆஹா! கண் கண்ட தூரத்தில் உம்மைக் காணேனே! இந்த மேட்டுக்கு அப்புறந்தான் போய்ப் பார்க்கட்டுமா!

[என்று சொல்லிக்கொண்டே போகிறாள்.]

ஒன்பதாவது காட்சி முற்றிற்று.

## பத்தாவது காட்சி.

**விஷயம்:** பீமராஜர் நளதமயந்திகளைத் தேடும்படி புரோகிதர்களை அனுப்புதல்.

**இடம்:** விதர்ப்பபுரியில் அரண்மனை.

**பாத்திரங்கள்:** பீமராஜர், புரோகிதர் நால்வர் (ஸுதேவர், ஸுதாமர், ஸுசீலர், மாதவர்).

[பீமராஜரும், புரோகிதர் நால்வரும் சபையில் உட்கார்ந்திருக்கிறார்கள்.]

**பீமராஜர்**—பெரியோர்களே! என் மகளும் மருமகனும் நாடு நகரங்களைத் தோற்றது தாங்கள் அறிவீர்களே. ஹாஹா! அப்படித் தோற்றாலென்ன, நான் ஒருவன் இருக்கின்றேனே. இங்கு வந்து சிலகாலம் இருந்து நாட்டைத் திரும்பவும் அடைதற்குரிய வழிகளைச் செய்துகொள்ளக்கூடாதா? சுற்றத்தார் இருப்பது எதற்காக, இப்படிப்பட்ட அருமையான ஸமயத்தில் உதவிசெய்வதற்கல்லவோ?

ஐயோ! அவர்கள் எங்குச் சென்றார்களோ, என்ன செய்கிறார்களோ, என்ன நிலைமையி லிருக்கிறார்களோ, ஒன்றுந் தெரியவில்லையே. ஏதோ நான் தற்செயலாய்க் குழந்தைகளை அழைத்துவரும்படி ஸுசீலரை அனுப்பினேன். அவர்களும் குழந்தைகளை அனுப்பினார்கள். தெய்வம் அவ்வளவாவது உதவிசெய்தது.

ஹாஹா, குழந்தைகள்தான் என்ன! அவர்கள் வருத்தம் பார்க்கமுடியவில்லையே! எத்தனைநாள் அவர்களுக்கு, 'அப்பா இதோ வந்துவிடுவார்' 'அம்மா இதோ வந்துவிடுவாள்' என்று சாக்குச்சொல்லிக்கொண்டு இருப்பேன்! நாள்களோ ஆகிவிட்டன. சென்ற தூதர்களால் யாதொரு செய்தியும் வெளிப்படவில்லை.

[எழுந்து நின்று கைகூப்பிக்கொண்டு]

பெரியோர்களே! தயவுசெய்து பலவிடங்களிலும் தேடி அவர்களை அழைத்துவரவேண்டும். நீங்கள் ஸங்கல்பித்

னால் ஆகாதது உண்டோ? அவர்களைக் கண்டால் அவர்கள் மனதை ஸமாதானப்படுத்தி அழைத்துவரவேண்டும். என் மகளும், என் மருமகனும் என் குழந்தைகளல்லவோ. அவர்களுக்கு என் நாட்டில் உரிமையில்லையோ. பெரியோர்களே! தயவுசெய்யவேண்டும்.

ஸபாதேவர்—மகாராஜா! இனி அந்தக் கவலை தங்களுக்கு வேண்டாம். தெய்வம் தங்களுடைய அன்பிற்குக் கட்டுப்படும். அவர்கள் ஸுகமே வந்து சேருவார்கள். இதோ புறப்படுகிறோம்.

[என்று சொல்லிப் புரோகிதர்கள் புறப்படுகிறார்கள்.]

பத்தாவது காட்சி முற்றிற்று.

## பதினோராவது காட்சி.

**விஷயம்:** தமயந்திக்கு நேர்ந்த ஆபத்து.

**இடம்:** காடு.

**பாத்திரங்கள்:** தமயந்தி, வேடர்கள் இருவர் (ஒருவன் கிழவன், மற்றொருவன் சிறுவன்).

---

[தமயந்தி காட்டின் வழியாக வந்துகொண்டிருக்கிறாள்.]

தமயந்தி—(தான் வருகிற வழியில்) பிராணநாதா! எத்தனை நாள் உம்மைப் பிரிந்திருப்பேன்! ஸ்வாமீ, நான் ஏழையன்றோ, அவ்வளவு தாங்குவேனோ!

[இவ்வாறு தனக்குள் சொல்லி வருத்தப்பட்டுக்கொண்டு வருகையில், அவ்வழியாக எதிரில் வந்த இரண்டு வேடர்கள் அவளைச் சந்தித்தனர். அவருள்]

கிழவன்—யாரம்மா? ஏன் வருத்தப்படுகிறீர்கள்?

தமயந்தி—ஐயா, என் கணவனைக் கண்டதுண்டா? மகா ஸுந்தர புருஷர். ஏதோ என்னைப் பிரிந்துபோய்விட்டார்.

பல நாளாய்க் காணவில்லை. சொன்னீரானால் உமக்கு மகா புண்யம் உண்டு.

**கிழவன்** — அம்மா! அப்படி ஒருவரையும் காணேமே. தாங்கள் அவர் பிரிவுக்கு வருந்தவேண்டியது நியாயந்தான். ஆனாலும், இப்பொழுது மிகுந்த வெய்யிலாயிற்று. உங்களைப் பார்த்தால் மிகுந்த களைப்பாயிருக்கிறீர்கள். சாப்பிடவில்லையென்று நிச்சயமாய்த் தெரிகிறது. இதோ இந்த மேடு தாண்டினதும் என் குடிசை இருக்கிறது. தாங்கள் வந்து ஏதாவது உண்டு களைப்பைத் தீர்த்துக்கொண்டு போங்கள். இனி இந்த வெய்யிலில் அடிவைக்க உங்களால் முடியாது. புறப்படுங்கள். தயவுசெய்யவேண்டுமம்மா. சுவரை வைத்துக்கொண்டுதானே சித்திரம் எழுதவேண்டும். மகா உத்தமியாகிய உங்களுக்குக் கடவுள் ஒத்தாசை செய்வார். வாருங்கள் அம்மா.

**சிறுவன்**—அவர் கிடக்கிறார் கிழவர்; நம் வீட்டுக்கு வா. உன் அலைச்சல் அதோடே போச்சு.

(கீர்த்தனம்—தீரசங்கராபரணம். ஆதி.)

## பல்லவி.

என்வீட்டுக்குவந்து பாரு பெண்ணே
என்னைவிட்டால்உனக்கு இனிமேல்ஆரு (என்)

## சரணங்கள்.

1. பெண்டாட்டியோஎனக் கில்லை என்னைப்
பெற்றவளுமேஇல்லை பிள்ளைகளுமில்லை
கண்டவுனைவிடமன மில்லை இந்தக்
கட்டையன்பேச்சுக்கு மறுபேச்சுஇல்லை (என்)

2. ஏன்இந்தக்கஷ்டம்உனக் காச்சு நல்ல
எஜமான்இருந்துவிட்டால் இல்லையேபேச்சு
போனவனைத்தேடுவது ஏச்சு இந்தப்
புலிதான்கிளம்பிவிட்டால் யார்விடுவார்மூச்சு (என்)

3. உன்னைப்போலேநல்லவர் யாரு இல்லாட்டா
ஒருசிங்கம்உன்கண்ணில் படுவேனோபாரு
என்னைநம்புவதேஇனி நேரு என்னைப்போல்
இனியகணவனுனக் கிருப்பானோகூறு

[என்று சொல்லிக்கொண்டே காலில் வணங்க வருகிறான்.]

தமயந்தி—(காதைப் பொத்திக்கொண்டு) தெய்வமே! இருக்கிறாயோ!

[என்று சொல்லிக்கொண்டே ஓடுகிறாள். உடனே ஒரு பெரிய நல்லபாம்பு அந்தச் சிறு வேடனைத் தீண்டுகிறது.]

சிறுவன்—அடே அப்பா, பாம்புடா, ஐயோ! செத்தேன் செத்தேன்! (என்று சொல்லிக்கொண்டே கீழே விழுகிறான்.)

கிழவன்—மகாபாவி! எத்தனைபெரிய பாம்புடா, உனக்கென்றே சாமி அனுப்பினாற்போல இருக்கிறதே. அடா தடிப்பயலே, கள்ளுக் குடித்தால் இன்னார் இனியார் என்று கிடையாதா? எது பழுதுபோனாலும் உத்தமி வயிற்றெரிச்சல் பழுதுபோகாதடா. 'அம்மா நான் பண்ணினது தப்பிதம் தப்பிதம்' என்று சொல்லிக்கொண்டே சா. நல்லகதியாவது கிடைக்கும்.

பதினோராவது காட்சி முற்றிற்று.

## பன்னிரண்டாவது காட்சி.

விஷயம்: தமயந்தி தாய்வீடு செல்லல்.

இடம்: காடு.

பாத்திரங்கள்: தமயந்தி, புரோகிதர் (ஸுதேவர்).

[வேடனால் வருத்தமடைந்த தமயந்தி மனம்பொறுக்காதவளாய்ப் புலம்பிக்கொண்டு வருகிறாள்.]

தமயந்தி—பிராணநாதரே! கணவனைப் பிரிந்து தனியே செல்லும் பெண்களுக்கு நேரிடக்கூடியதைத் தாங்கள் அறி

யாதவர்களல்லவே. நீர் என்னதயவினலே பிரிந்தபோதிலும் நீர் செய்ததை எண்ணினுல் ஐயா! பொறுக்கமுடியவில்லையே, நான் என்னசெய்வேன்!

(கண்ணிகள்—பிலகரி, திரிபுடை.)

1. உம்மைநம்பியிருந்த ஒருபேதையைக்காட்டில்
ஓட்டிவிடுவதழகோ [என்னையனே] என்னை
ஒன்றியென்றேயறிந்து ஒருவன்நில்லடிஎன்றால்
ஓடவும்அறியேனே [என்னையனே ஓடவும் அறியேனே.]

2. உமதுகண்உறங்கினுல் ஒருத்திபின்உறங்குவேன்
உமக்குமுன்அன்றுறங்கினேன்—இந்த
ஒருகுற்றத்துக்காகவோ ஓயாததண்டனை
ஒருமுடிவிதற்கில்லையோ.

3. பெண்ஜன்மம்எடுத்தபின் பிரியலாமோஉம்மை,
பிரிந்துநீர்சென்றதறிந்தும்—இந்த
மண்ணும்உயிர்தான்இன்னும் மாயாமல்இருப்பது
மகத்தானதுன்பமல்லவோ.

4. மானம்பெரிதோஅன்றி ப்ராணன்பெரிதோசொல்லும்
மானம்போகவந்ததே—இன்னும்
நானும்உயிர்தரித்தால் நல்லோர்கள்நகையாரோ
நான்இதோஉயிர்துறப்பேன்

[என்று சொல்லிக்கொண்டே முன்தானையை இழுத்துக்கட்டிக் கொண்டு, அவ்வழியைச்சார்ந்த ஒரு மலைப்பள்ளத்தில் விழ ஓடுகிருள். அந்தக் காட்டுவழியில் நளதமயந்திகளைத் தேடிக் கொண்டு தற்செயலாய் வந்துகொண்டிருந்த ஸுதேவர் இந்த அழுகைக்குரலைக் கேட்டு அத்திசைநோக்கி வர, அப்பொழுது உயிர்துறக்கஓடும் நிலைமையில் இருந்த தமயந்தியைக் கண்டு, விரைவாய் ஓடி]

**ஸுதேவர்**—யாரம்மா! நில்லு நில்லு, தமயந்தியா, நில்லு நில்லு, க்ஷேமம் க்ஷேமம், வருத்தப்படாதே, நில்லு.

**தமயந்தி**—யாரையா, என்கணவரைக் கண்டீரா, என் கணவரைக் கண்டீரா. ஸுதேவரா. என் கணவர் வந்திருக் கிருரா. நமஸ்காரம். ஸ்வாமி! என் கணவர் வந்திருக்கிருரா?

ஸுதேவர்—அம்மா, பொறுபொறு, வருத்தப்படாதே. யாருக்கும் விதி வலிது. உன் கணவனைச் சிறிதுநாளில் காண்பை. அதற்குத்தக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. என் வார்த்தையை நம்பு. உன்னைக் காண நாங்கள் பலரும் தேடிவந்தோம். அரைக்ஷணம் நமக்கெல்லாம் மானத்தைக் காப்பாற்றிற்று. இப்படி நீ செய்வதைவிட உன் கணவனுக்கு வேறு துன்பம் என்ன இருக்கிறது. ஆனால், உன் வருத்தமிகுதி அப்படித்தான் செய்யும். யார்தான் பொறுப்பார். நீ இவ்வளவுநாள் பிழைத்திருந்ததே எங்கள் பாக்கியம். உன் கற்பும், உன் கணவரது நல்ல எண்ணமும் எங்களுக்கெல்லாம் பெருமைகொடுத்தது. புறப்படு, உன் தந்தை உன் வருகையைப் பார்த்துக்கொண்டிருக்கிறார். உன் கணவர் நோக்கமும் அது. சுற்றத்தார் எதற்காக இருக்கிறார்கள். கணவன் நோக்கத்தை நிறைவேற்றுவது கற்புள்ள மாதர் கடமையன்றோ? யோசனைசெய்யாதே. நீ அறியாதது என்ன இருக்கிறது. வருத்தத்தை விடு, புறப்படு அம்மா.

தமயந்தி — ஸுதேவரே! நீரே எனக்குத் தந்தை, நீரே எனக்குத் தாய், என் கணவனைக் காட்டும். அந்த வரம் தாரும்.

ஸுதேவர் — அம்மா, அது என் பொறுப்பு. உன்னை எனக்குக் காட்டிய தெய்வம் எங்குப்போய்விடும். புறப்படு அம்மா.

தமயந்தி—ஸ்வாமீ, நீரே என் உயிரைத் தந்தவர். என் உண்மையுயிராகிய கணவனையும் தாரும். உம்மையே சரணமாக அடைகிறேன். தங்கள் உத்தரவுப்படி வருகிறேன்.

ஸுதேவர்—ஹாஹா! தெய்வச்செயல் என்ன அதிசயம்!

[என்று சொல்லிக்கொண்டே போகிறார். தமயந்தி பின்தொடருகிறாள்.]

பன்னிரண்டாவது காட்சி முற்றிற்று.

## பதின்மூன்றாவது காட்சி.

விஷயம்: இரண்டு தொழிலாளிகள் நளனுடைய தொழிற்கல்வியைக்குறித்துப் பேசிக்கொள்ளுதல்.

இடம்: காட்டைச் சார்ந்த ஒரு சாலை.

காலம்: அந்திப்பொழுது.

பாத்திரங்கள்: இரண்டு தொழிலாளிகள் (ஒருவன் மூத்தவன், மற்றொருவன் இளையவன்).

---

**குறிப்பு**—(இதில் வரும் பேச்சுக்களை ஸமயோசிதமாய்க் கொச்சையாய்ப் பேசவேண்டும்.)

[இரண்டு தொழிலாளிகள் தங்கள் வேலை முடிந்ததும் வீட்டிற்குப் போகப் புறப்படுகிறார்கள்.]

**தம்பி**—அண்ணே! வீட்டுக்குப் போகலாம் வருகிறாயா?

**அண்ணன்**—ஆகா, பாடிக்கொண்டுகூடப் போகலாம், சாமி இன்றைக்குப் படியளந்துவிட்டார். நீ பாடுகிறையா, நான் பாடட்டுமா?

**தம்பி**—நான் பாடுகிறேன் அண்ணே!

**அண்ணன்**—சரி, பாடு பார்ப்போம்.

**தம்பி**—(கீர்த்தனம்—நாதநாமக்கிரியை, திரிபுடை.)

பாவஞ்செய்யாதிரு மனமே—நாளைக்
கோபஞ்செய்தேஎமன் கொண்டோடிப்போவான்
பாவஞ்செய்யாதிரு மனமே.

**அண்ணன்** தனதந்தி நாதந்தி நாநா—தானு
**தம்பி** தனதந்தி நாதந்தி நாதந்தி நாநா
**இருவரும்** தனதந்தி நாதந்தி நாநா.

**தம்பி**—1. சூதாட்டம்ஆடின தாலே—எல்லாம்
தோற்றுநளன்இந்தக் காட்டுக்குள் ஓடி
மாதானபெண்டாட்டி யோடும்—அவர்
மகத்தானதுன்பங்கள் படுகிறார்கோடி.

**இருவரும்**—தனதந்தி * * * * * *

தம்பி—2. செல்வமிருந்து கிடக்க—அதைச்
செலவழிக்கஅறியாமலேஐயோ
பொல்லாதசூதில் புகுந்து—பொருள்
போக்கிஅலைகிறார் இதுஎன்னபொய்யோ.

இருவரும்—தனதந்தி * * * * * *

தம்பி—3. காசுதான்இல்லாத போதும்—சூதில்
கருத்தைவைக்காமலேதொழில்களைப்பண்ணி
நேசமாய்உணவினை உண்ணு—அந்த
நீசமாம்ஆட்டத்தை விஷமெனஎண்ணு.

இருவரும்—தனதந்தி * * * * * *

தம்பி—4. உணவுக்கில்லாமல் நளன்தான்—எந்த
ஊரிலேபிச்சை எடுக்கச்சென்றானே
பணந்தான்இருந்தாலும் என்ன—ஒரு
பாங்கானதொழில்தெரிந் தால்துன்பம்ஏனோ
தனதந்தி நாதந்தி நாநா.

அண்ணன்—5. அப்படிஎண்ணாதே தம்பி—நளன்
அந்தச்சோம்பேறியில் சேர்ந்தவர்அல்லர்
எப்படித்தேர்ஓட்டு வார்பார்—பின்அவர்
எப்படிச்சமையல்செய் வார்அதில்வல்லர்
தனதந்தி நாதந்தி நாநா.

தம்பி—என்ன அண்ணே! அந்த இரண்டு தொழிலும் அவருக்குத் தெரியுமா—தேரோட்டுகிறது, சமையல் செய்கிறது—பின்னையென்ன, பிழைத்துக்கொண்டான்.

அண்ணன் — தெரியுமென்றால் இவ்வளவு அவ்வளவு தெரியுமென்று எண்ணிக்கொண்டாய்? அந்த இரண்டு தொழிலும் அவரை வெல்லுகிறவர் இல்லை தம்பி!

தம்பி — அப்படியா! பின்னையென்ன, அவர் எங்கே போனாலும் ஸலாம்போட்டுஅல்லவா வேலைக்கு வைத்துக் கொள்ளுவார்கள். பிச்சை வாங்கவேண்டுமென்று அவருக்கு என்ன தலையில் எழுத்தா. ஹாஹா!

6. நளனைப்போல்உண்டோ ஸமர்த்தர்—ஒரு
நல்லசமயம் வருமென்றுமுன்னே
உளவாய்இரண்டுதொழில் கற்றார்—அவர்
ஊக்கமேஅழியாத செல்வமென் அண்ணே.

**இருவரும்**—*தனதந்தி* * * * * * *

**அண்ணன்**—தம்பி! தெரிந்துகொண்டாயா? நளனை யார் என்று எண்ணிக்கொண்டாய்? சோம்பேறிராஜா என்று எண்ணிக்கொண்டாய்?

[இருவரும் போகிறார்கள்.]

பதின்மூன்றாவது காட்சி முற்றிற்று.

## பதினான்காவது காட்சி.

**விஷயம்:** 1. வாகுகன் புலம்பல் (வாகுகன் — தேர்ப்பாகன் வடிவம்பூண்ட நளனுக்கு மறுபெயர்).
2. புரோகிதர்கள் வாகுகன் செயலைக் கண்டு நளன் என நிச்சயித்தல்.

**இடம்:** அயோத்தியை அடுத்த காடு.

**பாத்திரங்கள்:** வாகுகன், புரோகிதர் இருவர் (ஸுதேவர், ஸுதாமர்).

[வாகுகன் அயோத்தியை அடுத்த காட்டில் ஒரு தனியிடத்தில் இருந்துகொண்டு புலம்புகிறான்.]

**வாகுகன்**—ஐயோ! என்னசெய்கிறாளோ, எங்கு இருக்கிறாளோ, எப்பொழுது காண்பேனோ? ஹாஹா! என்ன அன்பு, என்ன அழகு, என்ன குணம்!

(கொச்சகம்.)

1. கண்ணேஎன் கண்மணியே காட்டிலுனை விட்டுவந்தேன்
பெண்ணேஉன் செய்தி பிறர்சொலவும் கேட்டறியேன்
எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணுகின்றேன் ஏழையேன்
உண்ணோய்கள் தீர ஒளிமுகந்தான் காட்டாயோ!

2. மண்கலந்த வாழ்வை மதியாத மாதவரும்
எண்கலந்த நின்பால் இரக்கமே கொண்டிடுவார்
புண்கலந்த நெஞ்சேன் புறம்விடுத்துப் போந்தேனே
பண்கலந்த சொல்லாய் பனிமுகந்தான் காட்டாயோ!

3. வானுடர் கோவை மதியா தென்னை மதித்தே
பூநாடு மாலை புனைந்தாயுன் பொற்பறியா
தேனோடி வந்தேன் இனிப்பிரியேன் என்னுயிரே
நீநாடி வந்துன் நிழல்முகந்தான் காட்டாயோ!

4. என்னையே நாடி யிருக்கின்றாய் என்பறிந்தும்
உன்னையே நாடா தொளிந்தொளிந்து போவேனோ
பின்னையே கண்டேன் பெரும்பிழையென் றென்செய்வேன்
பொன்னையே போல்வாய் புதுமுகந்தான் காட்டாயோ!

[இவ்வாறு புலம்புபவன் திடுக்கென எழுந்து]

ஹாஹா! நேரமாயிற்றே. அரசர் தேடுவாரே.

[இவ்வாறு புறப்படும் ஸமயத்தில், இந்த வாகுகனது உண்மையை அறியவேண்டுமென்றே வந்து ஒளிந்துகொண்டிருந்தவர்களுள் ஒருவராகிய ஸுதேவர் வெளிப்பட்டு வாகுகனை நோக்கி]

ஸுதேவர்—யாரையா நீர்? ஏன் அழுகிறீர்?

வாகுகன்—(சட்டெனத் தன் அழுகைக்குறிப்பை மாற்றி ஒ[ரு] விதப் புன்சிரிப்புச் செய்துகொண்டு,) ஐயா! நான் இந்த அயோ[த்]தியாசருடைய தேர்ப்பாகன். எனக்கு இந்தப் பாடல்களி[ல்] மிகவும் விருப்பம். அதனால், ஒழிந்தபோது ஏகாந்தமா[ய்] வந்து பாடிக்கொண்டிருப்பேன். மற்றப்படி எனக்கு அ[ழ] வேண்டியது ஒன்று மில்லை. மன்னிக்கவேண்டும். அர[சர்] காத்திருப்பார். போய்வருகிறேன். நமஸ்காரம்.

[என்று விரைவாய்ப் போய்விடுகிறான். அவன் போனவுடன் அங்[கு] ஸுதாமரும் வெளிப்படுகிறார்.]

ஸுதேவர்—ஸுதாமரே! பார்த்தீரா நளமகாராஜர் ம[ா]று வேஷம் போட்டுக்கொண்டிருப்பதை?

**ஸுதாமர்** — ஆம், அதற்கென்னதடை? நளமகாராஜர் தான். இப்பொழுது நாம் கூப்பிட்டால் வரமாட்டார்; வாரும், வேறு ஏற்பாடு செய்வோம்.

[புரோகிதர் இருவரும் போகிறார்கள்.]

பதினான்காவது காட்சி முற்றிற்று.

## பதினைந்தாவது காட்சி.

**விஷயம்:** ருதுபர்ணரிடம் 'தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம்' என்று தெரிவித்தல்.

**இடம்:** அயோத்தியின் அரண்மனையில் ஒரு மண்டபம்.

**பாத்திரங்கள்:** ருதுபர்ணர், வாகுகன், புரோகிதர் (ஸுதாமர்), சேவகன்.

[அயோத்தி அரசராகிய ருதுபர்ணர் வாகுகனோடு சூதாடிக்கொண்டிருக்கிறார். அரசர் உட்கார்ந்தும் வாகுகன் நின்றுகொண்டும் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.]

**சேவகன்**—மகாராஜ்! ஒரு பெரியவர் வந்திருக்கிறார்.

**ருதுபர்ணர்**—வரச்சொல்லு.

[ஸுதாமர் வருகிறார். உடனே ருதுபர்ணர் எழுந்திருந்து]

ஸுதாமரா, வரவேண்டும் வரவேண்டும். நமஸ்காரம். பீமராஜர் ஸௌக்யமா?

**ஸுதாமர்**—எல்லாரும் ஸௌக்யம். உட்காரவேண்டும் (என்று சொல்ல இருவரும் உட்காருகிறார்கள்.)

மகாராஜா! இதென்ன அதிசயமாயிருக்கிறது. தாங்கள் ஒருநாளும் சூதாடுகிறதில்லையே.

**ருதுபர்ணர்**—ஆம், உண்மைதான். ஒரு ஸந்தர்ப்பத்தை உத்தேசித்து அப்படிச்செய்யும்படி யாயிற்று.

ஸுதாமர்—இந்த ஆட்டத்தில் தங்களுக்கு நிகர் இல்லை என்பது யாவரும் அறிந்த விஷயம். அவ்வளவு தெரிந்திருந்தும் தாங்கள் அதை ஆடுவதில்லை என்பதுதான் தங்களுக்கு உள்ள பெரிய மதிப்பு. ஒரு தொழில் தெரிந்திருந்ததனால் குற்றமா, அதை உபயோகப்படுத்துவதில்லவோ குற்றம் வருகிறது. ஜனங்களைத் தீச்செயலினின்றும் தடுக்க வேண்டிய அரசனுக்கு அத் தீத்தொழில்களின் நுட்பங்கள் தெரியவேண்டியதுதான். ஆனாலும் இவரோடு தாங்கள் ஆட நியாயமில்லையே.

ருதுபர்ணர்—ஸுதாமரே! இவர் ஏதோ உருவத்தில் இப்படியிருக்கிறார் என்று எண்ணவேண்டாம். இவரும் க்ஷத்ரியவம்சந்தான். தேரோட்டுவதில் மகா தீரர். இவரது தேரோட்டுந் திறமையைக் கண்டு வியந்து அதில் உள்ள நுட்பங்களைச் சொல்லிக்கொடுக்கும்படி நான் இவரைக் கேட்டேன். இவர், சூதாட்டத்தின் நுட்பங்களைச் சொல்லிக்கொடுக்கும்படி என்னைக் கேட்டார். நாங்கள் அவ் விரு தொழில்களையும் மாறிக் கற்றுக்கொள்ளுகிறோம். இப்பொழுது சூதாட்டத்தில் மகா சமர்த்தராகிவிட்டார். மகா புத்திநுட்ப முள்ளவர். மிக விரைவில் கற்றுக்கொண்டுவிட்டார்.

ஸுதேவரே! நல்ல மனதென்று பலமுறையும் சோதித்துத்தான் இந்த ஆட்டத்தைக் கற்றுக்கொடுத்தேனேயொழிய, யாவருக்கும் கற்றுக்கொடுப்பதென்று வந்துவிட்டால் பெருத்த தீமை விளையும். இவருடைய பெருந்தன்மையும் நல்ல மனதும் என்னை வசப்படுத்தின. அன்றியும் இவர் அசுவலக்ஷணங்களையும் நன்றாய் அறிவார். சமையல் செய்வதிலும் மகா வல்லவர். நளபாகம் இவரிடத்தில் காணலாம்.

ஸுதாமர்—மகாராஜா! நான் வந்த காரியம் வேறு. அதைத் தாங்களே ஞாபகப்படுத்திவிட்டீர்கள். தெய்வச் செயல். நளமகாராஜா மிகச் சிறந்தவர்தான். ஆயினும், அவர் அறிவு இப்பொழுது சற்றுப் பேதித்திருக்கிறது. அவர் நிலைமையும் இன்னதென்று தெரியவில்லை. அருமையான எங்கள் ராஜகுமாரியை ஆருமற்ற காட்டில் நடு இர

MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY

வில் தூங்கும்பொழுது கைவிட்டு ஓடிவிட்டார். இதுவரையில் பார்த்தோம். அவரைக் காணோம். இனி அவரிடம் நம்பிக்கை வைப்பது தகாதெனத் தமயந்திக்கு இரண்டாம் சுயம்வரம் வைத்திருக்கிறோம். தயவுசெய்து வரவேண்டும். ஆனால் சீக்கிரம் புறப்படவேண்டும். நாளை உதித்தால் சுயம்வரம்.

வாகுகன் – தமயந்தியம்மாவுக்கா?—விதர்ப்பபுரியிலா?—நாளைக்கா?—

ஸுதாமர்—ஆம்.

வாகுகன் — அந்த அம்மா அப்படிச் செய்யமாட்டார்களே.

ஸுதாமர் — நளன் இப்படிச் செய்வார் என்று யார் எண்ணியிருந்தார்கள். அப்படித்தான் இதுவும். தங்களுக்கு ஸந்தேகம் இருந்தால் மகாராஜாவோடுகூடத் தாங்களும் வந்து ஸந்தேகநிவிர்த்தி செய்துகொள்ளுகிறது. ஏன், தாங்களும் சுயம்வரமண்டபத்துக்கே வரலாம். க்ஷத்ரியர்தானே. தங்களுக்கு ஒரு ஸமயம் மாலை கிடைத்தாலும் கிடைக்கலாம்.

ருதுபர்ணர்—('ஸுதாமர் வாகுகனைப் பரிஹாஸம் செய்கிறார்' என்று எண்ணிப் புன்சிரிப்புக்கொள்ளுகிறார்.)

ஸுதாமர் — மகாராஜா! நான் ஏதோ வேடிக்கையாய்ச் சொல்லுகிறேன் என்று எண்ணவேண்டாம். இவருடைய கல்வித்திறமையைப்பற்றித் தாங்கள்தானே சற்று முன் சொன்னீர்கள். இதெல்லாம் ஒரு அதிர்ஷ்டந்தானே. நேரமாயிற்று. தாங்கள் தயவுசெய்து சீக்கிரம் புறப்படவேண்டும். போய்வருகிறேன். (என்று எழுந்திருக்க)

ருதுபர்ணர்—(தாமும் எழுந்து) நமஸ்காரம். அப்படியே செய்கிறேன். (என்று அவரை அனுப்பிவிட்டு)

வாகுகரே, புரோகிதர் சொன்னதையெல்லாம் நீர் அறிவீரே. நாம் குறித்த காலத்துக்குள் போய்ச் சேரவேண்டுமானால், அது உம்மாலேதான் ஆகவேண்டும்.

வாகுகன் — மகாராஜா! ஒரு விண்ணப்பம். குறித்த காலத்துக்குள் போய்ச் சேருவதற்கு நான் ஜவாப்தாரி. ஆனால் விளையாட்டாகவாவது சுயம்வரமண்டபத்துக்கு என்னைக் கூப்பிடாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். பெரியோர்கள் அப்படித்தான் பரிஹாஸமாய்ப் பேசுவார்கள். இங்கு நான் தங்களுடைய பரிபூரண கிருபைக்குப் பாத்திரனாக இருந்தபோதிலும் அப்படிப்பட்ட இடங்களில் நாம் சேர்ந்துபோவது அழகல்ல. இந்த ஒரு விஷயத்தில் தயவு செய்யும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

ருதுபர்ணர் — வாகுகரே, அதுவிஷயத்தில் உம்முடைய இஷ்டப்படி நடந்துகொள்ள என்ன தடை யிருக்கிறது. போய் விரைவில் தேர்கொண்டுவாரும்.

வாகுகன்—மகாராஜா! இதோ கொண்டுவருகிறேன்.

[என்று போய்த் தேர்கொண்டுவந்து நிறுத்தி]

மகாராஜா! தேர் வந்துவிட்டது, ஏறலாம்.

ருதுபர்ணர்—என்ன வாகுகரே, இவ்வளவு இளைத்த குதிரைகளைப் பூட்டியிருக்கிறீர். நாம் செல்லவேண்டிய தூரமோ மிகுதியாயிருக்கிறதே.

வாகுகன் — மகாராஜா! ஸந்தேகப்படவேண்டாம். மிக அருமையான குதிரைகள். இதோ பார்த்தீர்களா—தலையில் இரண்டு சுழி, நெற்றியில் ஒன்று, விலாவில் ஒவ்வொருபக்கத்திலும் இரண்டு, மார்பில் இரண்டு, முதுகின் மேற்புறத்தில் ஒன்று—இப்பத்தும் மிகச் சிறந்த சுழிகள். இவற்றின் பெருமையை இக் குதிரைகள் ஓடும்பொழுது தாங்கள் அறிவீர்கள்.

ருதுபர்ணர்—அப்படியா, ஸந்தோஷம். உமது வாக்கு ஒருநாளும் தவறாது. தர்மம் ஜயிக்கட்டும்.

[என்று தேரில் ஏறுகிறார். வாகுகன் தேரை நடத்திக்கொண்டு போகிறான்.]

பதினைந்தாவது காட்சி முற்றிற்று.

## பதினொருவது காட்சி.

**விஷயம்:** தமயந்தி தனது கணவன் வரவை எதிர்பார்த்தல்.

**இடம்:** விதர்ப்பபுரி அரண்மனையில் வீதியைச் சார்ந்த ஒரு மாடம்.

**பாத்திரங்கள்:** தமயந்தி, தோழி கேசினி.

[மாறுவேடம்பூண்ட தனது கணவர் தேரோட்டிக்கொண்டு வருவார் என்று எதிர்பார்த்திருக்கும் தமயந்தி தனது ஆசைமிகுதியினாலே புலம்பல்.]

**தமயந்தி** — ஆஹா! ஏன் இன்னும் வரவில்லை? நேரமாயிற்றே. இதற்குள் வந்திருக்கவேண்டுமே!

(கீர்த்தனம்—யதுகுலகாம்போதி, திரிபுடை.)

**பல்லவி.**

கண்கள் துடிக்கின்றதே கணவனைக்காணவென்று,
காலமும் வரவில்லையோ.

**அநுபல்லவி.**

நண்பர்கள்சிலர்சென்று நல்லஅயோத்தியில்என்
கண்மணியானவரைக் கண்டேன்என்றுசொன்னரே (கண்)

**சரணங்கள்.**

1. குணத்தாலும்குறியாலும் கொண்டகணவனென்றும்
கோலம்ஒன்றேவேறென்றும் கூறினார்அதனாலே
மணத்தில்இரண்டாம்சுயம் வரமென்றுசொல்லிவிட்டேன்
மணமென்றுசொல்லிவிட்டும் மன்னவனைக்காணேனே (க)

2. என்றன்கணவன்உள்ளம் என்னைமகிழ்ந்துகாண
இங்குவரவேசெய்து என்னைஅவருக்காக்கி
இந்தஉதவிசெய்ய எத்தனைநாள்உனைவேண்டி
இருக்கின்றேன்தெய்வமே இன்னம்தயவில்லையோ (கண்)

**தோழி**—அம்மா! ருதுபர்ணமகாராஜர் தேர் வருகிறது. ஒருவர் ஸாரத்யம் செய்துகொண்டு வருகிறார். வந்து பாருங்கள் அம்மா.

[தமயந்தி எழுந்துவந்து பார்த்து]

**தமயந்தி**—ஆ ஆ! அவரைக் கண்டவுடன் எனக்கு என்னவோ செய்கிறது. தோழீ! நீ போய் அவர் செய்கையை அறிந்துவா. குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு போ. கடைசியாக நான் வருகிறேன்.

பதினாறாவது காட்சி முற்றிற்று.

## பதினேழாவது காட்சி.

**விஷயம்:** நளன் தனது உண்மைவடிவத்தை வெளிப்படுத்தல்.

**இடம்:** விதர்ப்பபுரியில் பீமராஜரது அரண்மனையைச் சேர்ந்த ஒரு வீடுதி.

**பாத்திரங்கள்:** வாகுகன் (நளன்), தோழி கேசினி, குழந்தைகள் (இந்திரஸேனன், இந்திரஸேனை), தமயந்தி, புரோகிதர் (ஸுதாமர்), ருதுபர்ணர், பீமராஜர்.

[வாகுகன் உலாவிக்கொண்டிருக்கிறான். தோழி குழந்தைகளை அழைத்துக்கொண்டு அவ்வழியே வருகிறாள். குழந்தைகள் நின்று வாகுகனை உற்றுப் பார்க்கிறார்கள் அப்பொழுது இந்திரஸேனை தோழியை நோக்கி]

**[illegible]**—அக்கா! இன்றைக்கு அப்பா வருவார் என்று அம்மா சொன்னாளே. எப்பொழுது வருவார். இப்பொழுது வருவாரோ. என்னை அங்கே அழைத்துக்கொண்டு போகிறாயா. எத்தனை நாள் ஆச்சு. நமது ஊருக்கு நாம் போகவேண்டாமா. (என்று அழுகிறாள்.)

**தோழி**—அவருக்கு தயவுவந்தல்லவா ஆகவேண்டும் நீங்கள் அழுது என்னசெய்கிறது.

[குழந்தைகளையும் அவர் செய்கைகளையும் கண்ட வாகுகனாகிய நளனுக்குத் தன்னையறியாமல் வருத்தம் தோன்ற, அதனைப் பிறர் அறியாதபடி மறைக்கிறார். அப்படியும் அவரிடம் வருத்தம் புலப்படுகிறது.]

**தோழி**—ஸ்வாமீ! தாங்கள் யார்? ஏன் அழுகிறீர்கள்? இந்தக் குழந்தைகள் விஷயத்தில் தங்களுக்கு என்ன இவ்வளவு கருணை. எங்களுக்குத்தான் தமயந்தியின் துன்பத்தையும், அதைவிட இந்தக் குழந்தைகளின் துன்பத்தையும் பார்க்கிறதே வேலையாய்ப் போய்விட்டது. இன்றைக்குக் கணவர் வருவார் என்கிற ஒரு தைரியந்தான் பாக்கி. இன்றைக்கு அவர் வராவிட்டால் நாளைக்கு அவள் பாடு என்னவோ. அப்புறம் குழந்தைகளின் கதி நான் சொல்லவேண்டியதில்லை. தங்களுடைய வருத்தத்தைப் பார்க்கும்பொழுது இந்தக் குழந்தைகள் விஷயத்தில் இரக்கப்படத் தாங்கள் பாத்தியமுள்ளவர்கள் என்றே தோன்றுகிறது. தயவுசெய்து தாங்கள் யார் என்று சொல்லவேண்டும்.

**வாகுகன்** — நான் ஒரு தேர்ப்பாகன். சுயம்வரத்துக்கு வந்திருக்கும் அரசர்களில் ஒருவரோடு நான் வந்தேன்.

**தோழி**—என்ன, என்ன! சுயம்வரத்துக்கு வந்திருக்கும் அரசர்களா? ருதுபர்ணரைத் தவிர வேறு எந்த அரசராவது வந்திருக்கிறாரா? கண்ணுற் காணாததைத் தங்கள் வாக்கால் சொல்லக்கூடாது.

**வாகுகன்** — ஒருவர் வரலாம்; பலபேர் வந்திருக்கக்கூடுமென்று ஊகிக்கக்கூடாதா?

**தோழி** — அப்படி எண்ணவேண்டாம். ருதுபர்ணரை வரவழைத்த காரணம் வேறு. அது பரம ரகஸ்யம். அது தங்களுக்குத் தெரிந்திருக்குமானால் நளமகாராஜா தங்கள் கைக்குள் இருக்கிறார் என்பதில் தடையில்லை. தங்களையன்றி அவரை நாங்கள் காணப்போவதும் இல்லை. தாங்கள்தான் அவரை வெளிப்படுத்தவேண்டும்.

**வாகுகன்**—அவ்வளவு ரகஸ்யத்தை நான் எப்படி அறிவேன் அம்மா.

**தோழி**—நளமகாராஜருடைய தேரோட்டும் வித்தையையும் பாகம்செய்யும் வித்தையையும் தாங்கள் அறிவீர்களன்றோ?

**வாகுகன்** — அவ்விரண்டு தொழிலும் எனக்குத் தெரியுந்தான்.

**தோழி** — நளமகாராஜருக்கு அத் தொழில்களில் எவ்வளவு தேர்ச்சி உண்டோ அவ்வளவு தேர்ச்சி தங்களுக்கும் உண்டென்று எண்ணுகிறேன்.

**வாகுகன்** — இருக்கலாம்.

**தோழி**—இருக்கலாம் என்று தாங்கள் மையமாய்ச் சொல்லக்கூடாது. நளமகாராஜருக்கு எவ்வளவு தேர்ச்சி உண்டோ அதற்கு ஒருஅணுவாவது குறையவுஞ் செய்யாது. ஏறவுஞ் செய்யாது. அவ்வளவு கணக்காய்த் தங்களுடைய திறமையை நாங்கள் நம்பியிருக்கிறோம். இதுவிஷயத்தில் குழந்தைகளையும் ஏழைகளாகிய எங்களையும் வஞ்சிக்கக்கூடாது.—அப்படித்தானே? (என்று சற்றுப் புன்சிரிப்புக்கொள்ளுகிறாள்.)

**வாகுகன்**—(நாணத்தோடும் ஒருவகைப் புன்சிரிப்போடும் சற்று யோசித்து) உண்மைதான்.

**தோழி**—அவ்வளவு கணக்காய் அவர் திறமையைத் தாங்கள் உணரக்கூடுமானால், அந்த மகாராஜர் தங்களுக்குள் அகப்பட்டிருக்கிறார் என்பதில் தடையேயில்லை. தயவு செய்யவேண்டும். இனிமேலும் சோதனைசெய்யலாகாது. (அழுதுகொண்டு) இதுவும் பாழ்மண்டபமல்ல, பாதிராத்திரியல்ல.

(கீர்த்தனம்—ஸாவேரி, ஆதி.)

பல்லவி.

இன்னமும்சோதனைநீர் செய்யலாமோஎங்கள்ஸாமி
ஏழைகள்மனம்நொந்தால் இதுவிளையாட்டோஸாமி (இன்)

அநுபல்லவி.

பின்னமாய்நடுக்காட்டில் பிரிந்துபோனதுமன்றி
இன்னம்உம்மைமறைத்தால் இதுவோநீர்செய்யுநன்றி (இன்)

## சரணங்கள்.

1. பாதிராத்திரியில்நீர் சேதிசொல்லாமல்போனீர்
பார்த்துப்பிடிப்போமென்றால் பகல்வேஷம்போடலானீர்
நீதியோஉமக்கிது நேரிலேநின்றும்ஏன்நீர்
நினைவைவெளியிடாமல் நெஞ்சில்மறைக்கலானீர் (இன்)

2. உம்மையன்றிஅறியாத ஒருத்தியைவிட்டுச்சென்றீர்
ஒன்றியாய்எப்படிவந் தூர்சேர்வாள்அவள்என்றீர்
எம்முடைநேசமெல்லாம் எப்படிமறந்துவென்றீர்
இன்னம்எங்கள்துயர்காண இச்சைகொண்டோநின்றீர் (இ)

**வாகுகன்**—கேசினி! அழாதே. நீ குழந்தைகளைத் தேற்றிக்கொண்டிருக்கவேண்டியிருக்க நீயே அழலாமோ. உங்கள் நன்மையின்பொருட்டே இப்படியெல்லாம் செய்தேனேயொழிய வேறென்ன, வருத்தப்படாதே. இதோ என் வடிவத்தை மாற்றிக்கொண்டு வருகிறேன்

[என்று சற்று அப்புறம் போய்த் தன் வடிவத்தை மாற்றிக்கொண்டு நளசக்ரவர்த்தி வெளிப்படுகிறார்.]

**தமயந்தி**—(இவற்றையெல்லாம் மறைவிலிருந்து கவனித்துக்கொண்டிருந்தவள் உடனே வெளிப்பட்டுவந்து நளசக்ரவர்த்தியை வணங்கி, சிறிது வருத்தத்தோடு தோழியைச் சார்ந்து நிற்கிறாள்.)

**தோழி**—(நளனை நோக்கி) தாங்கள் இவள் வருத்தத்தைக் காணக்கூடாமல் அன்பினாலே பிரிந்தீர்கள் என்ற ஒரு தைரியத்தினாலேயே என் தோழி இத்தனைநாள் பொழுது போக்கிக்கொண்டிருந்தாள். ஆனாலும் இவள் துன்பத்தைக் கண்டு பொறுக்காமல் பெரியோர்கள் இவ்வாறு ஒரு ஏற்பாடு செய்தார்கள். அவர்கள் ஸங்கல்பத்தை அவர்களே முடித்தார்கள்.

[ஸுதாமர் வருகிறார்.]

**ஸுதாமர்**—(நளனை நோக்கி) வரவேண்டும் வரவேண்டும். தங்களுக்கு மாலை கிடைத்தாலும் கிடைக்கும் என்று அப்பொழுதே சொன்னேனே. (என்று சிரித்துக்கொண்டு சொல்லுகிறார்.)

**நளன்**—(நமஸ்கரித்து) பெரியோர்களால் ஆகாதது என்ன இருக்கிறது. எங்களுடைய க்ஷேமமெல்லாம் தங்கள் கைக்

குள் இருக்கிறது. தங்களுடைய ஆசீர்வாதத்தால் நாங்க ளெல்லாரும் இதுவரையில் ஸௌக்யமாய் இருந்தோம்.

[ருதுபர்ணர் வருகிறார்.]

**ருதுபர்ணர்**—மகாராஜா! எப்பொழுது விஜயம்செய்தது?

**நளன்**—தங்கள் கூடத்தான்—தேரோட்டிக்கொண்டு வந்தேனே.

**ருதுபர்ணர்**—மன்னிக்கவேண்டும். தங்களை அறியாமல் எவ்வளவோ அபசாரம் செய்திருப்பேன்.

**நளன்**—ஹாஹா! அப்படிச் சொல்லக்கூடாது. என்னைக் காப்பாற்றினவர் தாங்கள். நான் உண்டது தங்களுடைய அன்னம். இப்பொழுது பந்தயம் வைத்து ஆடப்போகிற பொருளும் தாங்கள் கொடுத்த ஸம்மானங்கள். ஆடுகிற ஆட்டமும் தங்களிடம் கற்றுக்கொண்டது. நான் இழந்த நாட்டை மீட்டுக்கொடுத்தவர் தாங்கள்தான். தங்கள் நன்றியை என் குலமே மறக்கக்கூடாது. தயவுசெய்து தங்கள் ஊழியத்தினின்றும் நான் விடுபட உத்தரவுகொடுக்கவேண்டும்.

**ருதுபர்ணர்**—அவ்வளவு வார்த்தை தாங்கள் சொல்லக் கூடாது. தாங்களும் நானும் நெடுநாளை நண்பர்கள். அதிக உபசாரம் வேண்டாம். போய்ச் சூதாடி நாட்டைக் கைப் பற்றி ஸுகமே யிரும். என்னுடைய நல்லகாலம் என்னிடம் வந்தீர். தேர்த்தொழில் நன்றாய் அறிந்தேன். தங்களுடைய நல்ல நிலைமையை என் கண்ணால் பார்க்கும்படி நேரிட்டதைவிட வேறு பாக்கியம் எனக்கு என்ன. இனித் தாமதம் வேண்டாம். இப்பொழுதே புறப்பட்டுப் போங்கள். நானும் போய்வருகிறேன்.

[பீமராஜர் வருகிறார்.]

**பீமராஜர்** — (நளனை நோக்கி) வரவேண்டும். எங்கு இத்தனை நாளாய்க் காணோம். தங்களுக்கு ஒருவர் தெரிவிக்க வேண்டிய விஷயம் ஒன்றுமில்லை. என் கண்ணாலே மறுபடி உங்களையெல்லாம் சேர்த்துப் பார்க்கும்படியான பாக்கியம் எனக்குக் கிடைத்தது. எல்லாம் தெய்வச்செயல்.

[எல்லாரும் போகிறார்கள்.]

பதினேழாவது காட்சி முற்றிற்று.

## பதினெட்டாவது காட்சி.

—oo:✽:oo—

**விஷயம்:** நளன் புஷ்கரனோடு மறு சூதாடி நாடு பெறுதல்.

**இடம்:** மாலிந்தநகரத்து அரண்மனையில் ஒரு மண்டபம்.

**பாத்திரங்கள்:** நளன், புஷ்கரன், கணக்குப்பிள்ளை, சேவகன், புஷ்கரனுக்குக் கொடிபிடிப்போன்.

[புஷ்கரராஜர் ஸபையில் வீற்றிருக்கிறார்.]

**சேவகன்**—மகராஜ்! மகாராஜா வந்திருக்கிறார்.

**புஷ்கரன்**—யார், நளமகாராஜாவா, வரட்டும்.

[நளன் வருகிறார். உடனே புஷ்கரன் எழுந்திருந்து]

வரவேண்டும் வரவேண்டும், கண்டு வெகுநாளாயிற்று. எல்லாரும் ஸுகமா?

**நளன்**—ஸுகந்தான். தாங்களும் ஸௌக்யந்தானே.

**புஷ்கரன்**—எல்லாரும் ஸௌக்யம். ஏதோ எல்லாம் தாங்கள் கொடுத்த பாக்கியம்.

**நளன்**—மறுசூது ஆடலாமோ.

**புஷ்கரன்** — ஆகா, பொருளிருக்கிறதோ. நான் அதற்குத்தானே காத்துக்கொண்டிருக்கிறேன்.

[என்று சொல்லி, பலகையைப் பரப்பி, பாய்ச்சிகைகளை நளன் கையில் கொடுக்கிறான். அவற்றை வாங்கிய நளன்]

**நளன்**—ஏன் தாங்களே ஆடலாமே.

**புஷ்கரன்**—மகாராஜா, அப்படியொன்றும் என்னை பேதமாக எண்ணக்கூடாது. ஆடவேண்டும்.

**நளன்** — முன்போலவே ஒருயானை முதல் கணக்கு எழுதிவரச் சொல்லும்.

**புஷ்கரன்**—ஆகா, அப்படியே செய்யட்டும்.

[உடனே கணக்குப்பிள்ளை வந்து எழுதத் துவக்கிவிட்டார். கொடி பிடிப்போனும் கொடியைப் பிடித்துக்கொண்டு புஷ்கரன் பக்கத்தில் நிற்கிறான். நளபுஷ்கரர்கள் ஆடுகிறார்கள்.]

**புஷ்கரன்** — பேஷ், பிள்ளையார் ஆட்டம் தங்களுக்கே ஜயம். முன் தடவையும் முதலாட்டம் தங்களுக்குத்தான் ஜயம்.——இதுவும் தங்களுக்குத்தான்.——ஓகோ! இதுவும் தங்களுக்குத்தானா! என்ன மகாராஜா, ஆட்டத்தில் மிகுந்த சுறுசுறுப்பா யிருக்கிறீர்களே! இவ்வளவு தேர்ச்சியும் என்னாலே வந்ததென்று அறிந்துகொள்ளுங்கள். இப்பொழுதாவது என் வார்த்தையில் நம்பிக்கை வந்ததா. எப்படியாவது இந்த ஆட்டத்தின் மகிமையை யாவரும் அறியவேண்டுமென்பது என்னுடைய கோரிக்கையேயொழிய எனக்குப் பொருள் ஒரு லக்ஷிய மல்ல.

**நளன்**—இருக்கட்டும், மேல் ஆடுகிறேன்.

**புஷ்கரன்**—ஆஹா! இதுவும் தங்களுக்கு.—— இதுவுந்தான். —— இதுவுந்தான். —— பேஷ், இதுவுந்தான். —— பேஷ், மிகுந்த ஸந்தோஷம், இதுவும் தங்களுக்குத்தான். எப்படியாவது தங்கள் தேர்ச்சியைத்தான் நான் விரும்பினது. மகாராஜா! போதும். தங்களை வெல்ல என்னால் இல்லை. எல்லாம் தங்களுடையவை. மன்னிக்கவேண்டும். போய் வருகிறேன் (என்று எழுந்திருக்கிறான்.)

[அப்பொழுது **கொடிபிடிப்போன்** தன் எஜமானனது தோல்வியைக் கண்டு மெள்ள அவ்விடத்தினின்றும் நழுவிவிட்டான்.]

**நளன்**—(புஷ்கரனை நோக்கி) அவ்வளவு அவசர மென்ன, இன்று இருந்துவிட்டுப் போகலாமே.

**புஷ்கரன்** — (போய்க்கொண்டே) அதனால் பாதகமில்லை, போய்வருகிறேன். (சற்றுத் தயங்கி நின்று) போய்வரட்டுமா, உத்தரவுதானே, என் நாடுகூட இதில் தங்களுக்குச் சேர்ந்திருக்கிறது. அதனாலென்ன, ஆட்டமென்றால் அப்படித்தான் இருக்கும். — தங்களுடைய இஷ்டம். — போய்வரட்டுமா. (முகம் வாடியிருக்கிறது.)

**நளன்**—தம்பி! வருத்தப்படவேண்டாம். உமது நாட்டை நீரே எடுத்துக்கொள்ளும். இந்த ஆட்டத்தின் ஸம்பந்தம் அவ்வளவோடு போகட்டும். ஆனால், உம்மால் ஒரு காரியம் ஆகவேண்டும்.

**புஷ்கரன்**—உத்தரவானால், கூடுமானால் செய்கிறேன்.

**நளன்**—தங்களால் கூடிய காரியந்தான். தாங்கள் செய்ய வேண்டியதே அதில் இல்லை. செய்யாமலிருப்பதுதான்.

**புஷ்கரன்**—மகாராஜா, அதென்ன, உத்தரவாகவேண்டும்.

**நளன்**—இந்தச் சூதாட்டத்தை இனிமேல் ஆடுகிறதில்லை என்று உறுதிமொழி கொடும்.

**புஷ்கரன்**—(சற்று யோசித்து) மகாராஜா, உத்தரவுப்படி நடந்துகொள்ளுகிறேன். இதனால் எனக்குமாத்திரம் க்ஷேமமல்ல. உலகத்துக்கே க்ஷேமம். எத்தனையோ பட்டாண்டியாக்கி யிருக்கிறேன்.

மகாராஜா, தங்களுடைய பெருந்தன்மையும் லோகோபகாரமும் என்னவென்று சொல்லுவேன்! மன்னிக்கவேண்டும்.

**நளன்**—போய்வாரும். உம்முடைய நாட்டை நீரே ஆண்டுகொண்டு பழையபடி நமக்குச் சிற்றரசரா யிரும். உறுதிமொழி தப்பவேண்டாம். ஜாக்கிரதை.

**புஷ்கரன்**—உத்தரவுப்படி நடந்துகொள்ளுகிறேன் மகாராஜா! போய்வருகிறேன்.

[புஷ்கரர் போகிறார்.]

பதினெட்டாவது காட்சி முற்றிற்று.

# பத்தொன்பதாவது காட்சி.

**விஷயம்:** அரண்மனைச் சேவகனுக்கும் புஷ்கரனுடைய கொடி பிடிப்போனுக்கும் தர்க்கம்.

**இடம்:** மாவிந்தநகரத்தில் நளபுஷ்கரர்கள் மறுசூது ஆடிய மண்டபத்தின் வெளிவாயில்.

**பாத்திரங்கள்:** சேவகன், புஷ்கரனுடைய கொடிபிடிப்போன்.

---

[கொடிபிடிப்போன் வெளிவாயிலைத் தாண்டிப் போகும்போது]

**சேவகன்**—என்ன அண்ணே! இவ்வளவு சீக்கிரம் புறப் பட்டு!

[என்று, நயமாய்ச் சொல்லுபவன்போல அவன் கிட்டப்போய் அவன் கையில் பிடித்திருந்த கொடியைச் சரேலெனப் பிடுங்கிக் கொண்டு, பிறகு கடுமையாய்ச் சொல்லுகிறான்.]

போக்கிரிப் பசங்களா! இனிமேல் இந்த வழி வாருங் கள் சொல்லுகிறேன்.

**கோடிபிடிப்போன்** — என்னடா இப்பொழுது நாங்கள் செய்துவிட்டோம்? திருட்டுப் புரட்டுப் பண்ணிவிட்டோமா, பொய்யைப் புளுகைச் சொல்லிவிட்டோமா?

**சேவகன்**—பொய்சொல்லுகிறது இன்னும் வேறு இருக் கிறதா! உங்கள் எஜமான்தான் பாட்டுக்கூடப் பாடிவிட்டாரே, சூதாட்டம் மிகவும் நல்லதாம், ஒரு கெடுதலும் இல்லையாம்!

**கோடிபிடிப்போன்** — அடே, வெறும்பேச்சுப் பேசாதே. பாட்டைச் சொல்லு பார்ப்போம்.

[சேவகன் யோசிக்கிறான்.]

ஏண்டா கஷ்டப்படுகிறாய். நானே சொல்லுகிறேன் கேட் டுக்கொண்டுவா.

"உலகத்தின் துன்ப மெல்லாம் ஒருங்குற வீட்டி இன்பம்
அலகிலா தளிக்கும் இந்த ஆட்டத்தி லமர்ந்து விட்டால்
பலபல தவங்கள் செய்த பக்குவ ஞானி யர்க்கும்
இலகிலா நிராசை யெல்லாம் இப்போதே காண லாமே."

இதுதானேடா முதல் பாட்டு. இதற்கு என்ன அர்த்தம் தெரியுமா.

"உலகத்தின் துன்பமெல்லாம் ஒருங்குற வீட்டி" என்றால் எல்லாத் துன்பமும் போய்விடும் என்று எண்ணிக்கொண்டாயோ. "ஒருங்குற வீட்டி" அல்ல. "ஒருங்குற ஈட்டி" என்று பிரித்துக்கொள். 'ஈட்டி' என்றால்—சேர்த்து. உலகத்திலுள்ள துன்பம் எல்லாவற்றையும் ஒரே அடியாய்க் கொண்டுவந்து சேர்க்கும் என்று சொல்லியிருக்கிறது. இதில் என்னடா பொய்? உனக்குப் பதம் பிரிக்கத் தெரியவில்லை.

சேவகன்—இருக்கட்டும், பாக்கிக்கும் அர்த்தஞ்சொல்லு பார்ப்போம்.

கோடிபிடிப்போன்—"இன்பம் அலகிலா தளிக்கும்" இன்பத்தை அளவில்லாமல் கொடுக்கும் — என்றால் இன்பம் நிறைய வந்துவிடும் என்று எண்ணிக்கொண்டாயோ. அலகு இலாது, அளவு இல்லாமல் — அதாவது இன்பத்திற்குச் சிறிது அளவும் இல்லை; அதாவது இன்பமே இல்லை என்பது கருத்து. தெரிந்ததா?

சேவகன் — அப்புறம்.

கோடிபிடிப்போன்—"பலபல தவங்கள் செய்த பக்குவ ஞானியர்க்கும், இலகிலா நிராசை யெல்லாம் இப்போதே காணலாமே" என்றால் என்ன எண்ணிக்கொண்டாய்! மகாரிஷிகளாய்ப்போய்விடலாம் என்று எண்ணிக்கொண்டாயோ? கையிலிருக்கும் காசெல்லாம் போய்விட்டால் தானுகவே நிராசை வந்துவிடுகிறது, வேறென்ன.

சேவகன்—இருக்கட்டும், அடுத்த பாட்டையும் சொல்லு பார்ப்போம்.

கோடிபிடிப்போன்—

"பிறப்பினோ டிறப்பு மூப்பென்
றிவையெலாம் பிரிந்து போன
துறக்கத்தி லிருப்பார் போல
ஒன்றுமே தோன்று தையா"

என்றால் என்ன அர்த்தம். தேவர்களாய்ப் போய்விடலாம் என்று எண்ணமோ? தேவர்களுக்கு—பிறப்பு, பிணி, மூப்பு, சாவு—ஒன்றும் கிடையாது. இந்த ஆட்டத்தில் உட்கார்ந்து விட்டால் இவனுக்கும் — பிறப்புவருமே, பிணிவருமே, மூப்புவருமே, சாவுவருமே — என்கிற யோசனையே கிடை யாது. தேவர்களுக்கு சுபாவத்திலேயே — பசி, தாகம், தூக்கம் — ஒன்றும் கிடையாது. இவனுக்கோ — பசியா, தாகமா, தூக்கமா—ஒன்றுமே தோணுது. தெரிந்ததா அப்பா.

சேவகன்—இருக்கட்டும். பாக்கிக்கும் பொருள் சொல்லி முடியும்.

கோடிபிடிப்போன்—"சிறப்புள இந்த வாட்டச்சீரெலாம்"

சிறப்புள்ள இந்த ஆட்டம்— என்ன சிறப்புத் தெரியுமா? இழிவுசிறப்பு. இந்த ஆட்டச்சீரெலாம் — என்று எண்ணிக் கொண்டாயோ? சேர்த்துச் சொல்லிப்பார் தெரியும். இந்த வாட்டச்சீரெலாம் — இந்தச் சூதாட்டத்தால் உண்டாகும் "வாட்டத்தினுடைய" அதாவது கஷ்டத்தினுடைய சீரை யெல்லாம். 'சீர்' என்றால் பாரம், அதாவது மிகுதி. ஆகவே, இழிவுள்ள இந்த வாட்டத்தினுடைய மிகுதியையெல்லாம் என்று அர்த்தம்.

"இந்த வாட்டச்சீரெலாம் செப்பவென்றால், மறப்பன் றோ தடுக்கும்"—மறப்பன்றோ தடுக்கும் என்றால், மறந்து போகும்படி அவ்வளவு மிகுதியான நன்மை என்று எண்ணி னையோ, அவ்வளவு மிகுதியான தீமை.

சேவகன்—அப்புறம்.

கோடிபிடிப்போன்—"நீர்தான் மறுத்திடா தாடு வீரே"— உங்கள் எஜமானனை ஆடக் கூப்பிட்டுவிட்டார் என்று உங்க ளுக்கெல்லாம் எண்ணம். 'மறுத்திடா தாடு வீரே' — ஏகா

ரம் எதிர்மறை. மறுத்துவிடாமல் ஆடிவீரா, மறுத்துவிடுங்கள் ஆடவேண்டாம் என்று சொன்னார். உங்களுக்கு அர்த்தம்பண்ணிக்கொள்ளத் தெரியாவிட்டால் யார்பேரிலடா வருத்தப்படுகிறாய்?

**சேவகன்**—அப்படியா! இது ஒரு தந்திரம் வைத்திருக்கிறீர்களா!

**கோடிபிடிப்போன்**—(சற்று மெதுவான குரலுடன்) ஏனடா ஆத்திரப்படுகிறாய். உங்கள் எஜமானனுக்குப் புத்தி கொஞ்சம் மட்டு, நம்முடைய எஜமானனுக்கு மனது கொஞ்சம் கெடுதல். வேறென்ன. இப்பொழுது எல்லாம் சரியாய்ப் போய்விட்டது. எல்லாம் நல்லகாலத்துக்குத்தானடா.

**சேவகன்**—ஸரி ஸரி. நீங்கள் மகாயோக்யர்கள், மகா அயோக்யர்கள்; (மகா + அயோக்கியர்கள் = மகாயோக்கியர்கள்) போய்விட்டுவா நுங்கள் அப்பா.

**கோடிபிடிப்போன்**—என்ன, அதுக்குள்ளே நம்மகிட்டக் கற்றுக்கொண்டுவிட்டாற்போல இருக்கிறது.

[என்று சொல்லிக்கொண்டே போகிறான்.]

பத்தொன்பதாவது காட்சி முற்றிற்று.

## இருபதாவது காட்சி.

**விஷயம்:** 1. நளசக்ரவர்த்தி பழையபடி அரசாளத் தொடங்குதல்.
2. பெரியோர்கள் ஆசீர்வதித்தல்.

**இடம்:** மாவிந்தநகரத்து அரண்மனையில் ஸபாமண்டபம்.

**பாத்திரங்கள்:** நளன், மந்திரி முதலிய உத்யோகஸ்தர்கள், புரோகிதர் (அச்சுதர்), பெரியோர்கள், தமயந்தி, குழந்தைகள் (இந்திரஸேனன், இந்திரஸேனை), பாடகர்கள்.

[நளசக்ரவர்த்தி மந்திரி முதலிய உத்யோகஸ்தர்களோடு ஸபையில் வீற்றிருக்கிறார்.]

புரோகிதர்—(பழைய வழக்கப்படியே வந்து கடவுள்வாழ்த்துச் சொல்லிப் போகிறார். இதனை முதற்காட்சியிற் கண்டுகொள்க.)

**நளன்** — மந்திரிகளே! குடிகளெல்லாம் நாம் இல்லாத காலத்தில் எப்படியிருந்திருக்கிறார்களோ தெரியவில்லை. அவர்களுடைய சில குறைகள் தீர்க்கப்படாமல் இருப்பினும் இருக்கும். நீங்கள் மந்திரிகளாக இருந்தபோதிலும், என்னிடம் நாடு கவர்ந்த ஒரு அரசனை வைத்துக்கொண்டுதானே நடத்தவேண்டியிருந்தது. “மன்னவன் எப்படி மன்னுயிர் அப்படி.” இனிமேல்தான் அக் குறைகளெல்லாம் நன்கு வெளிப்படும்.

நீங்கள் தக்க முயற்சி எடுத்துக்கொண்டு நமது நாட்டையும் குடிகளையும் பழைய நிலைமையில் வைக்கவேண்டும். நம்முடைய முயற்சிகளுக்கெல்லாம் கடவுள் திருவருள் புரிவாராக.

**சேவகன்** — மகாராஜ்! பெரியோர் வந்திருக்கிறார்கள்.

**நளன்** — வரட்டும்.

[பெரியோர்கள் வருகிறார்கள். எல்லாரும் எழுந்திருக்கிறார்கள்.]

**நளன்** — (எதிர்கொண்டு சென்று) நமஸ்காரம், வரவேண்டும் வரவேண்டும்.

[என்று சொல்லிக்கொண்டே அவர்கள் கொடுக்கும் காணிக்கைகளை வாங்கிக்கொள்ளுகிறார். பெரியோர்கள் ஆசீர்வாதம் செய்து உட்கார, எல்லோரும் உட்காருகிறார்கள்.]

**பெரியோர்களில் ஒருவர்**—மகாராஜா! தங்களைக் கண்டதனால் எங்களுக்கெல்லாம் உண்டான மகிழ்ச்சி சொல்லிமுடியாது. குடிகளெல்லாம் மேகத்தைக்கண்ட பயிர்போலத் தங்களுடைய செங்கோலுக்குக் காத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் உங்களையெல்லாம் கண்டு ஆசீர்வதிக்க வந்தோம்.

[என்று சொல்லவும், நளமகாராஜர் குறிப்பின்படி தமயந்தியும் குழந்தைகளும் வர, நளனும் பெரியோர்களும் ஒழிந்த மற்றவர்கள் எழுந்து மரியாதை செய்கிறார்கள். அப்பொழுது பெரியோர்களுள் ஒருவர் எழுந்து தமயந்தியையும் குழந்தைகளையும் நோக்கி]

**பெரியவர்**—அம்மா, உட்காரவேண்டும். குழந்தைகளே, உட்காருங்கள்.

[என்று சொல்ல, தமயந்தி சக்ரவர்த்தியின் இடதுபக்கத்தில் போடப்பெற்ற ஸிம்மாஸனத்தில் உட்காருகிறாள். குழந்தைகளும் அவ்விருவர்பக்கத்திலும் அமைக்கப்பெற்ற இரண்டு பீடங்களில் அமருகிறார்கள். அப்பொழுது பெரியோர்களெல்லாரும் எழுந்து புஷ்பங்களைத் தூவி ஆசீர்வதிக்கிறார்கள். அப்பொழுது]

**ஒரு பெரியவர்**—மகாராஜா! தங்கள் கீர்த்தி உலகமுள்ள அளவும் நிலைநிற்கவேண்டும் என்பதற்காகக் கடவுள் இப்படிப்பட்ட ஒரு திருவிளையாடலைச் செய்தாரேயொழிய வேறு காரணம் தங்களிடத்தில் இல்லை.

உங்களையெல்லாம் இந்த நிலைமையில் மறுபடி பார்க்கும்படி செய்த கடவுள் திருவருள் வாழ்க! எல்லோருக்கும் மங்களம் உண்டாகட்டும்! எங்கள் சக்ரவர்த்தி நீடூழி வாழ்க!

[எல்லாரும் உட்காருகிறார்கள். பாடகர்கள் மங்களம் பாடுகிறார்கள்.]

**பாடகர்கள்:** (கீர்த்தனம்—சுருட்டி, திரிபுடை.)

பல்லவி.

மங்களம் மங்களம் மங்களம் — மகாராஜர்க்கு
மங்களம் மங்களம் மங்களம்.

**அநுபல்லவி.**

மங்களம் மங்களம் எங்கள் மகாராஜபூபருக்கு
மங்களம் மங்களம் எங்கள் மங்கைப்ரதாபருக்கு (மங்)

**சரணங்கள்.**

1. மாதம் மும்மாரிபெய்யவே — மதிக்குடைக்கீழ்
மகிழ்ந்துஎவரும்உய்யவே—
தீதில்லாமல்பயிர்கள் தேசத்தில்செழிக்கவே
சிறந்தமணியும்பொன்னும் திவ்யமாய்க்கொழிக்கவே (மங்)

2. நல்லோர்கள்என்றும்வாழ்கவே — நம்மையாளும்
நல்லரசரும்வாழ்கவே—
எல்லாம்வல்லஇறைவன் இணையடிவாழ்கவே
இந்தப்புவியில்அவன் அருளால்நாமும்வாழ்கவே (மங்)

இருபதாவது காட்சி முற்றிற்று

நாடகம் முற்றிற்று.

# முதற்குறிப்பு.

[பின்னாக வரும் எண் காட்சியின் எண்.]


**செய்யுள்.**

1. உலகெலாம்படை, 1.
2. எத்தனைதான்கைகால், 1.
3. எளியார்க்கிரங்கு, 1.
4. அலகிலாஉலகு, 2.
5. இத்தனை அரசர்கள், 2.
6. உலகத்தின் துன்பம், 6.
7. பிறப்பிேனாடிறப்பு, 6.
8. நூலெலாம்கற்று, 6.
9. எனக்குநேர்ந்த, 6.
10. இந்தவோருலகம், 8.
11. உலகெலாஞ்சுழல், 8.
12. அழிகின்றபொருள், 8.
13. ஈதெலாம்எனக்கு, 8.
14. காட்டிலேயென்றன், 9.
15. கண்ணேயென், 14.
16. மண்கலந்தவாழ்வை, 14.
17. வாளுடர்கோவை, 14.
18. என்னையேநாடி, 14.

**கீர்த்தனம்.**

1. தெய்வமேஅருள்செய், 2.
2. கல்யாணமே, 4.
3. லாலிலாலைய, 4.
4. நன்மைவாழ்க, 5.
5. இந்தஆட்டம்வேண்டாம், 6.
6. என்னைநம்பியிருந்த, 8.
7. ஐயோநானென்ன, 9.
8. என்வீட்டுக்குவந்து, 11.
9. உம்மைநம்பியிருந்த, 12.
10. பாவஞ்செய்யாதிரு, 13.
11. கண்கள்துடிக்கின்றதே, 16.
12. இன்னமும்சோதனை, 17.
13. மங்களம், 20.

# அரும்பதவுரை

## காட்சி—1.

**உலகெலாம்படை** — *தனி - ஒப்பற்ற. அலகிலா - அளவில்லாத. அமுது - உணவு. மிகும் உயிர் - பலவாகிய உயிர். துங்கம் - பரிசுத்தம். தேவே - தெய்வமே. களை - இளைப்பு.*

**எத்தனைதான்** — *இரும்பால் பிணிக்கினும் - இரும்பு விலங்குகளால் கட்டினாலும். ஸந்ததமும் - எப்பொழுதும்.*

**எளியார்க்கிரங்கு** — *களி - மகிழ்ச்சி. வான் விழுங்கும் தெய்வம் - ஆகாயத்திலும் பெரிதாகிய தெய்வம்.*

## காட்சி—2.

**அலகிலாஉலகு**—*இலக-விளங்க. நிமலன்-பரிசுத்தமுள்ளவன். சார-அடைய.*

**இத்தனைஅரசர்கள்**—*பித்தி - பித்தன் என்பதன் பெண்பால். கர்த்தனே - கடவுளே.*

**தெய்வமேஅருள்செய்**—*கைதவம்-வஞ்சனை.*

## காட்சி—4.

**கல்யாணமே**—*வைபோகம் - ஸந்தோஷம். ப்ரதாபன் - வெற்றியை உடையவன். சந்த்ரகுல தீபன் - சந்திரகுலத்தை விளங்கச் செய்பவன் (நளன் சந்திரவம்சத்து அரசன்.) பூபன்-அரசன்.*

**லாலிலாலைய**—*ஞானபோதன் - ஞானத்தை அறிந்தவன். நீதன் - நீதியை யுடையவன். மதி-சந்திரன். நுதல்-நெற்றி. (பெண்களின் நெற்றியை எட்டாம்நாள் சந்திரனுக்கு ஸமானமாகச் சொல்லுவார்கள்.)*

## காட்சி—6.

**உலகத்தின்துன்பம்** — *ஒருங்குற - அடியோடு. வீட்டி - அழித்து. இலகிலா - விளங்காத, உண்டாகாத.*

**பிறப்பினொடிறப்பு** — *பிரிந்துபோன - இல்லாத. துறக்கம் - தேவலோகம்.*

**நூலெலாங்கற்று**—*நுண் உணர்வு - சூட்சும புத்தி. சால - மிகவும். ஏலும் - பொருந்திய. போமின் - போங்கள்.*

## காட்சி—8.

**இந்தவோருலகம்** — *அந்தரம் – ஆகாசம்.*

**உலகேலாஞ்சுழன்ற**—*பரிதி–சூரியன். தகர்தல்–உடைதல். விசும்பு– ஆகாசம். தவிரலாமோ – மறக்கலாமோ.*

**ஈதேலாமெனக்கு** —*இசைத்தல்–சொல்லுதல். இப்போது+யாதும்= இப்போதியாதும். போதுவீர் – வாருங்கள்.*

## காட்சி—9.

**காட்டிலேயேன்றன்**—*கேட்டிலேநின்றும்–கெடுதியினின்றும். கிளி- தமயந்தி (கிளிபோன்றவள்).*

**ஐயோநான்என்ன** —*உய்வேன் – பிழைப்பேன். நனவு – ஜாக்ரம், விழிப்பு. நினைவில் – மனதில்.*

## காட்சி—11.

**என்வீட்டுக்குவந்து**—*இல்லாட்டா – இல்லாவிட்டால்.*

## காட்சி—13.

**பாவஞ்செய்யாதிரு**—*நீசமாம் – தாழ்வான. உளவாய் – யுக்தியாய்.*

## காட்சி—14.

**கண்ணேயேன்**—*உண்ணோய்கள்–(உள்+நோய்கள்)மனத்துன்பங்கள்.*

**மண்கலந்தவாழ்வை** — *எண்கலந்த – கவலையோடுகூடிய. போந்தேனே – வந்தேனே. பண் – (இசைப்பாட்டு) இனிமை.*

**வானுடர்கோவை**—*வானுடர்கோ–இந்திரன். நிழல்–ஒளி. ('இந்திரனை மதிக்காமல்' என்றால் இந்திரன் முதலியவர்களிலும் மேலாக நளனை மதித்து என்பது பொதுவான கருத்து. இது இந்திரன் சுயம்வரத்துக்கு வந்திருந்தான் என்னும் புராண கதையையும் ஒருவாறு குறிப்பிக்கின்றது.)'*

## காட்சி—16.

**கண்கள் துடிக்கின்றதே**—*துடிக்கின்றது – விரைகின்றன, மிகுந்த ஆவல் கொள்ளுகின்றன.*

*அரும்பதவுரை முற்றிற்று.*

## விதூஷகன்.

இவன் நாடகத்தில் ஸபையோருக்கு ஹாஸ்யம் (சிரிப்பு) உண்டாக்க ஏற்பட்ட ஒரு வேஷதாரி. இவனை **விகடகவி** என்றும் சொல்வர். இவன் செய்கைகளும் பேச்சுக்களும் சரித்திரம் நடந்த ஆதிகாலத்தில் நிகழ்ந்திருக்கவேண்டுமென்பது இல்லை; நிகழ்ந்தி ந்தால் பெரிய தவறு என்று சொல்லத்தக்கவைகள்கூட உண்டு. இவன் நடிக்கவேண்டியவை பெரும்பாலும் இவன் திறமையைப் பொறுத்தவைகளாய், ஸமயோசிதமாய் இவனாலேயே தெரிந்துகொள் ளப்படவேண்டியவைகளாய் இருக்கின்றன.

**உதாரணமாக:** — முதற்காட்சியில் ரிஷிகள் விடைபெற்றுப் போகையில், "சில ரிஷிகள் வருகிறது, பெண்டாட்டியை விட் விடு பிள்ளையை விட்டுவிடு என்கிறது; இந்த மாதிரி கல்யாண செய்துவைத்தா லல்லவோ நல்லது" என்று சொல்லலாம். ஐந்தா வது காட்சியின் கடைசியில் இந்திரஸேனையை நோக்கி, "அம்மா! வயசுக்ாலத்தில் என்னை வைத்துக் காபபாற்றவேண்டியது தங்க ளுடைய கடமை; ஞாபகமிருக்கட்டும்" என்று சொல்லலாம். பதின் மூன்றாவது காட்சியில் தொழிலாளிகள் பேச்சு முடிகையில் இவனும்,

"நானும்ஓர்தொழிலாளி தம்பி—இந்த
நானிலத்தில்என்னைக் கண்டால்சிரிபபார்
நீயும்என்வித்தையைக் கண்டால்—இந்த
நிமிஷமேசிரிபபா சிரிபபாய்என்தம்பி
தனதந்திநாதந்தி நானு"

என்று பாடலாம். இவ்வாறே பிறவும் காண்க.

**நன்மை வாழ்க.**

S. P. C. K. Press, Vepery, Madras—1912.